www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 10/00

டிச.11-17,1994

දිනමුරසු වාරමලර්

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 80



## பிரபாவைக் கொல்ல இந்தியச் சதி?

தகவல் உண்மையா?

## இந்தியா சொல்வதை சந்திரிக்கா கேட்பாரா?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

சிங்காரமான

சி
னி
வி
சி
ட்



## போலிச்சாமியாரின் திரைமறைவு வேலைகள்

சுடச்சுட சில தகவல்கள்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## ஆதார வெளிச்சத்தில்

அன்புடன் உங்களுக்கு,
வணக்கம்.
அரசியல் தொடருக்கு
அமோகமான வரவேற்பு கிடைத்திருப்பதில்
முரசுக்கு மகிழ்ச்சி!

யார் மீதும் அவதூறு வீசுவது
முரசின் நோக்கமல்ல.
ஆதார வெளிச்சத்தில்
கடந்த கால
இரத்தம் தோய்ந்த வரலாற்றின் பக்கங்கள்
புரட்டிக் காட்டப்படுகின்றன.

எவரும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களல்ல.
இந்திய சுதந்திரப்போரின்போது
காந்தி கூட கண்டிக்கப்பட்டிருக்கிறார்-
வேகம் போதாது என்று
விடுதலை வீரர்களால் விமர்சிக்கப்பட்டிருக்கிறார்.

இந்திய சுதந்திரம்-
அகிம்சைவாதிகளின் சாதனை மட்டுமே
என்று ஒப்புக்கொள்வது
ஒரு பொய்யை வழி மொழிவது மாதிரியானது.
அகிம்சை வாதிகளும் காரணம் என்பது சரி;
அவர்கள் மட்டுமே காரணம் என்பது பொய்!

அப்படித்தான்-இங்கும்
தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்திலும்
அகிம்சைவாதிகளும் உதிரம் சிந்தினார்கள்;
ஆயுதப் போராளிகளும் உதிரம் கொட்டினார்கள்.

இந்த நிகழ்வுகளுக்கிடையே
வெளியே தெரியாத சோகங்கள்,
வெட்ககரமான துரோகங்கள்
அவ்வப்போது தலை தூக்கியிருந்தன.

அவை வெளியே வெளிச்சமாவது
எதிர்காலத்தில் மீண்டும்
துரோகங்கள் தோன்றுவதை தடுக்கும்.

போராடியவன் யாரோ-
அவன் பெயரே தெரியாது.
போராட்டத்தின் பெயரால் பிரபலமானவர்கள்
பெயர்கள் மட்டுமே நமக்குத் தெரிகிறது.
அதனால்தான் சம்பந்தப்பட்டவர்களை
பாதிக்காது என்று தெரிந்தால் மட்டும்
சில சம்பவங்கள் சொல்லப்படும்போது
பங்குகொண்டவர்கள் பெயர்களும் தரப்படுகின்றன.

தற்போது இயக்கத்திலிருந்து விலகி
தனிப்பட்ட வாழ்வில்
கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ள
சிலர் முரசோடு தொடர்புகொண்டு
தமது பெயர்களை
வெளியிட்டுவிட வேண்டாம் என்றனர்.

நிச்சயமாக முரசு அப்படிச் செய்யாது.
துரோகங்களை சுட்டிக்காட்டுமே தவிர
தூயவர்கள் சிக்கலில் மாட்டிக்கொள்ள
முரசு காரணமாய் அமையாது.
அந்த நண்பர்கள் நம்பலாம்!

முந்நூறு ரூபாய் கடன் கேட்டார்
ஒரு முக்கிய போராளி.
முடியாது போ என்றுவிட்டார்
ஒரு மூத்த தலைவரின் துணைவி.

போராளி கடன் கேட்டது
வாழ்வை வளப்படுத்தவல்ல;
வயிற்றுப் பசிக்கு!
பசி தீர்ந்தால் உயிர் வாழலாம்;
உயிர் வாழ்ந்தால்தான்
தொடர்ந்து போராடலாம் என்பதற்காக!

அந்த போராளி
பட்டினி கிடந்து நோயில் மடிந்தார்.
'எங்கள் கட்சியின் உதிரம் அவர்'
'செம்மல் அவர்' என்றெல்லாம்
செத்தபின் புகழ்ந்தார்கள்.
இது கொடுமையல்லவா?

இவற்றை வெளிப்படுத்த
முரசு களம் தருவது
தவறென்று எவர் சொல்ல முடியும்?

அதனைப் பொய்யென்று சொல்ல
எவர் துணிவர்?
மடிய முன் அந்தப் போராளி
தன் கையெழுத்தால்
பதிவு செய்த குறிப்புண்டு- முரசிடம்!

இவற்றையெல்லாம் வெளிச்சமாக்காவிட்டால்-
திரைமறைவில் செய்தால்
துரோகங்கள் தொடர்ந்து மறைந்திருக்கும்
என்ற துணிச்சல்
தொய்வின்றி வளருமல்லவா?

அது கூடாது என்பதுதான்
அரசியல் தொடரின் நோக்கம்!
தன்னலம் பாதிக்கப்படுகிறதே என்று சிலர்
தம் முகம் சுளித்தால்
அதற்காக வரலாற்றின் வாயை
நிரந்தரமாக மூடிவைத்தல் முறையோ?
முறையல்ல என்பது முரசின் கருத்து.

□□

ஒரு சுவாரசியமான சங்கதி-
முரசின் கவிதைப் போட்டி 60இற்கான
பரிசுக்குரிய கவிதையாக வந்ததை
பத்திரமாக திருடி அனுப்பி
கவிதைப் போட்டி 75இற்கான
பாராட்டுப் பெறும் தகுதி பெற்றார் ஒரு வாசகர் (?)

சரியாக கவனிக்காதது நம் தவறுதான்.
முதலில் கண்டுபிடித்து சொன்னவர்
அக்குறணை வாசகி ஷியானி நளீர்.
மேலும் பல வாசக நெஞ்சங்களும்
கில்லாடித்தனத்தை சுட்டிக்காட்டியுள்ளனர்.
குற்றம் கில்லாடி வாசகர் மீதுமட்டுமல்ல
தவறு நம்மீதும் அல்லவா?

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

# ஆன்மீகம்



## அறுப்புக் காலம்

பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது அதனுடன் களைகளும் காணப்பட்டது. களைகளை நாம் பிடுங்க எத்தனிக்கையில், அதனோடே பயிரும்கூட அசைக்கப்படுகின்றது. அதேபோல்தான் பாவ உலகில் குடியிருக்கும் வாலிபராகிய நாமும் தவறான உறவுகளுடன் சேர்ந்துவிடுகின்றோம். தேவனின் சரியான நோக்கத்தை அறிந்து, அந்த உறவை துண்டிக்க நினைக்கையில் அசைக்கப்பட்டு மிகுந்த வேதனைக்கு உள்ளாகின்றோம். மற்றவர்களைப் பார்க்கிலும், கர்த்தரை அறிந்து அவரை ஏற்றுக்கொண்ட அநேக வாலிபர்கள் இவ்வாறு பாவப் பாதையில் செல்வது எவ்வளவு துன்பமான காரியம். தேவ பிள்ளையே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உன்னையும் என்னையும் இன்னும் அநேகரையும் இரட்சிக்க வல்லவராய் இருக்கின்றார். எனவே பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகி கர்த்தரை பற்றிக் கொள். அறுப்புக்காலம் மட்டும் வளரவிடப்படும் களைகளைப் போல எதிரியானவன் நம்மைவிட உயர்ந்தாலும், அவனையும் நண்பனாய் கருதி பொறுமையோடே காத்திருப்போம்.

(மத்தேயு 13ம் அதிகாரத்திலிருந்து)

வி.சாந்தினி-கொழும்பு-07.

## மறை வழங்கும் தத்துவ மொழிகள்

01. ஏ மனிதனே! எல்லா சிருஷ்டிகளும் என்னைத் தேடுகின்றன. ஆனால் நானோ உன்னைத் தேடுகிறேன். நீயோ வஸ்துக்களையல்லவா தேடிக்கொண்டிருக்கிறாய். என இறைவன் அருளியதாக நபியவர்கள் இயம்பினார்கள்.

(ஹதீஸ் குத்ஸி)

02. மனிதன் இறைவனின் கட்டளைகளுக்குப் பணிந்து நடந்தால் இறைவனின் சகல சிருஷ்டிகளும் அந்த மனிதனின் கட்டளைக்குப் பணிவிடை செய்யும்.

(நபிமொழி)

03. மனிதன் மனோ இச்சைகளை அடக்கி இறை வணக்கத்தின் மூலம் இறை நெருக்கம் பெற்றுவிட்டால் வானவர்களைவிட அவன் மேலான நிலைக்கு உயர்வடைவான். ஆனால் இறைவனின் கட்டளை விருப்பத்துக்கு மாறாக எவனொருவன் தனது கீழான ஆசைகளுக்கு அடி பணிகின்றானோ அத்தகைய மானிடன் மிருகத்தை விடவும் கீழ்நிலைக்கு தாழ்ந்துவிடுவான்.

(அருள் மறை)

தொகுப்பு- திஹாரிய-ஹாரித் (அருஸ்)

# கவிதைப்போட்டி இல-77

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

## பரிசுக்குரிய கவிதை

### வதனமும் வாடியதோ?

ஊட்டிவிட்ட அன்னைமுகம்
தொட்டிலிட்ட தந்தை கரம்
உறவிழந்த மழலை வதனம்
தொட்டுக் கொள்ளும் சாதமதில்
தொற்றிக் கொண்ட சோகங்கள்.

தெ.லோஜனா-கொழும்பு-15.

## வியக்கப்பட்டவை

### யுத்த பயம்

கிடைத்த உணவை
உண்பதற்குள் உயிர்
போய் விடுமோ என்ற
யுத்தப் பயம்!

எம்.யு.எம்.சாஜஹான்
பத்தலுஓயா.

### எப்போது?

ஊட்டிவிடும் தாயார்
உயிர் பிரிந்தாளோ?
உழைத்து வளர்த்தவரும்
உருக்குலைந்தாரோ?
சிரித்து விளையாட,
சீர் சிறப்பாய் வாழ,
போர் குவிந்த தேசம்
பொலிவடைவதெப்போ?

கே.இஸ்மத் இர்பானா
ஏறாவூர்-02.

### தீர்வுமில்லை

தட்டினில் உணவுமில்லை,
பட்டினித் தீர்வுமில்லை!
சமரசம் நிகழ்வதெப்போ?
சாந்தி நிலவுவதெப்போ?

லேகா-கொழும்பு-13.

### கையிலே கதி

நிம்மதி
விதியின் கையிலே
சந்ததி
வீதியின் கையிலே

த.ஜெயசாந்தி
மட்டக்களப்பு.

### தேடுதல்

யுத்தம்
மன்னித்து
விட்டுப்போன
மனிதப் பிஞ்சொன்று
வெள்ளம்
விசாரித்து
விட்டுப்போன
வெள்ளிப் பாத்திரத்தில்
சோற்றமிழ்துதேடி
இங்கு
தோற்றுக்
கொண்டிருக்கிறது.

த.தயாபரன்
ஆரையம்பதி-03.

### நான்

அன்னமிடும்
அன்னைதனை,
தேசத்தின் பசிக்கு
யாசகம்
கொடுத்துவிட்டு
வெறுமைப்
பாத்திரம்போல்
வேதனையாய்
நான்.

பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

### வழி கூறுங்கள்

நேசிப்பதை சேதப்படுத்தாது
பாதுகாப்பதற்கு வழி கூறுங்கள்!

எம்.ஐ.எம்.இல்யாஸ், தெல்தெனியா.



### செழிக்காது!

அன்னை
ஊட்டாது
அன்னம்
சுவைக்காது!
அமைதி
திரும்பாது
தேசம்
செழிக்காது!

ரேணுகா நிபாய்தீன்
ஏறாவூர்-02.

### கொடுமை

'புல்லாகிப் போனேன்
புழுவாய்ப் பிறந்திலனே!
கல்லா நாய்கூட
கனிவாய் எனைக் கண்டு
நில்லாமல் ஒதுங்கி விடும்
பொல்லாத கொடுமை இது!
பொய்யில்லை; வாழ்க்கை இது!"

ம.சசிப்பிரியன், காரைதீவு-01.

### அமைதி

யுத்தத் திருவிழாவில்
தேசத் தாய் தொலைத்த
அமைதிக் குழந்தை

ஏ.எச்.எம்.ஹிஸாம்
ஹிஜ்ராபுரம்.

அமுதூட்ட அன்னை இல்லை
அள்ளியுண்ண அமுது இல்லை
ஆறுதலுக்கு அமைதி இல்லை
ஆயுதத்தால் அமைதி இல்லை

வி.கலையரசன்-கொழும்பு-05.

### ஒதுக்கம்

யுத்த முனையில்
ஊன்றிய வித்து-இன்று
இரத்த அலையில்
ஒதுங்கிய முத்து.

எம்.எஸ்.புகாரி
சாய்ந்தமருது-4.

### எதிர்பார்ப்பு

வட்டிலிலே சாதமுமில்லை-மனித
இனத்திலோ சமாதானமே இல்லை;
ஆனாலும்-எட்டவே ஒரு வெண்புறா
இருப்பதெனக்கு தெரிகிறது- அது
கிட்டதான் வருமா என பார்க்கிறேன்!

திருமதி.தேவா மாதவன்-பிட்டமாறுவ.

### வெற்றுப் பாத்திரங்கள்

இந்த பிஞ்சு உயிருக்கு
நரம்பு தெறிக்கும் நல்லபசி...
பாவம் இவன்...
கருவறையிலிருக்கும்போதே...
தேசம் தீப்பற்றி எரிந்துவிட்டது...

பொத்துவில் ஏ மஜீத்
அக்கரைப்பற்று-01.

### தரித்திரமே!

அடுத்தடுத்துக் கப்பல்
அள்ளி உணவளித்தாலும்-நாட்டில்
தொடுத்திருக்கும் போர்
தொடருமட்டும் தரித்திரமே.

ச.மகாலிங்கம்-வெளிமடை.

### பந்தல் சாதம்!

விலையும் ஏறிப்போச்சு!
வீட்டில் ஏதுமில்லை
பானையில் ஏதுமுண்டா?
பந்தல் சாதம் மிச்சம்...
போரோயும் நாளுமில்லை?
போதுமிந்த வாழ்வெமக்கு...

காரைதீவூர் சிவம், குருக்கள் மடம்.

# கவிதைப் போட்டி இல-80



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.12.1994.

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 80
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

# வாசகர் சாலை

புள்ளிமான்போல் துள்ளி வரும் வெள்ளி முரசே!

நீ சென்ற இதழில் 'தாய்' என்ற தலையங்கத்தில் முத்தான படைப்பொன்றை 'மக்சீம் கார்க்கி'யின் மகத்தான கை வண்ணத்தில் எமக்கு வழங்கியிருந்தாய். வாசித்தேன்- வியப்படைந்தேன்! ஆஹா! என்ன அருமையான சொல் நடை. சிந்தனைச் சூழலை தட்டி எழுப்பிட்டாள் அந்த 'தாய்'. ஆரம்பமே என்னை அசத்திவிட்டது. அடுத்த இதழை வழிமேல் விழி வைக்கத் தூண்டிவிட்ட உன்னை வாயார வாழ்த்துகின்றேன்.

ஏ.எச்.ராஸீன் மொகமட்
ஏத்தாலை.


□□

தினமுரசில் வெளிவரும் கவிதைப் போட்டிகளில் உணர்ச்சி வேகமும் கலை நயமும் மிளிர்வதை யாரும் மறுக்க முடியாது! பரிசு பெற்ற 100 கவிதைகளைத் தினமுரசின் விசேட சிறப்பிதழாக வழங்கவேண்டும் என்று ஷியானி நளீர் என்பவர் இப்பகுதியில் வேண்டிக் கொண்டிருந்ததை நாமும் வரவேற்கின்றோம். பரிசுக்குரிய கவிதைகளில் ஆழமான மனித உணர்வுகள் அருமையாகத் தீட்டப்பட்டுள்ளன.

செல்விகள்-ரஸ்மிலா, அஸ்மிலா, நரூஸா, மசூமியா-
புளுகொஹதென்ன.

குறுக்கெழுத்துப் போட்டிக் கூப்பன், லேடிஸ் ஸ்பெசல் முரசின் பரிசுக் கூப்பன், வர்ணம் தீட்டும் போட்டிக் கூப்பன் போன்றவற்றை முரசின் பக்கங்களின் ஓரமாக (மூலைகளில்) வெளியிட்டால் பத்திரிகை சேதப்படாமல் சேர்த்து சேகரித்து வைக்க உதவியாக இருக்கும்,

பாத்திமா பஸ்மின்னிஸா மன்சூர், பாத்திமா பஸ்லுன் னிஸா மன்சூர்-அக்குறணை.



அன்பின் ஆசிரியருக்கு,

வாராவாரம் பிரசுரமாகும் கவிதைப்போட்டி, குறுக்கெழுத்துப்போட்டி பிரமாதம். இதைப்போல 'நறுக் நறுக் டயலக்' வாராவாரம் பிரசுரமானால் நன்றாக இருக்குமே?

தஸ்கர ராஸீக் கொழும்பு-12.

□□

தித்திக்கும் தீந்தமிழில் தினந்தோறும் வந்திட்டாலும் முரசுக்கு நிகரேது? வரவுக்கு சுபம் நூறு.

எஸ்.அலெக்சாந்தர்
எதன் சைட் எஸ்டேட்.

□□

அன்பின் முரசே,

நீ வாரா வாரம் சுமந்துவரும் இலக்கிய நயம், மகாபாரதம் தொடர்கதை ரசிகனின் கொலை விழும் நேரம் என்னும் தொடர்கதை மற்றும் சகல அம்சங்களும் மிக மிக பிரமாதம்.

எஸ்.ஸ்ரீகாந்தி-பனில்கந்த.

□□

என் இனிய முரசே,

உன் ஆக்கங்கள் அனைத்தும் என் மனதைக் கவரக்கூடியது. பாப்பா முரசு, இலக்கிய நயம், லேடிஸ் ஸ்பெசல், தேன் கிண்ணம், சினிவிசிட் போன்றவைகள் என் மனதை இனிக்க வைக்கின்றன.

பிரியா, ராணி-அட்டன்.

□□

என் இதயம் கனிந்த முரசே,

நீ தரும் அத்தனை அம்சங்களும் என்னை ஒரு கணம் திகைக்க வைக்கிறது. கவிதைகள், சிறுகதைகள் மற்றும் இலக்கிய நயம், அரசியலைப்பற்றி சுறுசுறுப்பாகவும் சுடச்சுடவும் தந்து எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறாய். என்றும் உன் புகழ் ஓங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

எம்.எஸ்.எம்.நௌஸாட்-பண்டாரக்கொஸ்வத்த.

□□

கரம் தவழும் தினமுரசே,

உன் ஆக்கங்கள் அற்புதம். பாராட்டுக்கள். இருந்தும் கிரிக்கெட் பற்றிய செய்திகளில் இந்திய கிரிக்கெட் அணி பற்றிய செய்திகளை மட்டுமே பிரசுரமாகின்றன. இதுபோன்ற திறமையான எத்தனையோ அணிகள் இருந்தும் (வீரர்கள்) அது பற்றிய செய்திகளை காணவில்லையே? என்ன ஒரு பக்க சார்போ?

ஏ.எம்.அஷார்ட்-கண்டி.

□□

அன்பின் முரசே, நீ வாராமொரு முறை சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். அதிலும் அரசியல் அலசல்கள் வெகு ஜோர்.

எம்.சண்முகநாதன்-லிந்துலை.

□□

இராஜகுமாரனை அறிமுகப்படுத்திய இராணியே! எப்போது 'எம் ரசிகனை அறிமுகப்படுத்தப் போகின்றாய்? மர்மமாகிப்போகும் சிந்தியாவை எங்கே காணோம்? சிந்தியாவின் வரவு எமக்கு தேவை.

எஸ்.பத்மா, உமாஜினி,
நவ்சாத்-கொழும்பு-10.

□□

### (விசு)வாசம்

முரசு தனது கருத்துக்களை, கணிப்பீடுகளை முந்திக் கொண்டு, முன்கூட்டியே தருவதினால் முரசின் இதழுக்கு எப்பொழுதுமே ஒரு... தனி (விசு)வாசம் உண்டு!

து.சர்மிளாதேவி-கலஹா.


□□

தித்திக்கும் தினமுரசே!

நீ சுமந்து வந்த அனைத்து அம்சங்களும் தேனாக இனித்தன. ரசிகனின் இலக்கிய நயமும் என் நெஞ்சைத் தொட்டன.

எம்.ஷாரா-பொல்கஹவெல.

# யார் இவர்?



இப்போது உலகறிய வளர்ந்துவிட்டார். சமீப தேர்தல்களில் இவர் கட்சி அடி வாங்கியிருக்கிறது. தெரிகிறதா இவரை? யோசித்துவிட்டு 13ம் பக்கத்திற்குச் செல்லுங்கள்— அறியலாம்.

யோசித்துவிட்டு 13ம் பக்கத்திற்குச் செல்லுங்கள்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

புலிகள்

# சொந்த ஆட்சி நீடிக்கும் என்பதில் புலிகள் உறுதி!

# 45 வருடத்திற்கான கிராமிய நிதியம் ஆரம்பம்

வர்மா

தன்னாட்சி கட்டமைப்புக்கள் உருவாகிவருவதை கருத்தில் கொண்டே தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படவேண்டும் என்று புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் கூறியிருக்கிறார்.

தாம் தற்போது உருவாக்கியுள்ள நீதி, நிதி மற்றும் நிர்வாக அமைப்புக்கள் நிரந்தரமானவை என்ற அடிப்படையில் புலிகள் திட்டங்களை வகுத்து வருகின்றனர்.

'மாவீரர் சோலை சேமிப்புத் திட்டம்' என்ற பெயரில் புலிகள் அமைப்பினரால் 'கிராமிய நிதியம்' ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் பெற்றோர்கள் தமது குழந்தைகளின் பெயரில் ஐந்தாயிரம் ரூபாயை வைப்பிலிடவேண்டும். 45 வருடத்திற்கான இந்த சேமிப்புத் திட்டத்தில் 10 இலட்சம் ரூபாயை 45 வருடத்தின்பின் பெற்றுக்கொள்ளலாம் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

10 வருடங்களின் பின் பதினைந்தாயிரம் ரூபாயும், 20 வருடத்தின்பின் முப்பதாயிரம் ரூபாயும், 45 வருடத்தின்பின் 10 இலட்சம் ரூபாயும் கிடைக்கும் என்று கிராமிய நிதிய திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வைப்பிலிடும் பணத்தை தேக்குமரச் செய்கைக்கு பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் புலிகளது 'தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவனம்' அறிவித்துள்ளது.

# வலியுறுத்தும் தாயகக் கோட்பாடு!

## தீர்வை முன்வைப்பதில் புதிய அரசும் தடுமாறும்!!

## புலிகள் சொல்வதற்கு மாறாக வெளியாகும் செய்திகள்

மாவீரர் தினத்தை முன்னிட்டு 26.11.94 அன்று இரவு 11.45க்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு.வே. பிரபாகரன் உரை யாற்றியிருந்தார்.

அந்த உரையின் முக்கியமான பகுதிகள் எவ்வித மாற்றமும் இன்றி கடந்தவார முரசில் வெளியிடப்பட்டிருந்தது.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில-சிங்கள-தமிழ் பத்திரிகைகள் சிலவற்றில் பிரபாவின் உரைக்குமாறான விடயங்கள் வெளியாகியிருந்தன.

### தவறான செய்தி

"பிராந்திய சுயாட்சி திட்டத்தை பரிசீலிக்க தயார்" என்று பிரபா கூறியதாக ஒரு செய்தியும்,

'வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சிக்கு பிரபா தயார்' என்று மற்றொரு செய்தியும் வெளியாகியிருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தெரிவிக்கும் கருத்துக்கள் இவ்வாறு தவறுதலான விளக்கத்தின் அடிப்படையில் வெளியாவது இது முதற் தடவையல்ல.

இவ்வாறு புலிகளது நடவடிக்கைகள், கருத்துக்கள் தவறான கோணத்தில் வெளியுலகில் அறியப்படுவதால் மக்களிடமும் அடிக்கடி சூழலுக்கு மாறான எதிர்பார்ப்புக்கள் உருவாகிவருகின்றன.

இறுதியாக வெளியான செய்தி 'பிராந்திய சுயாட்சியை பிரபா விரும்புகிறார்' என்ற செய்தியாகும்.

மாவீரர் தினத்தில் பிரபா ஆற்றிய உரை 'புலிகளின் குரல்' வானொலியில் அவரது குரலில் ஒலிபரப்பானது.

மறுநாள் 27.11.94 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'ஈழநாதம்' பத்திரிகையில் முழுதாக வெளியிடப்பட்டது.

புலிகளின் குரல் ஒலிப்பதிவு நாடாவும், 'ஈழநாதம்' பத்திரிகையும் முரசிடம் இருக்கின்றன.

பிடிகொடாத வகையில் பிரபாவின் உரை அமைந்துள்ளது.

"தமிழரின் தேசியப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சித் திட்டங்கள் முன்வைக்கப்படுமானால் அதனை பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம்.

"நீண்டகாலமாக இரத்தம் சிந்திப் போராடிய எமது இயக்கம் இன்று தமிழ் பகுதிகளில் தன்னாட்சிக் கட்டமைப்புக்களை நிறுவும் அளவிற்கு போராட்டத்தை உயர்ந்த படி நிலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறது. இன்று நாம் பலமான உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம்.

"சமாதான வழியில் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வுகாண சந்திரிக்கா அரசு முயற்சிகளை எடுக்குமானால் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

### நாம் ஒரு தேசம்

"நாம் விடுதலைக்கு போராடும் ஒரு மக்கள் தேசம். நாம் சலுகைகளுக்காக கைகட்டி நிற்கும் சாதாரண கூட்டமல்ல.... எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில் கௌரவமாக பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே எமது குறிக்கோள். இதுவே எமது தேசத்தின் அபிலாசை. இந்த தேசிய அபிலாசையை நிறைவு செய்யும் ஒரு தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம். அதனடிப்படையிலான தீர்வே நிரந்தர சமாதானத்தை தோற்றுவிக்கும். அந்தத் தீர்வு கிட்டும்வரை நாம் ஒன்றுபட்ட மக்களாக, ஒன்று திரண்ட தேசமாக தளராத உறுதியுடன் இருக்கவேண்டும்"

இதுதான் பிரபாவின் பேச்சின் முக்கிய பகுதியாகும். தமிழர் தாயகம் ஒரு தேசம் என்ற மிக முக்கிய அடிப்படைக் கோட்பாடு பிரபாவின் உரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழர் தாயகம், நாம் ஒரு தேசம், தேசிய அபிலாசை** என்ற பதங்கள் அடிப்படைக் கொள்கை சார்ந்த விடயங்களாகும். அதனை பிரபா வலியுறுத்தியுள்ளார்.

### முதலில் முன்வைக்காது

அது மட்டுமல்ல; பலமான நிலையில் உள்ள ஒரு அமைப்பு தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்ற திட்டத்தை தானாக முன்வைக்காது என்பதும் தெளிவான விடயமாகும்.

'எமது இலக்கு தமிழ் ஈழம். இது தவிர வேறு வழியில்லை. வேறு வழி- வேறு தீர்வு இருந்தால் தாருங்கள் பரிசீலிப்போம் என்றுதான் ஏற்கனவே ஒரு இலக்கை வகுத்து போராடும் எந்தவொரு அமைப்பும் தெரிவிக்கும்.

அதைத்தான் புலிகளும் செய்கிறார்கள். திரிபாகிவிடும் செய்திகள்தான் தவறான விளக்கங்களை உருவாக்குகின்றன.

### தீர்வு என்ன?

தாயகக் கோட்பாட்டை புலிகள் அமைப்பினர் கைவிடமாட்டார்கள்.

நாடு என்பதும் தேசம் என்பதும் வெவ்வேறானவை.

ஒரு நாட்டில் இரு தேசங்கள் இருக்கலாம்; இரு தேசங்களும் சமஷ்டி முறை போன்ற ஆட்சி அமைப்பின்கீழ் இணைந்தும் வாழலாம்.

புலிகள் 'தமிழர் தாயகம் ஒரு தேசம்' என்பதை அடிப்படைக் கொள்கையாக வலியுறுத்துகிறார்கள். வெறும் கொள்கையடிப்படையில் மட்டுமல்லாமல் தன்னாட்சி நிர்வாக கட்டமைப்புக்கள் உருவாகியுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

எனவே-புதிய அரசு புலிகளுடனான பேச்சில் அரசியற் தீர்வை முன்வைக்கும்போது குறைந்தபட்சமாக சமஷ்டித் தீர்வையாவது முன்வைக்க வேண்டியிருக்கும். வடக்கு-கிழக்கு இணைப்பும் கேள்விக்கிடமற்றதாக இருக்கவேண்டியிருக்கும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.



புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கோப்பாயில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்திற்கு ஆண்களும் பெண்களும் அஞ்சலி செய்யச்செல்லும் காட்சி.

அவ்வாறான ஒரு தீர்வை முன்வைக்க வேண்டுமானால் எதிர்க்கட்சியின் ஆதரவு புதிய அரசுக்கு தேவைப்படும்.

சிங்கள மக்களது உரிமைகளை அது பாதிக்காது என்று நம்பவைக்கவும் அரசு முயற்சிக்கவேண்டியிருக்கும்.

"சிங்கள மக்களது உரிமைகளைப் பாதுகாத்துக்கொண்டே வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு தீர்வு" என்று ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின் புதிய ஜனாதிபதி கூறியுள்ளதும் கவனிக்கப் படத்தக்கது.

எனவே-புலிகள் பலமாக உள்ள நிலையில் அவர்களை திருப்திப்படுத்தக் கூடிய தீர்வை முன்வைப்பதில் புதிய அரசு தடுமாறவேண்டியிருக்கும் என்றே அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## "விடுதலைப்போர் வெற்றிபெற இன்னும் இருப்பது சில தூரம்!"

## "போரின் தோல்வியே புதிய அரசு பேசவரக் காரணம்"

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் புலிகளின் தினசரியான 'ஈழநாதம்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில், விடுதலைப் போர் வெற்றிபெற இன்னும் இருப்பது சில தூரம் என்று கருத்துத் தெரிவித்துள்ளது.

அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சிறிலங்கா அரசியலைப் பொறுத்தவரை இன்று புதியதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இதுவரை இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு ஒரே வழி என்ற சிறிலங்கா அரசின் நிலைப்பாடு மாற்றம் கண்டுள்ளது. அரசியற் தீர்வு பற்றிப் பேசப்படுகிறது.

இப்புதிய சூழ்நிலை இனப்பிரச்சனைக்கு அரசியற் தீர்வை கொண்டுவருமா மாட்டாதா என்பது வேறு விடயம். ஆனால் இப்புதிய சூழல் உருவாக மாவீரர்களே காரணம்.

சிலர் புதிய அரசாங்கம், சமாதானத்தின் மீதுள்ள பற்றினால் புலிகளுடன் பேச்சுக்களுக்கு முன்வந்ததாக கூற முற்படலாம். ஆனால் இவ்வாதம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. போரினால் கடந்தகாலத்தில் சிங்கள தரப்பிற்கு ஏற்பட்ட இழப்பினை கணிப்பீடு செய்த பின்னரே இந்த முடிவிற்கு புதிய அரசாங்கம் வந்துள்ளது. அதாவது போரை வெல்ல முடியாது என்பதை சிங்கள அரசாங்கம் புரிந்துகொண்டதே காரணமாகும்.

மாவீரர்களது சிந்தனை - இலட்சியம் இன்னமும் முற்று முழுதாக நிறைவேறவில்லை. அவர்கள் தம் உயிரை ஈகம் செய்து உச்ச நிலைக்கு கொண்டுவந்துவிட்ட விடுதலைப் போராட்டம் முழுமையான வெற்றிபெற இன்னும் சில தூரம் செல்லவேண்டியுள்ளது."

இவ்வாறு 'ஈழநாதம்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## 'கொழும்பு வங்கிகளில் முதலீடுவேண்டாம்'

## தமிழீழ வங்கி விழாவில் கோரிக்கை!

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ வைப்பகத்தின் (வங்கி) மாவீரர் நிதிய ஆரம்ப விழாவில் புலிகள் இயக்கப் பிரமுகர் வே.பாலகுமார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

முன்னாள் ஈரோஸ் இயக்க தலைவரான வே.பாலகுமார் அவ்வியக்கத்தை கலைத்துவிட்டதாக அறிவித்துவிட்டு தற்போது புலிகள் அமைப்பில் பிரமுகராக இருக்கிறார்.

அவர் தனது உரையில், "தமிழ் மக்களால் கொழும்பு வங்கிகளில் முதலீடு செய்யப்படும் பணம் தமிழினத்தை அழிப்பதற்கே உதவும்" என்று கூறினார்.

மேலும் அவர் பேசும்போது, "எமது மக்கள் தமிழீழ வைப்பகத்தில் முதலீடு செய்யவேண்டும். இதன்மூலம் எமது தேசத்தை அபிவிருத்தி செய்யவும் மேம்படுத்தவும் அந்த நிதி பயன்படும்.

"மாவீரர்கள் தமக்கென எதுவும் எதிர்பாராமல் நாட்டுக்காக தம்முயிரை அர்ப்பணித்தவர்கள். இந்த புதிய மாவீரர் நிதியத்தின் மூலம் மாவீரர்களின் உறவினர்களுக்கு உதவி செய்யப்படும்.

"இந்த சந்தர்ப்பத்தை எமது மக்கள் பயன்படுத்தி இத் தேசத்தின் விடுதலைக்கு பங்களிப்பு செய்யவேண்டும்." என்று கூறினார்.

## வடக்கு-கிழக்கு தவிர்ந்த பகுதிகளில்

## மார்ச்சில் குட்டித் தேர்தல்!

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் குட்டித் தேர்தல் ஒன்று வரப் போகிறது என்ற எதிர்பார்ப்புடன் நாட்டின் அரசியல் கட்சிகள் யாவும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளத் தொடங்கிவிட்டன. புதிய அரசியற் கட்சிகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதிவு செய்துவிட வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் விடுத்துள்ள வேண்டுகோளை அடுத்தே அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தயார் செய்யும் முயற்சியில் இறங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது.

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா நகரம் ஆகிய பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் மட்டுமே இவ்வாண்டின் ஆரம்பத்தில் நடைபெற்றன. நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றுக்கான தேர்தல்களே நடைபெறவேண்டியுள்ளன.

1991ல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா 80 சதவிகிதமான சபைகளில் ஐ.தே.கட்சியின் செல்வாக்கினை நிலைநாட்டினார். இன்று திருமதி சந்திரிக்கா குமாரதுங்காவுக்கு ஏற்பட்டிருக்கும் அமோக ஆதரவின் காரணமாக மக்கள் முன்னணிக்கே பேராதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## "சமுதாயத்தை அழிக்கும் நஞ்சு"- தென்னிந்திய சினிமாவுக்குத் தடை!

(வர்மா)

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தென்னிந்திய திரைப்படங்களை முற்று முழுதாக தடைசெய்ய புலிகள் அமைப்பினர் தீர்மானித்துள்ளனர்.

ஏற்கனவே, புலிகளால் அங்கீகரிக்கப்படும் தென்னிந்திய திரைப்படங்களை வீடியோவில் பார்வையிட அனுமதியிருந்தது.

தற்போது தென்னிந்திய திரைப்படம் எதனையும் மக்கள் பார்வையிடக்கூடாது என்றும், விடுதலை உணர்வை அவை மழுங்கடிக்கின்றன என்றும் கூறி முற்றாக தடை விதிக்க புலிகள் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பான கருத்தரங்குகளும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளன.

ஆபாசம் இல்லாத யுத்த சாகசங்களை சித்தரிக்கும் ஆங்கிலத் திரைப்படங்களை பார்வையிட புலிகள் தடைவிதிப்பதில்லை. முக்கியமான சில ஆங்கிலப் படங்களை புலிகளே திரையிட்டும் காண்பித்து வருகிறார்கள்.

'தென்னிந்திய சினிமா எமது சமூகத்தை அழிக்கும் நஞ்சாக மாறியுள்ளது. அதனை அகற்றி தமிழர் விழுமியங்களை காப்பாற்றும் திரைப்படத்துறையை நாம் கட்டியெழுப்புவோம்' என்று புலிகள் அமைப்பின் பிரமுகர் கவிஞர் மு.வோ.யோ.வாஞ்சிநாதன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் புலிகளின் திரைப்படப் பிரிவினரால் 'இந்தமண்', 'எல்லைக் கற்கள்' போன்ற படங்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஊருக்கு கொள்கை விளக்கம் ஊழலுக்கு மட்டும் உதவிக்கரம்

## கூழ் ருசியில் மயங்கிய கொள்கைவாதிகள்

ஸ்பெசல் ரிப்போர்ட்

அரசியல் நிருபர்

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவராக 13 வருடகாலம் பதவி வகித்த கே.நடராசா பற்றிய ஊழல் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்கள் முரசிடம் கிடைத்துள்ளன.

கடந்தகால அரசாங்கத்தில் அதிகாரமுள்ள சிலரோடு கே.நடராசா நல்லுறவுகளை வைத்திருந்தவர்.

அந்த நல்லுறவைப் பேண அவர்களது சில தேவைகளையும் தீர்த்துவைத்தவர் என்றும் கூறப்படுகிறது.

பெண் ஊழியர்களை கையாண்ட முறை குறித்தும் புகார்கள் நீண்டகாலமாகவே சுமத்தப்பட்டுவருகின்றன. விசாரணை மூலம் இதன் உண்மை பொய் கண்டறியப்பட வேண்டும்.

தமிழ் கட்சிகள் யாவற்றோடும் தன்னை நெருக்கமாக காட்டிக்கொண்டு, அதன்மூலம் தனது தவறுகளை அக்கட்சிகள் கண்டுகொள்ளாமலிருக்க வழி செய்துகொண்டார்.

தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் கொழும்பு அலுவலகத்திற்கு வாராவாரம் பனம்பொருள் சபையில் இருந்து கூழ் அனுப்பப்படும்.

ருசியோ ருசி! 'அரசை வீழ்த்த தயங்காத' (?!) கொள்கைவாதிகள் கூழ் ருசியில் வீழ்ந்து கிடந்தார்கள்.

கூட்டணித் தலைவர் திரு.மு. சிவசிதம்பரம்மீது கடும் பிரியமுள்ளவராக நடந்து கொண்ட கே.நடராசா கடந்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தன்னை தீவிர கூட்டணி ஆதரவாளராகக் காட்டிக்கொண்டார்.

அதற்கு முன்னர் அமிர், சிவா தவிர 'எல்லோரும் கள்ளர்கள்' என்று கூட்டணி பற்றி அவர் கூறித் திரிந்தவர் என்று கூறப்படுகிறது.

ஊழல் தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள கே.நடராசா பொதுஜன முன்னணி பதவிக்கு வந்ததும் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

"அய்யய்யோ தமிழர் ஒருவருக்கு அநீதி இழைக்கப்படலாமா?"

"பனம்பொருள் சபைக்கு தலைவராக தமிழர் ஒருவர் இருப்பது புதிய அரசுக்கு பொறுக்கவில்லையா?"

என்றெல்லாம் கே.நடராசா தனது கூழ் மற்றும்.... விநியோகங்களால் லாபம் அடைந்தவர்கள் மூலம் பிரசாரம் செய்தார்.

ஊழல் குற்றச்சாட்டு காரணமாகவே அவர் மீண்டும் தலைவராக நியமிக்கப் படவில்லை. புதியவர் நியமிக்கப்பட்டார். என்ற செய்தி திட்டமிட்டே மறைக்கப்பட்டது.

புதிய அரசு வந்தவுடன் பனம்பொருள் சபைக்கு புதிய நியமனம் நடந்துவிட்டது மாதிரித்தான் மக்களுக்கு செய்திகள் தரப்பட்டன.

இதே சமயம்- 'கொள்கை உறுதியோடு அதை துளியும் தவறவிடாமல் அரசை ஆதரிக்கிறோமே தவிர அரசோடு சேரவில்லை' என்று கூறிவரும் கூட்டணித் தலைவர்கள் சிலர் கே.நடராசா விடயத்தில் தீவிர அக்கறை காட்டினார்கள்.

பின் கதவு வழியாக அரசாங்கத்திடம் கே.நடராசா சார்பில் கூட்டணித் தலைவர்கள் பேசினார்கள்.

அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவிடம் தினமும் நச்சரித்தார்கள்.

சிங்கத் தமிழ் கட்சி சிபாரிசுக்காக அலைந்தது.

ஊழல் ஒழிப்பு கமிஷன் விசாரணைக்கு நடராசா உட்படக்கூடாதென்றால் அவர் மீண்டும் பனம்பொருள் அபிவிருத்திச் சபை தலைவராகவேண்டும்.

அப்போதுதான் விசாரணை என்ற ஒன்று நடந்தாலும் ஆதாரங்களை அமுக்க வழி கிடைக்கும்- சாட்சிகளை மடக்க வசதியாக இருக்கும்.

சட்டவாதிகளின் சமயோசித மூளையைப் பாராட்டலாம்.

கூட்டணியினர் கே.நடராசாவுக்கு சிபாரிசு செய்வது பற்றி முரசுக்கு கிடைத்துள்ள தகவல்கள் உண்மையானால், பின்வரும் கேள்விகளுக்கு கூட்டணி பதில் சொல்ல வேண்டும்:

* கே. நடராசா தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளர் என்பது உண்மையா?

* கொள்கை அடிப்படையில் அரசை ஆதரிப்பதாகக் கூறும் கூட்டணியினர் சலுகை அடிப்படையில் பதவி கேட்கலாமா?

* கே. நடராசா சிறந்த நிர்வாகி, திறமைசாலி என்ற ரீதியில் சிபாரிசு செய்கிறோம் என்று கூட்டணி கூறுமானால், நடராசாவுக்கு பதிலாக புதிய தலைவர்- சிங்கள இனத்தவர் நியமிக்கப்பட்டபோது கொள்கை உறுதி பேசும் கூட்டணித் தலைவர்கள் அதனை ஏன் பகிரங்கமாகக் கண்டிக்கவில்லை?

* திரு. வாசுதேவ நாணயக்காரவும், வேறு சில தமிழ் பா.உறுப்பினர்களும் கே. நடராசாவின் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்ககள் பற்றி சுட்டிக்காட்டும் போதும் கூட்டணியினர் அவரை உறுதியாக நம்புவது எப்படி?

* வெளியே வாய் திறக்காமல் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் மட்டும் காதோடு காது வைத்தாற் போல் சிபாரிசு செய்தது ஏன்?

* கே. நடராசா நேர்மையானவர் எனில் ஊழல் ஒழிப்பு கமிஷன் விசாரணை செய்யட்டும் என்று துணிந்து கூறத் தயங்குவது ஏன்?

* தொடர்ந்து தலைவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரே தவிர, தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை பொய்யென்று நிருபிக்க விசாரணை நடத்துமாறு கே. நடராசாவோ அல்லது கூட்டணியோ கோரலாம் அல்லவா?

* தமிழர் ஒருவரே பனம்பொருள் சபைத் தலைவராக வரவேண்டும் என்பதற்காகவே முயற்சிக்கிறோம் என்று கூட்டணி கூறுமானால், பழைமையான கட்சியிடம் கே. நடரசாவைத் தவிர வேறு தமிழர்களே இல்லையா? அரசை ஆதரிக்கும் கூட்டணி அதற்காக பெறும் சலுகைகளில் ஒன்றாக தமது வேறு ஆதரவாளர் ஒருவரை சிபாரிசு செய்யலாம் அல்லவா?

இக் கேள்விகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் இருந்து பதில் கிடைத்தால் முரசு வெளியிடும்.

கூட்டணித் தலைவர்களும், அவர்களது தீவிர அபிமானிகளும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாவது புதிய விசயமல்ல.

1983ல் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான ஆலாலசுந்தரம் கூட்டுறவு சங்க தலைவராக நியமிக்கப்பட்டார்.

'அதுவும் கொள்கை உறுதியோடு'(?!) அரசிடம் பெற்ற சலுகைதான். பின்னர் பல இலட்சங்களை ஆலாலும் விழுங்கி ஏப்பமிட்டார். அதற்கெதிராக உண்ணாவிரதங்கள்- போராட்டங்கள..........

கூட்டுறவுச் சங்க ஊழலுக்கான ஆதார ஆவணங்கள் இருந்த கட்டிடமும் ஆலால் குழுவினரால் எரிக்கப்பட்டது. கணக்கு வழக்குகள் தீக்கிரையாகின. "இனி என்ன செய்ய முடியும்?" என்றார் ஆலால். பின்னர் புலிகள் அமைப்பினரால் அவர் சுடப்பட்டார்.

கூட்டணியின் இளைஞர் பேரவையில் முக்கியமாக இருந்தவர் சிவமகராஜா.

புலிகளுக்கு ஆதரவாக நடித்து அவரும் கூட்டுறவுச் சங்கத் தலைவரானார்.

பல இலட்சங்களை விழுங்கினார். புலிகள் அவரை தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு கூறினார்கள். கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விசாரித்து உண்மையை அறிந்தார்கள்.

இது கடந்தகால வரலாறு. கே.நடராசா விவகாரம் தற்கால நிகழ்வு.

எதற்கும் பனம்பொருள் சபை கணக்கு வழக்குகள் உள்ள கட்டிடத்திற்கு அரசு பாதுகாப்பு கொடுப்பது நல்லது.

சமீபத்தில் மட்டக்களப்பு மாவட்ட பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் பேசியுள்ளது இது:

"தமிழர் பிரச்சனை தீராவிட்டால் அரசை வீழ்த்தத் தயங்கோம்."

திரு. ஜோசப் பரராஜசிங்கம், கே.நடராசா மாதிரியான தமிழர்களது பிரச்சனையைத்தான் சொல்லுகிறாரோ என்று சந்தேகம் வருகிறது!

## வைத்தியசாலைக்கே வருத்தம் வந்தால் ..........

மட்டக்களப்பு நகரத்திலிருந்து சுமார் 20 கி.மீ.தூரத்தில் அமைந்துள்ள களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை அடிப்படை வசதிகள் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகிறது. பாலையடி வட்டை, 39ம் 40ம் கொலனி, கொக்கட்டிச்சோலை, குருக்கள்மடம், மகிழூர், திக்கோடை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வசதியற்ற பாமர மக்களுக்கு ஒரேயொரு முக்கிய வைத்திய சாலை இதுவாகும். தினமும் ஏறத்தாழ 400க்கும் அதிகமான நோயாளர்கள் வெளிநோ யாளர் பிரிவில் சிகிச்சை பெற வருகிறார்கள். இவர்களைத் தவிர இப்பிரதேசங்களில் நிலைகொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் சிகிச்சையளிக்கவேண்டிய பாரிய பொறுப்பும் இவ் வைத்திய சாலைக்கு உண்டு.

போதியளவு கட்டிடமிருந்தும் போதியளவு உத்தியோகத்தர்கள் இருந்தும் நோயாளிகளுக்குப் போதியளவு மருந்து வகைகள் இல்லாமை வேதனைக்குரியதாகும். இலவச வைத்திய சேவை என்பது, வெறுமனே உத்தியோகத்தர்களுக்கு வேதனம் வழங்கப்படுவதால் நிறைவு பெறாது, பல்லாயிரக் கணக்கில் செலவு செய்து நோயாளிகளுக்குத் தேவையான நேரத்தில் தேவையான மருந்தைக் கொடுப்பதையே குறிக்கிறது.

அண்மையில் ஒரு தொகை மருந்து வழங்கப்பட்டுள்ளபோதும் மிகவும் அத்தியாவசியமான மருந்துகள் கிடைக்கவில்லை, என ஒரு உத்தியோகத்தர் குறிப்பிட்டார். 'சேலைன்' ஏற்றும்போது உடம்பில் ஒட்டுவதற்கான 'பிளாஸ்திரி'கூட இல்லை என அறிய வருகிறது.

பாம்புபோன்ற விஷ ஜந்துக்கள் தீண்டினால்கூட அவசரத்திற்கு அருகில் உள்ள ஒரேயொரு வைத்தியசாலை இதுவாகும். இங்கே விஷத்தைப் போக்கும் மருந்து இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

'நோராட்' நிறுவன ஆதரவுடன் புதிதாக ஒரு கட்டிடம் எழுப்பப்படுவது பாராட்டத்தக்கது. ஆனால் இருக்கும் கட்டிடங்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகும்.

இரவு நேரங்களில் யன்னல்கள் எல்லாம் பாவித்த சேலைன் 'ரியூப்'புகளைக் கொண்டே கட்டிப் பிணைக்கப்படுகின்றன. வாயிற் கதவுகள் கயிற்றினால் பிணைக்கப் படுகின்றன. அண்மையில் ஒரு விசர் நாய் புகுந்து அட்டகாசம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

ஆண் நோயாளர் விடுதியில் காணப்படும் மலசலகூடப் பக்கம் போகவே முடியாத அளவுக்கு தண்ணீர் தேங்கி நிற்பதைக் காணலாம். இங்குள்ள குழாய்களில் 'டப்' ஒன்றையும் காணவில்லை. தண்ணீர் நிறைக்கும்போதெல்லாம் தண்ணீர், குழாய்களில் வழிந்தோடுவதால் தண்ணீர் நிறைக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தண்ணீர் வசதியே இல்லை எனலாம்.

ஆனால் பெரும்பாலான உத்தியோகத்தர்கள் தங்களால் முடிந்த அளவில் நோயாளிகளைக் கவனிப்பதும் பாராட்டக் கூடியது. ஆனால் அண்மையில் வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்ட ஒரேயொரு நோயாளி மட்டும் விடுதியில் இருந்தபோதும் அவருக்கென எழுதப்பட்ட மருந்துகளை இரண்டு தாதிமார் கடமையிலிருந்தும் கொடுக்கப்படாமலிருந்தமையும் சிலரின் அசமந்த போக்கை எடுத்துக்காட்டுகிறது.

கடமையைக் கடமைக்காகச் செய்யாது, நோயாளிகளின்மீது இரக்கம் காட்டிச் செயற்படுவது இத்துறையிலிருப்போரின் தன்மையாக இருக்க வேண்டும்.

ஆதலால் மேலதிகாரிகள் மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களை மனிதாபிமான கருத்தோடு நோக்கி குறைகளை நிறைவு செய்வார்கள் எனப் பெரிதும் வசதியற்றவர்களினால் எதிர்பார்க்கப்படுகிறது.

சி. நல்லையா–களுவாஞ்சிக்குடி.


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

**கொழும்பு இல்லம்–**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464


## விளை நிலமாக மாறும் வீதி



சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை வீதியில் பாடசாலை நுழைவாயிலின் முன் உள்ள பகுதி நெல் விதைக்கக்கூடிய விளை நிலமாக மாறி வருகின்றது. இது புதிய அரசுக்கோ, கல்முனை பிரதேச சபைக்கோ இதுவரை தெரியவில்லையா என்று பொது மக்கள் ஏங்கித் தவிக்கின்றனர். பாடசாலை மாணவர்கள் தமது வெண்ணிற உடைகளில் சிவப்பு நிறமான கிறவல் சேற்றைப் பூசிக்கொண்டு பாடசாலைக்கும் வீட்டுக்கும் செல்லுவது பெற்றாருக்கும், ஆசிரியர்களுக்கும் பெரும் தொல்லையாக இருக்கின்றது.

(படம்- கல்முனை நிருபர்)

## பிரதான வீதியின் பரிதாபக் கோலம்

கண்டி மாவட்டத்திலுள்ள கட்டுகஸ்தோட்டை நகரிலிருந்து அக்குறணை ஊடாக மாத்தளை நகருக்குச் செல்லக்கூடிய பிரதான பாதை பள்ளமும் படு குழியுமாக மணல் நிரம்பி காணப்படுகின்றது.

பொதுமக்கள் இப்பாதையினால் பிரயாணம் செய்யமுடியாமல் கவலை அடைகின்றார்கள்.

எனவே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொதுமக்களின் நலன் கருதி இப்பிரதான பாதையை மிகக்கூடிய சீக்கிரம் சீர்திருத்த ஆவன செய்யுமாறு பொதுமக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

இனிகலை முஜீப், கண்டி.

புகார் பெட்டி புகார் பெட்டி புகார் பெட்டி

## பொறுமையை சோதிக்கும் 'பொன் மாலைப் பொழுது'

ரூபவாஹினியின் தமிழ் இரசிகர்களது ஏகோபித்த பாராட்டைப் பெற்ற நிகழ்ச்சியான 'பொன்மாலைப் பொழுது' இப்போதெல்லாம் இரசிகர்களது பொறுமையை சோதித்துக்கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை கொடுத்து அம்பிகா ஜுவலர்ஸ் நிறுவனத்தார் ரூபவாஹினி மூலம் வழங்கும் இந்நிகழ்ச்சி இப்படி இரசிகர்களது வெறுப்புக்குள்ளாகி வருவதன் காரணம், ஒளிபரப்பிய பாடல்களை மறுபடி மறுபடி ஒளிபரப்புவதனால்தான். நிகழ்ச்சித் தயாரிப்பாளரான திரு.ராமதாஸ் அவர்களால், புதுவசந்தம், சேரன் பாண்டியன், கோகுலம் போன்ற குறிப்பிட்ட படப்பாடல்கள் தொகுக்கப்படாத பொன்மாலைப் பொழுது நிகழ்ச்சிகளே இல்லை எனும் அளவுக்கு மேல் குறிப்பிட்ட படப் பாடல்கள் பல தடவை ஒளிபரப்பப்பட்டுள்ளன. ஆகவே இனிவரும் நிகழ்ச்சிகளிலாவது சம்பந்தப்பட்டவர்கள் இரசிகர்களது இரசனைக்குள்ளாகும் புதிய பாடல்களை ஒளிபரப்ப ஆவன செய்து தமிழ் இரசிகர்களது மனக்குறை தீர்ப்பார்கள் என நம்புகின்றேன். முரசு மூலம் முறையிடும்....

ரூபவாஹினி இரசிகன் (தமிழ் நிகழ்ச்சி)
கே.மோஹன்ராஜ்- கலஹா.

## முதலுதவி வகுப்பு

சென்.ஜோன் அம்புலன்ஸ் படையின் பொன்ஜியன் பிரிவால் தமிழ் மூலமான முதலுதவி வகுப்பு எதிர்வரும் 19-23ம் திகதிவரை ஐந்து நாட்கள் 8 மணி-12 மணி வரை நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்புகிறவர்கள் கொ/ஆமர் வீதி கிரீன் லேனில் அமைந்துள்ள கொட்டாஞ்சேனை முஸ்லிம் வித்தியாலயத்திற்கு 19ம் திகதி காலை 8 மணிக்கு சமுகம் தரும்படி வேண்டுகிறேன்.

Bonjean Division, Colombo-15.


**விற்பனைக்கு**

3 H.P. ஐஸ்பழம் தயாரிக்கும் மெசினறி சகல உபகரணங்களுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்-
63 Seaview Road,
Trincomalee.

நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 492/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 251/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 128/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

விளம்பர மேலாளர்
இல.5, காவிந்த பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-06.

Advertising Manager
No.5, Kavinda Place,
Kirulapone
Colombo-06.

Phone 852041

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இரண்டாவது சுற்றுப் பேச்சு இணக்கமாய் தொடருமா?



## இந்தியாமீது புலிகளின் சந்தேகம்

நாரதர் எக்ஸ்ரே ரிப்போர்ட்

நத்தார் திருநாளுக்கு முன்பாக புலிகளோடு இரண்டாவது சுற்றுப் பேச்சு ஆரம்பமாகும் என்று கூறுகிறது அரச தரப்பு.

பேசவந்தால் பேசுவோம் என்று புலிகள் தரப்பிலிருந்து கூறப்படுகிறது.

அதேசமயம் புதிய அரசின் மீதான நம்பிக்கையீனங்களையும் புலிகள் மிகப் பரவலாக யாழ்ப்பாணத்தில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

முதல் சுற்றுப் பேச்சின் போது புதிய அரச ஏற்றிப் போற்றாவிட்டாலும், தூற்றிப் பேசாத தன்மை புலிகளின் தரப்பில் காணப்பட்டது.

தற்போதும் அரச தரப்பினர் புலிகள் மீது பகிரங்கமாக குறை கூறவில்லை.

அரசுக்கும், படைகளுக்கும் எதிரான புலிகளின் குற்றச்சாட்டுக்களை அறியாதது போலவே அரச தரப்பு நடந்துகொள்கிறது.

மாவீரர் தினத்தில் பிரபாவின் உரை அரசாங்கத்திற்கும் கிடைத்திருக்கும்.

ஜனாதிபதி சந்திரிக்கா பற்றிய அதிருப்தி பிரபாவின் உரையில் காணப்படுகிறது.

அவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல முயன்று புலிகளுடன் முரண்பாடு தொடங்கி விட்டது என்று காட்ட அரசு விரும்பவில்லை.

பேசிப் பார்க்கலாம்; பேச்சைத் தொடரா விட்டால் தமது தேர்தல் கால பிரசாரங்கள் உடனடியாக புஸ்வாணமாகிவிட்டது போலத் தெரியும் என்றுதான் அரச தரப்பு நினைக்கும்.

புலிகளுக்கோ வேறு விதமான சூழ்நிலை. ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலான தமிழர்கள் ஜனாதிபதி சந்திரிக்காவை ஆதரித்துள்ளனர்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் புதிய அரசு இனப்பிரச்சனையைத் தீர்க்கும் என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது.

அது தவறான அபிப்பிராயம் என்று புலிகள் நிரூபிக்கவேண்டுமானால் புதிய அரசை பேச்சு மேசையில் வைத்து திணறச் செய்யவேண்டும்.

இரண்டாவது கட்டப் பேச்சின்போது அரச தரப்பை சங்கடப்படுத்தக்கூடிய கோரிக்கைகளை புலிகள் கையில் வைத்திருக்கிறார்கள்.

தமது மூத்த தளபதி மல்லியின் தலை துண்டிக்கப்பட்ட விவகாரத்தை கிளப்பி புலிகள் தரப்பு உணர்ச்சிவசப்படும்போது அரச தரப்பினர் தமது தலையைச் சொறிய வேண்டியிருக்கும்.

படைத்தரப்பு மீது பலத்த கண்டனங்களை புலிகள் எழுப்புவார்கள்.

'பாதுகாப்பு அமைச்சு முழுதாக வரவில்லை. ஜனாதிபதி வேறு கட்சிக்காரர்' என்று சென்ற முறை சொன்னதுபோல் சொல்லிவிட்டு வரமுடியாது.

பிரதமராக இருந்தபோது சந்திரிக்கா படையினரை விமர்சித்து பேட்டியளித்தார். அப்போதே அதிருப்திகள் ஏற்பட்டன. அதனால் படையினர்மீது நம்பிக்கை உண்டு என்று அவர் உடனே உரத்துக் கூற வேண்டியதாகிவிட்டது.

இப்போது அவரே ஜனாதிபதி. அவரே படைகளுக்கு பொறுப்பானவர். இந்த நிலையில் புலிகளின் திருப்திக்காக படைகளுக்குள் மாற்றம் செய்யவோ, அல்லது படையினரின் நடவடிக்கைகளைக் குறைகூறவோ அவர் முன்வரமாட்டார்.

அடுத்தது போக்குவரத்துப் பாதை விவகாரம். பூநகரி பாதையைத் திறப்பதானால் இராணுவ முகாமை விலக்கிக் கொள்வது பற்றி யோசிக்கலாம் என்று முன்னர் பிரதமராக இருந்தபோது சந்திரிக்கா கூறியிருந்தார்.

காமினி கொலைக்கு முன்பாகவே அக்கருத்தை வெளியிட்டிருந்தார்.

புலிகளை முற்றாக நம்பிவிடக்கூடாது என்று படைத்தரப்பு அப்போது கூறியதை சந்திரிக்கா முழுதாக ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்.

படைத்தரப்பின் கருத்திலும் உண்மையுண்டு. புலிகளை நம்பி கட்டுப்பாட்டில் உள்ள நிலைகளை கைவிடமுடியாது என்ற எண்ணம் காமினி கொலைக்குப்பின் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் ஏற்பட்டிருக்கலாம்.

புலிகளைப் பொறுத்தவரைகூட தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து மிகச் சுலபமாக மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள்.

சுலபமான போக்குவரத்து ஏற்படுமானால் புலிகளது பாஸ் முறை மீதும், மக்களது வெளியேற்றத்தைத் தடுக்கும் கட்டுப்பாட்டு விதிகள் மீதும் மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்.

பாதை திறந்தாலும் புலிகள் போக விடுகிறார்கள் இல்லையே என்று மக்கள் பேசிக்கொள்ள ஆரம்பித்து விடுவர்.

எந்தப்பாதை திறக்கப்பட்டாலும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு செல்வது போன்ற புலிகளின் சட்டவிதிகள் தளர்த்தப்படமாட்டாது.

தற்போது மாதம் ஒன்றுக்கு பல கோடி ரூபாய்கள் கிளாலி போக்குவரத்துப் பாதை மூலமாக புலிகள் அமைப்பினருக்கு சொந்த நிதியாகச் சேருகின்றது.

பொருட்களுக்கான வரிகள், படகுச் சேவைகள் போன்றவற்றின் மூலம் அந்த நிதி சேருகிறது.

ஒரு வர்த்தகர் கொழும்பிலிருந்து பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்ல வேண்டுமானால் கிட்டத்தட்ட அதே பெறுமதியான வரியைப் புலிகளுக்குச் செலுத்தவேண்டும்.

இவ்வாறு சேரும் வருமானமே மாதம் ஒன்றுக்கு சராசரி ஐந்து கோடிக்கு மேல் இருக்கும் என்று அறியமுடிகிறது.

இதுதவிர சீமெந்து போன்ற பொருட்கள் புலிகளால் கூட்டுறவு சங்கத்திடம் இருந்து பெறப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றின் வருமானமும் தனியாக கணக்கில் சேருகிறது.

சுலபமான போக்குவரத்துப்பாதை மூலம் வருமான வீழ்ச்சி புலிகளுக்கு ஏற்படும்.

பிரச்சனைக்குத் தீர்வு வராது என்று புலிகள் நம்புவார்களேயானால், மீண்டும் போர் தொடர அவர்களுக்கு நிதித்தேவை முக்கியமானதாக இருக்கும்.


எனவே தமக்கு நிதிவரும் வழிகள் மூடப்படுவதை புலிகள் மனப்பூர்வமாக விரும்புவார்கள் என்று சொல்வதற்கில்லை.

எனினும், மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சனை என்ற வகையில் போக்குவரத்துப் பாதைத் திறப்பு பற்றி புலிகள் பேசிக் கொண்டிருப்பதுதான் அவர்களின் விவேகம்.

அரசாங்கத்தால் பாதையைத் திறக்க முடியாத வகையில் போக்குவரத்துப் பாதை பற்றிய நிபந்தனைகளை புலிகள் முன்வைப்பார்கள் என்பதுதான் உண்மை.

அரசு பாதையைத் திறக்க விரும்பவில்லை என்று இறுதியாக கதையை முடிப்பார்கள் புலிகள்.

போக்குவரத்துப் பாதையைவிட போர் நிறுத்தம் கோருவதிலும், பொருட்களை தருவிப்பதிலுமே புலிகள் முதல்கட்டச் சுற்றுப் பேச்சில் வலியுறுத்தினார்கள்.



பொருளாதாரத் தடை விடயத்தில் சகல தமிழ் கட்சிகளும் தடை விலக்கலை பாராட்டியுள்ளபோதும் புலிகள் வித்தியாசமாக சொல்லுகிறார்கள்.

"இது நல்லதுதான், ஆனால் போதுமானதாக இல்லை" என்பது புலிகளது நிலை. அதாவது ஆஹா ஓஹோ என்று பாராட்டி விடாமல் ஒரு பகுதியில் அதிருப்தியையும் குறித்துக்காட்ட புலிகள் தவறுவதில்லை.

பின்னர் அரசோடு முரண்படும்போது எடுத்துக்காட்ட உதவும் வகையில் கவனத்தோடுதான் புலிகள் பாராட்டும்போதும் அதில் அதிருப்தி கலந்து விடுவார்கள்.

உதாரணமாக, பிரதமர் சந்திரிக்காவுக்கு பிரபா எழுதிய கடிதத்தில் பொருளாதாரத் தடையில் ஒரு பகுதியை வரவேற்பதாக கூறிய அதேசமயம், அதே கடிதத்தில் முற்றான பொருளாதார விலக்கலை எதிர்பார்ப்பதாகக் கூறியிருந்தார்.

அதனை யாரும் கருத்தில் கொள்ளாமல் 'பொருளாதார தடை விலகலுக்கு பிரபா வரவேற்பு' என்பதை மட்டுமே முக்கியத்துவப் படுத்தி செய்திகளாக்கினார்கள். அரசுக்கும் அப்படியான செய்தி தேவைப்பட்டது.

ஆனால், தற்போது புலிகளும், பிரபாவும், 'பொருளாதார தடை விலக்கலை பூரணமாக்க அரசு தயாராக இல்லை. ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியிருந்தோம்' என்று பேசியுள்ளனர்.

ஆக, இப்போது எடுத்துக்காட்டி அரசை குற்றம் சாட்ட உபயோகமாகும் விடயத்தை முன்னைய பாராட்டுக் கடிதத்தில் புலிகள் புத்திசாலித்தனமாக குறிப்பிட்டிருந்தார்கள் என்பது தெளிவு.

புலிகளது விவேகத்தை சரியாக மதிப்பிடத் தெரிந்தால் முற்றான பொருளாதாரத் தடை விலக்கல் கோருவதே புலிகளது அன்றைய கடிதத்தின் முக்கிய அம்சமேதவிர, பிரதமராக இருந்த சந்திரிக்காவை பாராட்டுவதல்ல என்று அப்போதே புரிந்திருக்கும்.

இரண்டாவது சுற்றுப் பேச்சில் புலிகள் தரப்பு முற்றுமுழுதான பொருளாதாரத் தடை நீக்கத்தையும் வலியுறுத்தும்.

ஆனால், அரச தரப்பு அதற்கு சம்மதிப்பது இயலாத காரியம்.

போர் நிறுத்தத்தைப் பொறுத்தவரை அரச தரப்புக்கு அதில் ஆர்வம் இல்லையென்று சொல்லமுடியாது.

ஆனால், கடந்தகால போர் நிறுத்தங்கள் போல் முடிவு புலிகளுக்கு சாதகமாகி விடுமோ என்ற படைத்தரப்பின் சந்தேகத்தை தீர்த்துவைப்பதில்தான் சிக்கல்கள் உள்ளன. அதில் வெற்றி பெற்றால் அரசு தற்காலிக போர்நிறுத்தத்திற்கு முன்வரக்கூடும்.

முதல் சுற்றுப் பேச்சின்போது 'டாக்டர்களை அனுப்புகிறோம், மருந்துகளை அனுப்புகிறோம்' என்று சொல்லிவிட்டு அரச தரப்பு பிரதிநிதிகள் திரும்பியிருந்தார்கள்.

அதனைச் செய்துவிட்டு அதன்மூலம் ஏற்படும் சற்று இணக்கமான சூழலில் யாழ் செல்லவே முதல் கட்டப்பேச்சில் கலந்துகொண்ட அரச பிரதிநிதிகள் விரும்புவர்.

எப்படியோ, இரண்டாவது சுற்றுப் பேச்சு என்று கூறினாலும்கூட, மீண்டும் முதலிலிருந்து விசயங்களை பேச ஆரம்பிக்கும் பேச்சாகவே அமையும்.

□□

இந்தியா 'மறப்போம் மன்னிப்போம்' என்று ஒருவேளை அறிவித்தாலும்கூட புலிகள் அந்தக் கூற்றை சந்தேகிக்கவே செய்வர்.

ராஜிவ் கொலையை இந்தியா சுலபத்தில் மறந்துவிடாது என்ற அடிப்படையில் அந்த சந்தேகமும் எழுவது இயல்பு.

இந்தியா மீது புலிகள் தொடர்ந்தும் கண்டனங்களைத் தொடுத்து வருகிறார்கள்.

'இனப்பிரச்சனை தீருவதை இந்தியா விரும்பிவல்லை' என்று புலிகளது நவம்பர் மாத (1994) 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை அடித்துக் கூறியிருக்கிறது.

தனக்கு சவால்விடும் ஒரு சக்தியாக இலங்கையில் புலிகள் அமைப்பு பலத்தோடு இருப்பதை இந்தியா விரும்பாது என்பது வெளிப்படை.

இந்த நிலையில், கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் 'பிரபாவைக் கொல்ல இந்தியா திட்டமா' என்று ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.

ராஜிவ் கொலை வழக்கில் தேடப்படும் ஒருவராக பிரபாவை இந்தியா அறிவித்தபின் பிரபாகரனும் இந்தியாவால் தனக்கு எதிரான சதிவலை விரிக்கப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறார்.

புலிகளது பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவை இப்போது பலர் மறந்து போனார்கள்.

மாத்தையாவும் மறைந்துபோனார். உயிரோடு இருக்கிறாரா என்பது பற்றி ஒரு தகவல்கூட கிடையாது.

மாத்தையா இந்தியாவோடு சேர்ந்து தலைமையை அழித்துவிடத் திட்டமிட்டதாகவே வாய்மூலமான குற்றச்சாட்டுக்கள் புலிகளால் கூறப்பட்டு வருகின்றன.

குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால் பிரபாவைக் கொல்ல ஏற்கனவே மிக திட்டமிட்ட சதி நடந்திருக்கிறது, அதுவும் உள்சதி மூலம் ஒழித்துக்கட்டும் சதி நடந்திருக்கிறது என்று அர்த்தம்.

ஆனால், அதேசமயம் மாத்தையாவும் இந்தியாமீது கண்டனம் தொடுத்தவர் என்பதையும், ராஜிவ் கொலையில் புலிகளுக்கு சம்பந்தமில்லை என்று முற்றாக மறுத்து, பொட்டம்மான் என்று ஒருவர் தமது இயக்கத்தில் இல்லை என்று கூறியவர் என்பதையும் மறந்துவிடமுடியாது.

எப்படியிருப்பினும் மாத்தையா காணாமல் போனதற்கு கூறப்படும் வலுவான நியாயமாக இந்தியச் சதி பற்றிய கூற்று இருக்கிறது.

பிரபாவை கொல்லவேண்டும் என்று இந்தியா நினைக்கிறது என்பதற்கு ஆதாரமாக காட்டக்கூடிய வேறு சம்பவங்கள் எதுவும் இல்லை.

ஆனால், தன்னால் தேடப்படும் ஒருவரோடு இலங்கை அரசு பேசித் தீர்வு காணுவது இந்தியாவுக்கு ஒரு கௌரவப் பிரச்சனைதான்.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடமோ அல்லது வேறு யாரிடமோ இந்தியா அதனை நறுக்குத் தெறித்தாற்போல சொல்லும் என்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கைப் பிரச்சனையில் எப்போதுமே இந்தியா தானாக வந்து நேரடியாக தலையிடுவதாக காட்டிக்கொள்ள விரும்பியது கிடையாது.

1985இல் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் இலங்கை அரசையும், தமிழ் அமைப்புக்களையும் பேச வைத்தது கூட நேரடித்தலையீடல்ல; வேண்டுமானால் மத்தியஸ்தம் செய்துவைக்கிறோம் என்று காட்டத்தான்.

இந்திய-இலங்கை ஒப்பந்தமும் இந்தியப்படை வருகையும்கூட இலங்கை அரசின் விருப்பப்படி நடந்த காரியமாகவே இந்தியாவால் உருவாக்கப்பட்டது.

இலங்கை அரசும், அதற்கெதிராகப் போராடும் தமிழ் அமைப்புக்களும் நம்பிக்கைவைத்து மத்தியஸ்தம் செய்ய அழைக்கப்படும் நண்பனாகவே இந்தியா நடந்துகொண்டது.

இலங்கை அரசு அதனை விரும்பாத போது தமிழ் அமைப்புக்களை ஆயுதபாணியாக்கி இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுத்து தன்னை நோக்கி வரவைக்கவும் இந்தியா தவறவில்லை.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## அதிரடி அய்யாத்துரை



மலைப்பகுதித் தனித்துவத் தலைவர் அதிகாரமட்டம் தன்னைச் சரியாக கவனிக்கேல்லை என்ற வருத்தத்திலை இருக்கிறாராம். முந்தி மாதிரி உற்சாகக்களையும் அவரிட்டை 'மிஸ்ஸிங்' காம். 'அவசரப்பட்டுவிட்டேனோ தெரியேல்லை' எண்டு நெருக்கமான ஆட்களிட்டை சொல்லி வருத்தப்படுகிறதா பச்சை அணிக்காரர் சிலர் சொல்லுகினம்.

புனிதமானவர் இலங்கைக்கு வரேக்கை ரெண்டு எழுத்தாரை சமாளிச்சு வைச்சிருக்க வேணுமே எண்ட கவலைதான் மேல்மட்டத்திலை பெரும் கவலையாம். நந்தார் பேச்சு அதுக்கு ஒரு வழி காட்டுமோ எண்டு பார்ப்பம்.

சுவிஸ் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பலாமோ இல்லையோ எண்டு நோட்டம் பார்க்க ஒரு குழு யாழ் போனதாம். விசயம் அறிந்த சுவிஸ் அகதிகள் சிலருக்கு கவலையாப் போச்சுதாம். 'கொழும்பிலைதான் பாதுகாப்பில்லை. —யாழ்ப்பாணத்திற்கு அனுப்புங்கோ' எண்டு ரெண்டு எழுத்தார் சொல்லிப்போட்டா என்ன செய்யிறது எண்டதுதான் கவலையாம்.

விலை குறைப்பை தொலைக்காட்சி, வானொலியிலை கேட்டுப் போட்டு கடைக்காராரிட்டப் போய் அதே விலைக்கு அரிசி, மா, பருப்பு கேட்டா அவை முறைக்கிற முறைப்பே சரியில்லை. 'வாங்கிற விலைக்கு குறைவா வியாபாரம் செய்ய நாங்கள் செய்யிறது சமூக சேவையில்லை. சமூக சேவை செய்தா அரசாங்கம் எ. கடை குடும்பங்களை கவனிக்குமோ' எண்டெல்லாம் பல தினுசா கேள்வியள் வருகுது. எனக்கொரு சந்தேகம்! இதிலை, பொய் சொல்லுறது யார்? தொலைக்காட்சி, வானொலிகளோ? அல்லது கடைக்காரரோ?

உருளைக்கிழங்கு சாப்பிட வேணுமெண்டா ஓவர்டைம் செய்ய வேண்டிக்கிடக்கு எண்டு கவலையாய்ச் சொல்லுகினம் பலர். கிழங்கு விலை படுவேகமாய் ஏறுது. எட்டிப்பிடிக்க நினைச்சாலும் கமுகு மரத்திலே ஏறி சறுக்கிவாற மாதிரி விலையைப் பிடிக்க முடியாமல் இறங்க வேண்டிக்கிடக்கு! பிளீஸ்... உணவமைச்சர் ஏதாவது செய்யுங்கோ- குயிக் ஆக்ஷன்!

பல்லு இல்லாத ஆக்கள் பாண் சாப்பிட லாயக்கில்லை எண்டு பேக்கரிக்காரர் சிலர் திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்தமாதிரித்தான் தெரியுது. முதலிலை சைஸ் மாறிப்போச்சு. இரண்டாம் கட்டமாய் தரம் மாறிப்போச்சு. மூன்றாம் கட்டமாய்- 'உங்கள் பல் ஆரோக்கியத்தை பரிட்சித்துப் பார்க்க நாடுங்கள்' என்று விளம்பரம் செய்யக்கூடிய முரட்டுப் பாணாய் மாறிப்போச்சு. பாணும் நிலவும் ஒன்று. அதைப் பார்த்தால் புரியும் இன்று! நிலவும் எந்த நாளும் ஒரே சைஸ், ஒரே குணம் எண்டு இருக்கிறேல்லையல்லோ!

உண்மைகள் வெளிவரும் விசயம் சிலருக்கு சகிக்கேல்லையாம். ஆனால் என்ன பாருங்கோ செய்யிறது? ஆதாரமும், அனுபவப்பட்டவையும் சாட்சிகளா இருக்கினமல்லோ! தனிப்பட்ட ரீதியா யாரையும் கிண்டினாத்தான் கூடாது. பொதுப்பட்ட விசயங்களிலை சரி-பிழை பேச்சுக்கள் வரத்தானே செய்யும் பாருங்கோ. ஆதாரம் இருந்தா மறுங்கோ. அதைவிட்டுப் போட்டு முணுமுணுத்துத் திரிய வேண்டாம் எண்டுதான் நான் சொல்லுவன்.

தனித்தவ மலையக அணியின் செயலர் நடத்திய போக்குவரத்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தை திருப்பி எடுத்தாச்சாம். பச்சை அணிக்கு பொல்லைக் கொடுக்கக்கூடாது எண்டு நினைச்சுத்தான் அப்பிடிச் செய்யப்பட்டதாம். பகிரங்கமாய் கண்டிக்காவிட்டாலும் மறைமுகமாய் தனித்துவ தலைவருக்கு எதிரா பச்சை அணி பிரசாரம் செய்யத் தவறேல்லை.

தமிழ் நாட்டில் விவகாரமாய் அடிபடும் சாமியாரினி திவ்யா சமீபத்திலை கொழும்புக்கு வந்து போன விசயம் தெரியுமோ? மாதாஜி எண்டு அவ காலிலை விழுந்த முக்கிய புள்ளிகள் இங்கும் இருக்கினமுங்கோ. தமிழ் நாட்டுக்காரர் மட்டும்தான் ஏமாளிகள் எண்டு நினைக்காதேயுங்கோ. மு. வீரையன் என்ற தமிழக கவிஞரின் பாடல் ஒன்று ஞாபகத்திற்கு வருகுது-

"கடவுளை வளர்த்தே ஏய்க்கும்
கயவரை ஓட்ட வேண்டும்;
கடவுளின் பெயரைச் சொல்லி
காசுகள் பெறுகின் றோரை
கடவுளின் கோயி லுள்ளே
கடுஞ்சிறை யாக்க வேண்டும்;
கடவுளே தடுத்தா லும் என்
கருத்தினைக் கூற வேண்டும்!"

என்ன பாருங்கோ பொருத்தமாய் இருக்கல்லோ!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

## அற்புதன் 5

### பத்மநாதனுக்கு முன்னர்

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் தன்மீது உடனடியாக குறிவைக்கப்படும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

அவரது வீட்டின் முன்பாக காரை நிறுத்திவிட்டு கேற் திறப்பதற்காக தாமதித்த விநாடிகளில் முதல் சூடு விழுந்தது.

கைத்துப்பாக்கியை எடுத்துக் கொள்ளக்கூட அவகாசம் இல்லை.

கார்க் கதவைத் திறந்து இறங்கி ஓடிய பத்மநாதன் மீது மேலும் பல துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன.

அவர் பலியானார்.

பொலிஸ் வட்டாரம் அதிர்ச்சி

## தவறிய குறி இரண்டு!

யடைந்தது. தமிழ் பத்திரிகை ஒன்று, சூடுபட்ட நிலையிலும் இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைஞர்களை சிறிது தூரம் துரத்திச் சென்றார் என்று செய்தி போட்டது.

'இன்ஸ்பெக்டர் பத்மநாதன், பஸ்தியாம் பிள்ளை போன்றவர்கள் அப்போது 'ஹீரோக்கள்' போலவே மதிக்கப் பட்டார்கள்.

இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவது மக்களால் வியப்பாக நோக்கப்பட்டது. அதே நேரம் பொலிசார் அவர்களை சுலபமாக பிடித்துவிடக்கூடும் என்றும் நம்பப்பட்டது.

1978ல் நடந்து முடிந்த பத்மநாதன் கொலை முக்கியமானதாக இருந்த போதும் (சென்ற வாரம் ஆண்டு தவறுதலாக 1976 என்று இடம் பெற்றுவிட்டது) அதற்கு முன்னரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவர் கொல்லப்பட்டிருந்தனர்.

அல்பிரட் துரையப்பா கொலை வழக்கின் துப்புத் துலக்கலில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் கருணாநிதி. இவர் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்.

1977ம் ஆண்டு பெப்ரவரி 14ம் திகதி கொன்ஸ்டபிள் கருணாநிதி மாவிட்டபுரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

துரையப்பா கொலை வழக்கில் துப்புத் துலக்கிய மேலும் இரு கொன்ஸ்டபிள்கள் ஒரே பெயரைக் கொண்டவர்கள்.

ஒருவர் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர். மற்றவர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்.

நோக்கம் ஒன்றுதான். துரையப்பா கொலைக்கு காரணமானவர்களைக் கண்டறிவது.

பெயரும் ஒன்றுதான், சண்முகநாதன்! இரண்டு சண்முகநாதன்களும் தமக்கு கிடைத்த ஒரு தகவலை ஆராய ஒன்றாகச் சேர்ந்து இணுவில் என்ற இடத்திற்குப் போனார்கள்.

சிவில் உடையில் இருந்த இரு சண்முகநாதன்களையும் இனம் கண்டு கொண்ட இளைஞர்கள் இருவர் சைக்கிளில் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

இணுவில் பஸ் நிலையம் நோக்கி நடந்துசென்ற இரு கொன்ஸ்டபிள்களும் திடீரென துப்பாக்கி வேட்டுக்களை எதிர்கொண்டனர்.

தமக்கு கிடைத்த தகவலை ஆராயவோ, அல்லது பஸ்சை பிடிக்கவோ சந்தர்ப்பமே இல்லாமல் இரு சண்முகநாதன்களும் பலியானார்கள்.

இது நடந்தது 18.05.77- நேரம் காலை 9.15 மணி.


கொன்ஸ்டபிள் கருணாநிதி மற்றும் கொன்ஸ்டபிள்கள் சண்முகநாதன் மற்றும் சண்முகநாதன் கொலைகளுக்கு காரணமானவர்கள் விடுதலைப் புலிகள்.

ஆனால், இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைக்கு காரணம் விடுதலைப் புலிகள் அல்ல.

### குட்டிமணி குழுவினர்

குட்டிமணி, தங்கத்துரை, சிறிசபாரத்னம், பெரியசோதி, சின்னச்சோதி போன்ற இளைஞர்கள் தாம் ஒரு தனிக் குழுவாக இயங்கிக்கொண்டிருந்தார்கள்.

ஆரம்பத்தில் இக் குழுவினரோடு பிரபாகரனும் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.



குட்டிமணி

பின்னர் 1974ம் ஆண்டளவில் அக்குழுவினரோடு தொடர்புகளை முறித்துக்கொண்டு **தமிழ் புதிய புலிகள்** இயக்கத்தில் இணைந்து கொண்டார்.

குட்டிமணி குவினரே இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைக்கு காரணமாக இருந்தனர்.

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைக்கு முன்பாக குட்டிமணி குழுவினரால் குறி வைக்கப்பட்டவர், அப்போது நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அருளம்பலம்.

தமிழ் காங்கிரஸ் கட்சி மூலமாக பாராளுமன்றம் சென்ற அருளம்பலம் பின்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தாவினார்.

ஒரேயொரு தடவை தனது கணவர் பாராளுமன்றம் செல்ல உதவுமாறு திருமதி அருளம்பலம் வாக்காளர்களிடம் வீடு வீடாகச் சென்று உருக்கமாக வேண்டிக்கொண்டார்.

"எங்கள் பலம் பொன்னம்பலம், எங்கள் பலம் அருளம்பலம்." 'போடு புள்ளடி சைக்கிளுக்கு நேரே' என்ற கோஷங்கள் அப்போது தேர்தல் காலத்தில் செவிகளுக்குள் வந்து விழும்.

உருகிப்போன நல்லூர் தொகுதி மக்கள் அருளம்பலத்துக்கு வாக்குகளை அள்ளிப் போட்டனர்.

## தவறாத குறி மூன்று!!

பாராளுமன்றம் சென்றவருக்கு ஆளும் கட்சிக்குச் செல்லும் ஆவலும் வந்துவிட கட்சி மாறிவிட்டார்.

### இரும்பு மனிதன்

அருளம்பலத்திற்கு முன்னர் நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் அமரர் டாக்டர் இ.எம்.வி. நாகநாதன்.

நாகநாதன் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர். 'இரும்பு மனிதன்' என்று அழைக்கப்பட்டவர்.

நாகநாதன் பாதி அகிம்சைவாதி- மீதி தீவிரவாதி.

> **துரையப்பா வழக்கில் அல்ல**
>
> இத் தொடரின் பல குறிப்புகளுக்கு ஆதார ஆவணங்கள் இருக்கின்றன. வேறு சில ஞாபக சக்தியை நம்பி எடுத்துத் தரப்படுபவை. சில சமயம் எழுதும் வேகத்தில் ஞாபக சக்தி தவறிழைத்துவிடலாம். உதாரணமாக அமரர் திருச்செல்வம் பற்றி கூறியபோது துரையப்பா வழக்கில் ஆஜராகி 'சிறிலங்கா சட்டங்கள் தமிழ் ஈழத்துக்கு பொருந்தாது' என அவர் வாதிட்டதாக குறிப்பிட்டிருந்தேன். தொடரை மீண்டும் திருப்பிப் பார்த்தபோது அது தவறு என்று மூளையில் உறைந்தது.
>
> துரையப்பா கொலை வழக்கில் கூட்டணித் தலைவர்கள் அமீர், சிவசிதம்பரம், நவரத்னம் உட்பட முக்கியமான சட்டத் தரணிகள் ஆஜரானது உண்மைதான். ஆனால், திருச்செல்வம் சிறிலங்கா சட்டம் தமிழ் ஈழத்துக்கு பொருந்தாது என வாதிட்டது துரையப்பா கொலை வழக்கில் அல்ல.
>
> தமிழ் ஈழம் கோரும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து, கைதான தமிழ் தலைவர்கள் மீதான வழக்கில்!
>
> 'ட்ரயல் அற்பார்' என்னும் விசேட நீதிமன்றத்தில் (ஜுரிகள் இல்லாத நீதிமன்றம்) அந்த வழக்கு நடந்தது. அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழ் ஈழம் என்ற சொல்லையே உச்சரிக்காமல் சட்டவாதம் செய்தார். அமரர் திருச்செல்வம் 'தமிழ் ஈழம் இறைமையுள்ள நாடு' என்று எடுத்துக்காட்டி வாதம் செய்தார். தமிழ் ஈழக் கோரிக்கைக்கு மிகப் பெரும் பிரசார லாபமாக அமைந்த வழக்கு அது.

சத்தியாக்கிரகப் போராட்டங்களை தமிழரசுக் கட்சி நடத்தும்போது அடிபட்டாலும் மிதிபட்டாலும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் சகித்துக்கொண்டிருப்பார்கள்.

நாகநாதன் பதிலடி கொடுக்க எழுந்து விடுவார்.

யாழ் கச்சேரிக்கு முன் நடந்த சாத்வீகப் போராட்டத்தில் பொலிஸ் ஜீப்பின் முன்பாக குறுக்கே படுத்துவிட்டார் நாகநாதன்.

ஆத்திரம் அடைந்த பொலிஸ் அதிகாரி குண்டாந்தடியால் நாகநாதனை அடித்தார். அடி கழுத்தின் பின்புறம் விழுந்தது.

நாகநாதன் அசையவில்லை. குண்டாந்தடிதான் உடைந்தது என்று அப்போது பேசப்பட்டது.

அந்த அடியில் பட்ட உட்காயமும் இரும்பு மனிதன் நாகநாதனின் விரைவான இழப்புக்கு காரணம் என்று அப்போது நம்பப்பட்டது.

அமரர் நாகநாதன் போன்றவர்களின் செந்நீரும், வியர்வையும்தான் தமிழ் தேசிய எழுச்சிக்கும் உணர்ச்சிக்கும் உரமாக அமைந்தன.

அருளம்பலம் பாராளுமன்ற உறுப்பினரானார். கட்சி மாறினார்.

1972ல் தமிழரசு கட்சியும்-தமிழ் காங்கிரசும் ஒற்றுமை கண்டன. தமிழர் கூட்டு முன்னணி (TUF) உருவாகியது. (இ.தொ.காவும் கூட்டணியில் ஒரு அங்கமாக இருந்த போதும் வடக்கு-கிழக்கு அரசியலுக்குள் தலைபோடவில்லை)

கூட்டணி மேடைகளில் அருளம்பலம் 'கள்ளன்', 'துரோகி' போன்ற வார்த்தைகளால் அர்ச்சிக்கப்பட்டார்.

### செத்த பாம்புக்கு சொல் அடி

நல்லூரை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி நடத்திய யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி தமிழ் மன்னன் சங்கிலியன்.

அந்த சங்கிலியனை காட்டிக்கொடுத்தவனும் ஒரு தமிழன்.

அந்த எட்டப்பனின் மறு பிறவியாகவே அருளம்பலம் கூட்டணியினரால் சுட்டிக் காட்டப்பட்டார்.

அருளம்பலம் அரசியல் செல்வாக்குப் படைத்த ஒருவரல்ல.

அதுவும் கட்சிமாறியபின் அவர் ஒரு செத்த பாம்பு.

ஆனாலும் செத்த பாம்பையும் விடாமல் கூட்டணித் தலைவர்கள் சொல்லால் அடித்துக் கொண்டிருந்தனர்.

அரசியலில் தமக்கு எதிராக கடைவிரித்த எவரையுமே கூட்டணித் தலைவர்களால் சகித்துக்கொள்ள முடியாமல் இருந்தது.

தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் தனித் தனியே அரசியல் நடத்தியபோது அக் கட்சிகளைச் சார்ந்தோர் அரசில் அங்கம் வகித்தார்கள். அமைச்சர் பதவிகளும் பெற்றார்கள்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அமைச்சராக இருந்திருக்கிறார்.

தமிழரசுக் கட்சி பிரமுகராக இருந்த அமரர் திருச்செல்வமும் அமைச்சராக இருந்திருக்கிறார்.

வேறு கட்சிகளைச் சேர்ந்த தமிழர்கள் அரசோடு இருப்பதையோ, அமைச்சர்களாக இருந்ததையோ அந்த இரு கட்சிகளாலுமே சகிக்க முடியாமல் போய்விட்டது.

கூட்டணியாகியபின் இரு கட்சிகளும் ஒன்றாய் நின்று ஒரே குரலில் துரோகிப் பட்டியலை ஒப்புவித்தார்கள்.

தாம் அமைச்சர்களாக இருந்தது சாணக்கிய தந்திரம்.

பிறகு தமிழர்கள் அமைச்சர்களானால் அது காட்டிக்கொடுக்கும் காரியம்.

அதுதான் தமிழர்களுக்கு ஒரு குறிப்பிட்டகாலம் தலைவர்களாக இருந்தவர்களது அகராதி.

அரசோடு சேர்ந்த அருளம்பலமும் கூட்டணியின் துரோகிகள் பட்டியலில் இடம்பெற்று தீவிரவாத இளைஞர் குழுக்களது கொலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்.

1976ல் குட்டிமணி குழுவினரால் அருளம்பலம் சுடப்பட்டார்.

சூடுபட்டவுடன் அருளம்பலம் சுருண்டு விழுந்துவிட்டார்.

செத்துவிட்டார் என்று நினைத்து குட்டிமணி குழுவினர் சென்றுவிட்டனர்.

ஆனால் அருளம்பலம் பிழைத்துக் கொண்டார்!

இந்தக் கொலை முயற்சியை கூட்டணியினர் கண்டித்ததாக நினைவில்லை.

### வலதுகரம் வீழ்ந்தது


அதே ஆண்டு குட்டிமணி குழுவினரால் குறிவைக்கப்பட்டு தப்பிக்கொண்ட இன்னொருவர் கு.விநோதன்.

இவர் உடுவில் தொகுதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக இருந்தவர்.

அருளம்பலத்தின் வலதுகரமாக இருந்தவர் தாடித் தங்கராஜா.

கூட்டணி சார்பான இளைஞர்கள் பலர் தொடர்பாக பொலிசாருக்கு தகவல் கொடுத்து வந்தார்.

1977ம் ஆண்டளவில் கொக்குவிலில் இருந்த அவரது வீட்டுக்குள் புகுந்த குட்டிமணி குழுவினர் சரமாரியாக சுட்டுத் தீர்த்தனர்.



தங்கத்துரை

தாடித் தங்கராஜாவின் கதை முடிந்தது. அரசியல்வாதிகளுக்கு எதிரான கொலை நடவடிக்கைகளில் ஒன்றாக தாடித் தங்கராஜாவின் கொலையையும் சேர்த்துக்கொள்ளலாம்.

1978ம் ஆண்டில் குட்டிமணி குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு நடவடிக்கை பொலிஸ் அதிகாரி குருசாமிக்கு குறிவைப்பு!

'சுடடா' என்றார் குட்டிமணி.

தயங்கி நின்றார் ஒபரோய் தேவன்! பிறகென்ன நடந்தது? அது அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்)

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

# 'பேசாதே என்று இந்தியா தடுக்காது' ஆனால்........................

ஆனால், இப்போது நிலமை வேறாகி விட்டது.

இந்தியா தேவையில்லை. தரகர்கள் வேண்டாம் என்று புலிகள் கூறுகிறார்கள்.

இலங்கை அரசு விரும்பினாலும் இந்திய மத்தியஸ்தத்தை புலிகள் நினைத்துப்பார்க்கக்கூட தயாராக இல்லை.

புலிகளைப் பொறுத்தவரை தாம் ஒரு வேண்டாத விருந்தாளியாகிவிட்டதை இந்தியா அறியும்.

அதற்காக இந்தியா இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனை எப்படிப் போனால் என்னவென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு விடும் என்று நினைக்கக்கூடாது.

இந்தியாவின் தேசிய நலனும் அதன் அயல்நாடுகளது உள்நாட்டுப் பிரச்சனைகளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது.

அதுவும், புலிகள் இந்தியாவின் அரசியல் தலைமைத்துவத்திற்கே அச்சுறுத்தல் விடுமளவுக்கு தமது கைகளை நீட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இந்தியா முன்பு புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புகளுக்களும் உதவி செய்ய ஒருபகுதி நிதியைச் செலவிட்டது.

இப்போது புலிகளிடம் இருந்துவரும் அச்சுறுத்தலைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக் கைகளுக்கு ஒரு பகுதி நிதியைச் செலவிடுகிறது.

புலிகளை எதிர்த்துப் போராட தமிழ் நாடு காவல்துறைக்கு மத்திய அரசு தரும் நிதி போதாது என்று தமிழக முதல்வர் வேறு குறை கூறிக்கொண்டிருக்கிறார்.

எனவே- நேரடியாக தலையிடாவிட்டாலும் மிக உன்னிப்பாக அரசு-புலிகள் பேச்சுப் பற்றி இந்தியா அவதானித்துக் கொண்டிருக்கிறது.

மறுபுறம், புலிகளோடு பேசவேண்டாம் என்று நேரடியாகக் கூறுவதைவிட, பட்டறியட்டும் என்று பேசவிட்டு வேடிக்கை பார்க்கவும் இந்தியா நினைக்கலாம்.

'பிரபாவால் சமரச தீர்வுக்கு வரமுடியாது. பிரபாவை திருப்திப்படுத்தும் தீர்வை இலங்கை அரசு கொடுக்கவும் முடியாது என்று இந்தியா நினைக்கலாம். அப்படி நம்புவதற்கு புலிகளுடனான தனது கடந்த கால உறவின் அனுபவங்களை இந்தியா நம்பியிருக்கக்கூடும்.

எனவே- தடுப்பதைவிட பேசிப்பார்த்து காயத்தோடு திரும்பும் இலங்கை அரசுக்கு அதன்பின்னர் இந்திய உதவியின் அவசியத்தை ஆழமாக உணர வாய்ப்பு ஏற்படும் என்று இந்தியா எதிர்பார்க்குமானால், பேச்சு முயற்சிகளை ஊக்குவிக்காவிட்டாலும் குறுக்கே நிற்காது.

மறுபுறம், பிரபாகரன் உள்ளவரை புலிகளோடு நல்லுறவு கொள்வது என்பது நடக்காத காரியம் என்று இந்தியா நினைக்கலாம்.

அதேநேரம் புலிகள் தீர்க்கமான சக்தியாக இருப்பதால் தீர்வு முயற்சிகளில் அவர்களை கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியத்தை புறக்கணிக்க முடியாதிருப்பதும் இந்தியாவுக்கு விரும்பத்தகாத நிலவரம்தான்.

பிரபா இல்லாவிட்டால் ராஜீவ் கொலை பழியை அவர்மீது போட்டுவிட்டு புதிய தலைமையோடு **"மறப்போம் மன்னிப்போம்"** பாணியில் பேசுவது இந்தியாவுக்கு சுலபம்.

ஆக, பிரபாவைக் கொல்ல இந்தியா சதி செய்கிறது என்ற தகவலில் உண்மை இருக்கிறதோ இல்லையோ, பிரபா உயிரோடு இருப்பது இந்தியாவுக்கு வெல்லமல்ல என்பது மட்டும் தெளிவு.

இதேசமயம் ஜனாதிபதி சந்திரிக்கா தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக இந்திய விஜயத்தை அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் விஜயம் குறித்து யாழ்ப்பாணத்தில் புலிகளது பிரசார சாதனங்கள் சந்தேகங்கள் வெளியிட்டுள்ளன.

'யாழ் வந்து பேசப்போகிறேன்' என்றவர் இப்போது இந்தியாவுக்கு செல்லப் போகிறேன்' என்கிறார் என்று திரு.அன்ரன் பாலசிங்கம் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைப் பற்றி பேசியிருக்கிறார்.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு செல்லமுன் அளித்த பேட்டியொன்றில், "புலிகள் தனது விஜயத்தையிட்டு சந்தேகப்படவேண்டாம். இதில் எந்த உள்நோக்கமும் கிடையாது" என்று கூறியிருக்கிறார்.

யாழ் செல்லத்தான் புலிகளிடம் அரசு விசா பெற வேண்டும். இப்போது வெளிநாடு செல்வதானாலும் புலிகளுக்கு விளக்கம் சொல்லிவிட்டுப் போகவேண்டியிருக்கிறது.

ஆனால் எந்த விளக்கத்தையும் புலிகள் நம்பும் நிலையில் இல்லை. இரண்டாம் கட்டப் பேச்சுக்கு முன் வெளிநாட்டமைச்சர் இந்தியா செல்வது புலிகளுக்குப் பிடித்தமான விசயமல்ல என்பது மட்டும் உண்மை.

போர்த் தந்திரப்படி எதிரிக்கு எதிரிதான் நண்பன்.

அரசு இந்தியாவுடனும் நட்புக்கொண்டபடி புலிகளோடு நட்புக்கொள்ள நினைக்கிறது.

புலிகளுடன் பேசும் அதே நேரத்தில் இந்தியாவிற்கு விரோதமாக இங்கு ஒன்றும் நடக்கவில்லை என்று இந்தியாவிடம் தெளிவுபடுத்தவும் புதிய அரசு விரும்புவதாகத் தெரிகிறது.

இது முன்னாள் ஜனாதிபதி அமரர் பிரேமதாசாவின் அணுகுமுறையில் இருந்து மாறுபட்டது.

பிரேமா-புலிகள் உறவு எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் மலர்ந்த உறவாக இருந்தது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா சொல்வதையெல்லாம் ஜனாதிபதி சந்திரிக்கா கேட்பாரா என்ற கேள்விக்கு உறுதியான தொனியில் 'இல்லை' என்று பதில் சொல்ல முடியாது.

காமினி கொலைக்கு முன் இந்தியாவின் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டை சந்திரிக்கா ஓரளவுதான் காதுகொடுத்துக் கேட்டிருப்பார்.

ஆனால், இப்போது சந்தேக நிழல் உறுதியாக படிந்துவிட்டது. எப்போது எதைச் செய்வார்கள் என்று புலிகள் பற்றி ஒரு கணிப்புக்கு வருவது சுலபமல்ல என்று அரசுக்கு புரிந்தாகிவிட்டது.

எனவே- இந்தியாவின் உதவி தேவை என்ற கருத்தை மனதில் கொண்டே இந்தியா சொல்லும் விடயங்களுக்கு ஜனாதிபதி காது கொடுக்க வேண்டியிருக்கும்.

ஆனால், இந்தியா பேசவேண்டாம் என்று சொல்லப் போவதில்லை.

**'கவனம் நம்பாதீர்கள். ஆழத்தில் போய் சிக்கிக்கொள்ளாதவாறு காலை வையுங்கள்'** என்று மறைமுகமாக உணர்த்தக்கூடும்.

**யார் எது சொன்னாலும் ஒன்று மட்டும் உறுதியானது. இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் இருந்து இந்தியாவை முற்றாக ஓரம்கட்ட ஒருநாளும் முடியாது.**

பிரேமா மறைவுக்குப் பின் ஐ.தே.கட்சி தலைமைகூட இந்தியாவோடு முரண்பட்ட கொள்கை ஒன்றை எடுக்கும் நிலையில் இல்லை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் இந்திய உறவு இனிய பூவாக மலர்ந்திருந்தது. அவரது மகளின் காலத்திலும் மீண்டும் அந்தப் பூ பூக்கும்.

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்கள் அனைத்துமே **'இந்தியா நண்பன்'** என்றுதான் சொல்லுகின்றன.

புலிகளைப் பொறுத்தவரை மட்டுமே இந்தியா வேண்டாத விருந்தாளி.

இனப்பிரச்சனை விவகாரத்தில் புலிகள் தீர்க்கமான சக்தியாக இருப்பதால் தனக்கு இலங்கையில் அதிகமான நண்பர்கள் இருப்பதை நினைத்து இந்தியா பூரணமாக திருப்திப்பட்டுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது.

அரசு-புலிகள் பேச்சை அவதானமாகக் கவனித்துவிட்டுத்தான் இந்தியா தனது அடுத்த காயை நகர்த்தும் என்று தெரிகிறது.

இதற்கிடையே, 'தலையிடோம்' என்று இந்தியா சொல்வதும், இந்திய விஜயங்கள் பற்றிய அரச தரப்பு விளக்கங்களும் பல்வேறு கோணங்களில் வெளிவரக்கூடும். அவை யெல்லாம் முழு உண்மைகளைப் பேசும் செய்திகள் என்று நாம் நம்பினால் அரசியலில் விரல் சூப்பும் குழந்தைகள் நாம் என்றுதான் அர்த்தம். ■

# முடிவு காணவேண்டிய 'வக்கிரப் போக்கு'



அலசுவது–இராஜதந்திரி

எனவே இந்த அதீத வக்கிரக் குணத்தின் வெளிப்படாகவே புலிகள் இயக்க உறுப்பினர் மல்லியின் உயிரற்ற உடலின் சிரச் சேதமும் காணப்படுகின்றது.

தென்னிலங்கையில் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் ரீதியாக சமாதானத் தீர்வை எட்ட விரும்புவதில் ஒருசாரார் அக்கறை கொண்டுள்ள அதே சமயம், ஈனச் செயல்களால் சமாதான முயற்சிகளைக் கொச்சைப்படுத்தும் காட்டு மிராண்டிக் கும்பல்களும் இருக்கவே செய்கின்றன என்பதனையே 'மல்லி'யின் தலை வெட்டப்பட்ட சம்பவம் தெளிவுபடுத்துவதாக இருக்கின்றது.

விடமுடியாது. இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளைவிட சிக்கல் நிறைந்ததாகவும், பல்வேறு தரப்புகளினதும் விருப்பு, வெறுப்புகள் சம்பந்தப்பட்டதாகவுமே அரசியல் அணுகுமுறைகள் காணப்படும்.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பான அரசியல் நடவடிக்கைகள் மிகவும் பரந்துபட்ட தன்மையைக் கொண்டதாகவே இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

கடந்த வாரங்களில் பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப் உரை நிகழ்த்துகையில், வடக்கு-கிழக்குப்

# போர்நிறுத்த நேரத்தில் நடந்த அத்துமீறல்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் இத்தடவை மாவீரர் வாரச் செய்தி அந்த இயக்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக இருந்தது.

மாவீரர் வாரம் மிகவும் கோலாகலமான முறையில் வடக்கே இடம்பெற்றிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் உயிர்த்தியாகங்களைப் பறைசாற்றுவதாக மாவீரர் வாரம் வடக்கே களைகட்டியிருந்தது.

கடந்த ஒரு தசாப்த கால வடக்கு-கிழக்கு யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இந்த யுத்தம் ஏற்படுத்திய நாசத்தினால் இதுவரை சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வடக்கு-கிழக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் ஊனமடைந்துள்ளனர். பலகோடிக்கணக்கில் உடமைகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் இக்கொடிய யுத்தத்தின் தீவிரம் பூரணமாகத் தணிந்ததாகவோ அல்லது அதன் நாசகாரத் தன்மையின் தாக்கம் குறைவடைந்ததாகவோ காணப்படவில்லை.

வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடக்கே கொடிய யுத்தச் சூழ்நிலை நன்கு கவ்விப் பரந்திருக்கவே காணப்படுகின்றது. அங்குள்ளவர்கள் ஒரு நிரந்தர சமாதானத்தை நோக்கி ஏங்கித் தவிப்பவர்களாகவே இருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் 'மாவீரர் வார'க் கொண்டாட்டங்கள் வடக்கே களை கட்டியிருந்தவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினரான மல்லி என்பவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

மல்லியின் மரணம் இன்றைய காலக்கட்டத்தில் புலிகளின் தரப்பில் ஒரு முக்கிய இழப்பாகவே விளங்கியிருந்தது. ஏனெனில் புலிகளின் தகவலின்படி மல்லி ஒரு சிரேஷ்ட உறுப்பினர் மட்டுமல்ல, மாவீரர் வாரத்தில்- அதுவும் புலிகளின் தரப்பில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்த தருணத்திலேயே அவர் கொல்லப்பட்டிருந்தார்.

படையினருடனான மோதல்களில் உயிரிழப்புகள் ஏற்படுவது சகஜம். ஆனால் மல்லியைக் கொன்ற படையினர் நடந்துகொண்ட விதமே புலிகளுக்கு ஆத்திரத்தை ஊட்டுவதாக அமைந்திருந்தது.

மல்லியைக் கொன்றவர்கள் அவரது தலையைத் துண்டித்துச் சென்று தமது 'வீரப் பிரதாப'த்துக்கு சான்று பகன்றிருந்தனர்.

இச் செயலானது ஆயுதப்படையினர் மத்தியில் நிலவி வரும் வக்கிரமான போர்க்குணத்தையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு யுத்தம் கடந்த பத்து வருடகாலத்தில் பூதாகாரமாகத் தோற்றம் பெற்றிருப்பதற்கும் வக்கிரமான போர்க்குணமே முக்கிய காரணமாக விளங்கியிருந்தது. ஆயுதப் படையினர் மீது மக்களை நம்பிக்கை இழக்கச் செய்து அவர்களை 'அசுர புத்தி' கொண்டவர்களாகப் புலப்படுத்துவதாகவே 'மல்லி' உயிரற்ற சடலத்தின் தலையைக் கொய்து சென்ற சம்பவம் விளங்கி நிற்கின்றது.

யுத்தங்களில் உயிரிழப்புகள் ஏற்படுத்தும், உடலுறுப்புகள் சிதறுண்டு போவதும் சகஜமானதே. ஆனால் இறந்த ஓர் உடலைக் கூறுபோட்டு 'எள்ளி நகை'யாடுவதென்பது எந்த வகையிலும் நாகரிகமான ஒரு நடவடிக்கையாக இருக்க முடியாது.

1983ம் ஆண்டு தென்னிலங்கையில் இடம்பெற்ற இனக் கலவரங்களின்போது அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் எவ்வாறு துடிதுடிக்கக் கொல்லப்பட்டிருந்தனர் என்பதை முழு உலகமுமே நன்கறியும்.

கையெடுத்துக் கும்பிட்டும், காலில் வீழ்ந்து மன்றாடியபோதிலும் கொலை பாதகர்களிடம் ஈவிரக்கத்தைக்காண முடியாதிருந்தது.

கசாப்புக் கடைக் கத்திகளும், குண்டாந்தடிகளுமாக அன்று எதுவுமறியாத அப்பாவித் தமிழர்கள் துரத்தியடித்துக் கொல்லப்பட்டிருந்தனர்.

வீடுவாசல்களில் இருந்தோர், வீதிகளில் சென்றோர் மட்டுமல்ல, சிறைக் கைதிகளாக இருந்த தமிழர்களும்கூட- 83 இனக் கலவரத்தின்போது மோசமானமுறையில் கொல்லப்பட்டிருந்தனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத்துரை உட்பட பலர் அன்று மோசமான முறையில் கொலையுண்டிருந்தனர்.

கொலைக் குற்றச்சாட்டுக்களின்பேரில் வெலிக்கடைச் சிறையில் ஆயுட் கைதிகளாக இருந்த மோசமான குற்றவாளிகள் அன்று குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் உட்பட ஏனைய தமிழ்க் கைதிகள் வைக்கப்பட்டிருந்த சிறைக் கூடங்களுக்குள் புகுந்து கூரிய ஆயுதங்கள், பொல்லுகள் என்பவற்றினால் அவர்களை படு மோசமாக நையப் புடைத்துக் கொன்றிருந்தனர்.

குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் கண்கள்கூட கொலைகாரக் கும்பல்களினால் பிடுங்கப்பட்டிருந்தன.

எனவே 83 இனக் கலவரத்தின்போது இடம்பெற்ற இந்த 'வக்கிர'மான நடவடிக்கைகள் தென்னிலங்கையில் உள்ள நாசகாரக் கும்பல்களின் தன்மையையே வெளிப்படுத்தியிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன்கூட தாம் ஒரு போராளியாக மாறுவதற்கு, 1958ம் ஆண்டில் இந்துப் பூசகர் ஒருவர் தென்னிலங்கையில் எரியூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்ட விதம் பற்றிக் கேள்வியுற்ற கதையும் ஒரு காரணமாக விளங்கியிருந்தது என்று சில காலத்துக்கு முதல் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

தென்னிலங்கையில் இனக் கலவரங்களின்போது மட்டுமல்ல இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளின்போதுகூட பல அடாவடித்தனமான சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதை அறிய முடிகின்றது.

தென்னிலங்கையில் ஒருசில வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பியினருக்கெதிரான நடவடிக்கைகள் என்ற ரீதியில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கோரமான முறையில் கொல்லப்பட்டிருந்தனர்.

கற்பனை செய்துகூட பார்க்க முடியாத அளவுக்கு இக்கொலைகள் படு பாதகமான முறையில் இடம்பெற்றிருந்தன.

வாகன டயர்களில் போட்டுக் கொளுத்தப்பட்டும், ஆறுகள், கடற்கரையோரங்களில் வைத்தும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தென்னிலங்கையில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இது தவிர பாரிய புதை குழிகளிலும் வயது வேறுபாடின்றிப் பலர் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், தென்னிலங்கையில் பலர் கொலை செய்யப்பட்டுப்



அமைச்சர் அஷ்ரப்

## அஷ்ரப்பின் பேச்சில் தொனிக்கும் அழுத்தம்!

புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் பாரிய புதைகுழிகளை கடந்த ஒரு வருடகாலமாகத் தோண்டித் துருவிப் பரிசோதித்து வரும் நடவடிக்கைகளும் தென்னிலங்கையில் இடம் பெற்ற அரச பயங்கரவாதத்தின் உச்சக் கட்ட அட்டூழியங்களையே புலப்படுத்துகின்றன.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னை தீர்வு தொடர்பான சமாதான முயற்சிகளில் இறங்கும்போது எந்தவொரு வகையிலும், எத்தரப்பிலும் அம் முயற்சிகளைக் களங்கப்படுத்தும் நடவடிக்கைகள் தலையெடுக்காதிருப்பதை உறுதி செய்வதே மிகவும் இன்றியமையாததாகின்றது.

நத்தார் காலப் பகுதியில் அரசு-புலிகளுக்கிடையிலான சமரச முயற்சிகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று சந்திரிகா அரசின் பேச்சாளரான அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா அறிவித்துள்ளார்.

ஆனால் எத்தகைய வடிவத்தில் அப் பேச்சுக்கள் இருக்கும்; பேச்சுக்குரிய விடயங்கள் என்னவென்பது பற்றி விரிவாக எதனையும் வெளியிட அமைச்சர் சேனநாயக்கா மறுத்திருந்தார்.

இரு மாதங்களுக்கு முன்னர் புலிகளுக்கும் அரச தரப்பினருக்குமிடையே ஆரம்பமான பூர்வாங்கச் சுற்றுப் பேச்சுக்கள் நல்ல புரிந்துணர்வுடன் இடம்பெற்றிருந்தன. இரு சாராருமே பரஸ்பர விசுவாசத்தை வெளியிட்டிருந்தனர்.

போர் நிறுத்தம், புனர்வாழ்வுப் பணிகள், மற்றும் வட பகுதிக்கான போக்குவரத்துப்பாதை என்பன குறித்தே அந்த முதற் சுற்றுப் பேச்சுக்களில் ஆராயப்பட்டிருந்தது.

புனர்வாழ்வுப் பணிகளுக்கு முன்பதாக அப்பணிகளின் சுமுகமான செயற்பாட்டை உறுதி செய்யும் வகையில் போர் நிறுத்தமொன்றும், வடபகுதிக்கான போக்குவரத்துப் பாதையொன்றும் திறக்கப்படுவதே இன்று மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது.

போர் நிறுத்தமொன்று ஏற்படும் பட்சத்திலேயே இரு தரப்பினரும் தத்தமது அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளை நன்கு பலப்படுத்திக்கொள்ள முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அதன் தலைவர் திரு.வே.பிரபாகரன் நல்ல கட்டுக்கோப்பான விதத்தில் தமது இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கக் காணப்படுகின்றார்.

அந்த இயக்கத்தின் இராணுவ, அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் அவரது பூரண கட்டுப்பாட்டின் கீழுள்ளன.

இதே வேளை தென்னிலங்கையில் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியானது அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகவும், இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவருக்கு உறுதியான தீர்மானங்களை எடுக்கும் வல்லமையைக் கொடுத்திருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் சந்திரிகா வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக தமது அரசியல்- இராணுவ ரீதியான அணுகுமுறைகளை எத்தகைய அளவுகளில் பிரயோகிப்பார் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

அரசியல் ரீதியான அணுகுமுறையை எத்தகைய விதத்திலும் சாமான்யமானதொன்றாக எடைபோட்டு

பிரச்னைத் தீர்வு தொடர்பாக அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்லாது, வடக்கு-கிழக்கு அரசியல் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தும் என்று தெரிவித்திருந்தார்.

அமைச்சர் அஷ்ரப் கூறியவற்றில் அர்த்தம் இருக்கவே செய்கின்றது. ஏனெனில் வடக்கு-கிழக்குப் பிரதேசம் கடந்த பத்து வருடகால யுத்தத்தினால் பல்வேறு அரசியல் பரிமாணங்களையும் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்த தமிழ் அரசியல் கட்சிகளைவிட இன்று கூடுதலான அளவு தமிழ்க் கட்சிகள் வடக்கு-கிழக்கில் தோன்றியிருக்கக் காணப்படுகின்றன.

கூடவே வடக்கு-கிழக்கில் முஸ்லிம் சமூகத்தவர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கக் காணப்படுகின்றனர். இந்நிலையில் அச் சமூகத்தவரின் எதிர்பார்ப்புகள், அங்கலாய்ப்புகளைப் பிரதி பலிப்பதாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு-கிழக்கில் ஒரு பலம் மிக்க அரசியல் கட்சியாகவும் மாற்றமடைந்துள்ளது.

இந்நிலையில் அமைச்சர் அஷ்ரப் குறிப்பிட்டதுபோல வடக்கு-கிழக்கு பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வு என்பது அப் பிரதேசத்தின் அனைத்துத் தரப்பு மக்களினதும், அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டியதாகவே காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத ரீதியிலான நிலைப்பாட்டைப் பூரணமாக நிராகரித்துவிட முடியாததாகவே இருக்கின்றது.

கடந்தகால அரச பயங்கரவாதத்தின் கொடுமைகளை ஜனாதிபதி சந்திரிகா அரசே நன்குணர்ந்துள்ளது. தென்னிலங்கையில் படையினரின் அட்டூழியங்களால் இடம்பெற்ற அநர்த்தத்தை பறைசாற்றும் தடயங்களை ஜனாதிபதி சந்திரிகாவே நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

எனவே முப்படைகளின் பலமும் பிரமாண்டமாக அதிகரிக்கப்பட்ட நிலையில் வடக்கு கிழக்குப் பிரதேசம் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக குண்டு வீச்சுக்கள், மற்றும் பாரிய தாக்குதல்களினால் அல்லோல கல்லோலப் பட்டுப் போயிருக்கும் வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாக இருப்பதையே தமிழீழ விடுதலைப் புலிகளின் பலமும், வளர்ச்சியும் புலப்படுத்துகின்றன.

எனவே 'இராணுவ தர்பாருக்கு' பூரணமாக விலங்கிடப்படும் நிலையிலேயே எந்தவொரு சமாதான அணுகுமுறையும் நல்ல வெற்றியைத் தரும் என எதிர்பார்க்க முடியும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## திடீர் விபத்தில் ஏற்படும் அதிர்ச்சியும் மரணமும்



திடீர் விபத்திற்கு ஆளானோர்களுக்கு ஏற்படும் உடல் சிதைவு மரணத்தை தவிர்த்து ஏனையோர் பெரும்பாலும் அதிர்ச்சியினாலேயே மரணத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

விபத்து ஒன்று நடந்தவுடன் அதன் உடனடித் தாக்கம் குருதிமண்டலத்தை அடைந்து மூச்சின் இழப்பையோ அல்லது அதிர்ச்சியடைதலையோ ஏற்படுத்துகின்றது.

இவற்றையடுத்து அதிர்ச்சிக்குள்ளான மனிதனின் குருதியோட்டம் சீர்குலைந்து குருதி நாளத்தின் செயற்பாடு மந்த நிலையை எய்துவதோடு இருதயம், மூளை போன்ற பகுதிக்கான குருதியோட்டமும் தடைபடுவதற்கும் காரணமாக அமைந்துவிடுகிறது. இதன் மூலம் இருதயம், மூளை போன்ற அவயவங்களின் இயக்கத்திற்கு தேவையான ஒட்சிசன் மற்றும் போசனைகள் இடைநிறுத்தமடைந்து அவ் வவய மண்டலங்கள் முதலில் பாதிப்படைகின்றன.

இந்நிலையில் சிகிச்சையேதுமின்றி நீண்ட நேரம் நிலைமை தொடரும் பட்சத்தில் நோயாளி மூர்ச்சையடைந்து மரணமடைய நேரும்- இவ்வாறு வைத்தியப் பரிசோதனைகளை மேற்கோள்காட்டி 'த லிவிங்' சஞ்சிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

## வயதானால் ஏன் மறதி?

வயோதிபர்கள், தாம் முதுமையடைந்து விட்டோமே என்று நினைத்து வாழ்ந்து வரும் சலிப்புணர்வே அவர்களின் ஞாபக சக்தியையும் மழுங்கச் செய்து வருவதாக வைத்தியப் பரிசோதனைகள் புலப்படுத்தியுள்ளன.

ஹாவாட் பல்கலைக்கழகத்தை சார்ந்த மனோவியல்துறை விஞ்ஞானிகளான திரு. லெவ் என்பவரும் திரு.லெங்கர் அவர்களும் சமீபத்தில் இணைந்து நடத்திய வைத்தியப் பரிசோதனையின்போது மேற்காணும் விடயம்



உறுதிப்படுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்கள். இவர்கள் மேற்கொண்ட பரிசோதனையில் பங்குகொண்ட வயோதிபர்களை மூன்று தொகுதிகளாக பிரித்து ஆய்வு நடத்தியதாக குறிப்பிட்டுள்ளனர். இதில் முதற் தொகுதியில் அடங்கியோர் முதுமையடைந்த நிலையிலும் கு[illegible]திலும் சமூகத்திலும் கௌரவமாக [illegible]படுவோர் என்றும் இரண்டாவது ப[illegible] அளவான வசதிகளுடன் ஓரளவு [illegible]ரவத்துடன் வாழ்ந்து வரும் வயோதிபர்கள் என்றும், மூன்றாவது பிரிவினர் வசதியும் வரவேற்பும் குறைந்த பிரிவினர் என்றும் குறிப்பிடும் இவ் விஞ்ஞானிகள் மேலும் இதுபற்றி கூறுகையில்:

மேற் கூறப்பட்ட தொகுதியினருள் மூன்றாவது பிரிவினரின் ஞாபக சக்தி மந்த நிலையிலிருந்ததாகவும் இரண்டாவது பிரிவினரின் நிலை அதைவிட சற்று முன்னேற்றமாகக் காணப்பட்டிருந்ததாகவும் முதலாவது பிரிவினரின் நிலை திருப்தி கரமாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

# போலிச்சாமியாரின் திரைமறைவு வேலைகள்



பிரேமானந்தா அருளுரை

"தந்திரத்தை உன்னித் தவத்தை மிக நிறுத்தி
மந்திரத்தை உன்னி மயங்கித் தடுமாறி
விந்துருகி நாதம்போல் ஒளியைக் காணாமல்
அந்தரத்தே கோல் எறிந்த அந்தகன்போல் ஆனேனே"

இது பட்டினத்தார் பாடல். அவர் ஆடி அடங்கி எதையும் மறைக்காமல் சொல்லிப் பாடியவர். போலித்தனம் இல்லாத யோகியானவர்.

பிரேமானந்தா சுவாமி என்று அழைக்கப்பட்ட போலிச் சாமியாரோ ஆடி அனுபவிக்க போர்வை தேடியவர்!

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்ற மகான்களின் பெயரை கெடுக்கவென்றே உற்பத்தியாகிக்கொண்டிருக்கும் போலிச் சாமியார் வரிசையில் பலர் இருக்கிறார்கள்.

அவர்களில் மாட்டிக்கொண்டவர்கள் சிலர். அந்தச் சிலரில் பிரேமானந்தாவும் ஒருவர்.

### மாத்தளையில் இருந்தவர்

இந்தப் போலிச் சாமியார் இலங்கையில் மாத்தளையில் தனது தந்திரத்திற்கு அஸ்திவாரம் போட்டவர்.

அப்போதே இங்குள்ள அரசியல்வாதிகள் சிலரோடு தொடர்பு வைத்திருந்தார்.

ஆயுதம் ஏந்திப் போராடும் இயக்கங்களுக்கும் ஆதரவு மாதிரிக் காட்டிக் கொண்டார்.

மாத்தளையில் ஒரு கோவில் பிரகாரத்தில் இருந்த அவரது ஆசிரமத்தில் இயக்க உறுப்பினர்கள் சிலர் பாதுகாப்பாக தங்கிச் சென்றதும் உண்டு.

83 ஜுலை கலவரத்தோடு தமிழ் நாட்டுக்கு ஓடிய சாமியார், கையோடு ஒரு பத்து பன்னிரண்டு இளம் பெண்களையும் கொண்டு சென்றதாக தற்போதைய விசாரணைகளில் வெளிப்பட்டுள்ளது.

இந்தப் போலிச் சாமியாரின் பூர்வீகம் தஞ்சை மாவட்டம். சிறு வயதிலேயே இலங்கை வந்தவர்.

தமிழ்நாட்டுக்கு மீண்டும் போன சாமியார் அங்கு திருச்சியில் இருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பாத்திமா நகரில் 250 ஏக்கர் நிலத்தில் ஆசிரமம் அமைத்துக்கொண்டார்.

### அரசியல் தொடர்பு

சுத்துமாத்து தொழிலுக்கு பாதுகாப்பு வேண்டுமானால் அரசியல்வாதிகளின் ஆதரவு வேண்டும். சொகுசாக வாழ தொழிலதிபர்கள், கோடீஸ்வரர்கள், லட்சாதிபதிகள் போன்றோரை வளைத்துப் போடவேண்டும்.

போலிச் சாமி போட்ட கணக்கு தப்பவில்லை. சாமியைக் கண்டால் காலில் விழும் அரசியல் தலைவர்கள் இந்தியாவில் அதிகம்பேர் இருக்கிறார்கள்.

செய்யும் பாவங்கள் தீர இப்படிப்பட்ட சாமியார்கள் தயவு இருந்தால் நல்லது என்று நினைக்கும் பணம் படைத்தோருக்கும் பாரதத்தில் பஞ்சமில்லை.

தென்னஞ்சோலையும், பூமிக்கு பச்சைப் போர்வை விரித்தது போன்ற வயல்களும் சுற்றியிருக்க அதன் மத்தியில் சாமியார் குடில் அமைத்தார்.

வயிற்றில் இருந்து வாய் வழியாக லிங்கம் வந்து பொத்தென்று விழும்.

பக்தர்கள் விபூதி கேட்டால் சாமியார் கையால் கொடுக்கமாட்டார்.

வாயைக் குவித்து குபீரென ஊதுவார். விபூதி வரும். பக்தர்கள் பிரமித்துப் போவார்கள்.

உள்ளூர் பக்தர்கள் மட்டும் பிரமித்தால் போதுமா? உலகம் முழுக்க பிரமிக்க வேண்டாமா? அப்போதுதானே 'டொலர்கள்' வந்து கொட்டும்.

வயிற்றில் இருந்து வாய் வழியே லிங்கம் கொட்டும் சமாச்சாரத்தை வீடியோவில் படமெடுத்து உலகெங்கும் அனுப்பி வைத்தார்.

லிங்கம் விழும் அதிசயத்தைப் பார்த்த வெளிநாட்டு பக்தர்கள் விழுந்தடித்து விசா எடுத்து சாமியாரைக்காண ஓடி வந்தார்கள்.

அதில் பெண்களும் அடக்கம். பெண்களுக்கு சாமியார் அருள் வாக்கு வழங்குவதே தனிப்பாணிதான்.

### இரகசிய தரிசனம்

இராத்திரி நேரத்து பூஜையில் இரகசிய தரிசன ஆசையில் இருந்த சாமியார் குளித்துவிட்டு ஆசிரம உடையை அணிந்துவரச் சொல்வார்.

ஆசிரம குளியலறையில் பக்தியோடு குளித்துக்கொண்டிருப்பார்கள் பக்தைகள். அதனையெல்லாம் பத்திரமாக பதிவு செய்து



சுரேஷ்குமாரி

கொண்டிருக்கும் குளியலறையில் ஒளித்துக் குந்தியிருக்கும் வீடியோ கமரா.

சாமியார் 'அருள் வாக்கை' ஆரம்பிப்பார். பக்தி பிரசங்கம் காம ரசம் பொழியத்



தேடப்படும் திவ்யாதேவி

தொடங்கும்.

"என்னோடு உறவு கொள்வது கடவுளோடு இருப்பது மாதிரியானது" என்பார் போலிச் சாமி.

சுயரூபம் அறிந்தவர்கள் திரும்பிப் பார்க்காமல் ஓடிவிடுவார்கள். தேவையுள்ளவர்கள் மட்டும் திரும்பி வருவார்கள்.

குளியலறை வீடியோப் படங்கள் நல்ல விலைக்கு விற்கப்படும். சிலரை மிரட்டிப் பணியவைக்கவும் பயன்படுத்தப்படும்.

இதே சமயம் இலங்கையின் போராளி இயக்கங்களுக்கும் போலிச் சாமியார் உதவி செய்தார்.

அவரது பம்மாத்து வேலைகளை இயக்கங்கள் நம்பின என்று சொல்லிவிட முடியாது.

தமக்கு ஒரு பாதுகாப்பாக பயிற்சிக்கும், மறைந்திருக்கவும் என்று சில தேவைகளுக்காக போலிச் சாமியாரின் உதவியை சில இயக்கங்கள் பயன்படுத்திக்கொண்டன.

தற்போதைய விசாரணையில் சாமியாரின் சாந்தா (வயது31) சாட்சியமளித்துள்ளார்.

### இயக்கங்களும் சாமியும்

'புளொட் இயக்கத்தின் ஆதரவாளராக இருந்து பின்னர் டெலோ இயக்கத்திற்கு தாவியவர் சாமியார். இறுதியாக புலிகளோடு தொடர்பு கொண்டிருந்தார்' என்று சாந்தா சாட்சியம் சொல்லியிருக்கிறாள்.

அது த்விர 'மார்க்' என்ற வெளிநாட்டுக்காரன் மூலமாக போதைப் பொருள் கடத்தலிலும் போலிச் சாமி ஈடுபட்டிருந்தாராம்.

புலிகள் சாமியாரின் உதவியை தேவை கருதி பயன்படுத்தியிருக்கலாம்.

ஆனாலும், தமிழக மக்களிடம் புலிகளுக்கு அதிருப்தி ஏற்படுத்தும் நோக்கத்தில் சாமியார் விவகாரத்தில் புலிகளை அதிகமாக சம்பந்தப்படுத்த பொலிஸ் முனையலாம்.

சிலரை சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவது போராட்டக் காலத்தில் நடப்பதுண்டு. ஆனால் தவறானவர்களை கவனமாக பயன்படுத்தலாமே தவிர அவர்களை தலையில் தூக்கி வைத்திருக்கக்கூடாது.

இயக்கங்கள் எதுவும் சாமியார் விவகாரத்தில் அவருக்கு உடந்தையாக இருந்ததாக எந்தவொரு தகவலும் சொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரமத்தில் இருந்த மேலும்பல பெண்கள் சாட்சியமளித்துள்ளனர்.

அநேகமாக எல்லோருடனும் சாமியார் சரசமாடியிருக்கிறார்.

மறுத்தால் அடி உதை. பசி பட்டிணி. கருக்கலைப்புக்கும் தனியாக 'ஒரு பெண் டாக்டர் எந்நேரமும் தயாராக ஆசிரமத்திலேயே இருந்திருக்கிறார்.

சாமியாரின் ஆசிரமத்தில் தலைவர் பதவிக்கு கடும் போட்டி ஏற்பட்டதாம்.

திவ்யாதேவி என்ற பெண்ணுக்கே சாமியாரின் அமோக ஆதரவு! அதனால் தலைவியானார் திவ்யா.

"நாட்டியம் பழகத்தான் அனுப்பினேன். அவளோ சாமியாரை நாடிப்போய்விட்டாள்" என்று சொல்லுகிறார் திவ்யாவின் அம்மா சிவசுந்தரி.

### பெண் சாமியின் காதல்

திவ்யா மீது சாமிக்கு தெய்வீகக் காதல். திவ்யாவுக்கோ சாமியார்மீதும், அவரது உதவியாளர் கமலானந்தா சாமி மீதும் ஒரே நேரத்தில் உன்னதக் காதல்.

இருவரையும் திவ்யா கவனித்துக் கொண்டாள்.

தற்போது இலண்டனில் நிதி திரட்ட சுற்றுப் பயணம் செய்துள்ள பெண் சாமி திவ்யா அங்கிருந்து போட்ட கடிதங்கள் பொலிசின் கரத்தில்.

இரு சாமிகளுக்கும் தனித்தனி கடிதங்கள். இரண்டிலும் காதல்+காமம் கொட்டும் வார்த்தைகள்.

சர்வதேசப் பொலிசார் மூலம் திவ்யாவை தேடி வலை விரித்திருக்கிறது தமிழகப் பொலிஸ்.

போலிச் சாமியாரின் 43வது பிறந்த தினம் கடந்த நவம்பர் 18ம் திகதி.

பாத்திமா நகரெங்கும் அலங்கார வளைவுகள். அதே சமயம் ஆசிரம நுழைவாயில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு அதனை திறக்க தமிழக அமைச்சரும் சம்மதித்திருந்தார்.

அதே சமயம் சுரேஷ்குமாரி, லதா ஆகிய பெண்கள் ஆசிரமத்தில் இருந்து தப்பி ஓடி பொலிசில் கற்பழிப்பு புகார் செய்தனர். சுரேஷ்குமாரி சாமியாரின் சகோதரரின் மகள் என்பதுதான் கொடுமை! சுரேஷ்குமாரிக்கும், லதாவுக்கும் பெண்கள் அமைப்புக்கள் பாதுகாப்பு கொடுக்க விவகாரம் சூடுபிடித்தது.

பத்திரிகைகளில் செய்தி வந்து ஒரே பரபரப்பு.

சாமியாரோ தனது 43வது பிறந்த நாளில் ஆயுள் விருத்தி யாகம் நடத்திக் கொண்டிருந்தார். போட்டோ எடுக்க போஸ் கொடுத்தார்.

"எல்லாம் பொய். உங்களுக்கு துன்பம் வந்தால் சாமி நான் தீர்த்துவைப்பேன், இப்போது சாமியாராகிய எனக்கே துன்பம் வந்துவிட்டதே. யார் உதவி செய்வார்" என்று தங்கப் பதக்கம் பட ஸ்ரைலில் கடைசி அருளுரை நிகழ்த்தியதாம் போலிச் சாமி.

பொலிஸ் சுற்றிவளைத்து சாமியாரையும் ஆசிரம பெண்களையும் கைது செய்தது.

### முதல்வரும் காலில்?

வீடியோ கசட்டுக்களும் சிக்கியுள்ளன. ஆசிரம பெண்கள் எல்லாம் சாமியாருக்கு எதிராக- அவர் சரச லீலைகள் பற்றி சாட்சி சொல்லுகிறார்கள்.

சாமிக்கு விளக்கமறியல்.

நீதிமன்றத்திற்கு வந்து செல்லும்போது வேண்டுமென்றே சிரிக்க முயன்று போஸ் கொடுக்கிறார் போலிச்சாமி.

முக்கியமான ஒரு குறிப்பு- **தமிழக முதல்வரும், அவரது தோழி சசிகலாவும் சாமியின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெறும் காட்சியும் வீடியோ ஒன்றில் இருந்ததாம். அதனை மறைக்க முயற்சி நடப்பதாக தகவல்.**

இன்னொரு குறிப்பு: சாமியாரின் லிங்கம் எடுப்பது, விபூதி ஊதுவது போன்ற வித்தைகளின் சூக்குமம் அவரது உதவியாளருக்கும் அத்துப்படியாம். சாமியார் ஒருவேளை தொழிலைக் கைவிட்டால்கூட அவரது உதவியாளர் எங்காவது சென்று பிழைத்துக்கொள்ளலாம்.

ஏமாறுவோர் உள்ளவரை ஏமாற்றும் பேர்வழிகளுக்கும் குஷிதானே?

இந்த போலிகளால் முன்பிருந்த அசல்களுக்கும் கெட்ட பெயர்.

# என்னைப்பார்! என் அழகைப்பார்!

## கிளாமர் நியூஸ்




உலக அழகு ராணிப் போட்டிகளில் இரண்டு ரகம் இருக்கிறது.

ஒன்று 'மிஸ் யுனிவர்ஸ்' பட்டத்திற்கானது. இரண்டாவது, 'மிஸ் வேல்ர்ட்' பட்டத்திற்கானது.

ஏற்கனவே பிலிப்பைன்சில் நடந்த போட்டியில் இந்திய அழகி சுஸ்மிதா சென் முதலிடத்தில் வந்தார். அவர் பெற்றது 'மிஸ் யுனிவர்ஸ்' பட்டம்.

சமீபத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த போட்டியில் ஐஸ்வர்யா ராய் பெற்றிருப்பது 'மிஸ் வேல்ர்ட்' பட்டம்.

இந்தியாவில் இந்த ஆண்டு நடைபெற்ற அழகிப் போட்டியில் சுஸ்மிதா சென்னிடம் தோற்றுப் போனவர்தான் ஐஸ்வர்யா ராய்.

தென்னாபிரிக்காவில் போய் வெற்றிக்கொடி நாட்டிவிட்டார்.

பரிசுத் தொகையாக 30 இலட்சம் டொலர் கிடைத்திருக்கிறது.

உலகப்புகழ் பெற்ற 'மஸ்தா' கார், ஒன்றரைக் கோடி ரூபாய் பரிசுப் பொருட்கள் என்று அள்ளிக்கொண்டு திரும்பியிருக்கிறார் அழகுராணி ஐஸ்வர்யா ராய்.

'மொடலிங் உலகில் கவர்ச்சி தேவதையாக சம்பாதித்த ஐஸ்வர்யா ராய் 'புகைப்பட முக வசீகரத்திற்கான' பரிசையும் தட்டியிருக்கிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




# ஒரு கொடியில் 11 குட்டிகள்



இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் நகரில் உள்ள ஒரு வீட்டில் துணி காயப்போடும் கொடியில் கண்ட காட்சி இது.

ஜெனத் ஸ்மித் பதினொரு நாய்க் குட்டிகளை செல்லமாக வளர்த்தார். செல்ல நாய்கள் பதினொன்றும் சமையல றைக்குள் புகுந்து சமைத்துவைத்த உணவு களுக்குள் புரண்டு உருண்டுவிளையாடி விட்டன. உடல் முழுக்க மச மசவென்று அழுக்கு. பார்த்தார் ஸ்மித். பதினொரு நாய்களையும் சோப்புப் போட்டு குளிக்க வைத்துவிட்டு ஈரம் உலருவதற்காக கொடி யில் காயப்போட்டுவிட்டார். குளிர்காயும் குட்டிகளையே படத்தில் காண்கிறீர்கள்.

# பாம்புக்கு எதற்கு பாஸ்போட்?



பாஸ்போட், விசா ஏதுமின்றி கப்பலில் 10 நாட்கள் பயணம் செய்து 2500 கி.மீ. தூரத்தைக் கடந்து இந்தியா வந்துள்ள மலேசிய மலைப் பாம்பு இது. மலேசியக் காடுகளி லிருந்து வெட்டப்பட்ட ஒரு மலேசிய கொங்கு மரப் பொந்துக்குள் இது இருந்திருக்கிறது. அதைப் பார்க்காமல் அவர்களும் அந்த மரத்தை இந்தியாவுக்கு அனுப்பிவிட்டனர். அந்தக் கப்பல் தமிழ்நாடு தூத்துக்குடி துறைமுகம் வந்தது. அங்கிருந்து சென்னை மர வியாபாரி ஒருவர் இந்த மரத்தை வாங்கி லொறிமூலம் சென்னை கொண்டு வந்தார்.

அந்த மரத்தை இயந்திரவாள் மூலம் 3 துண்டுகளாக்கினர். அதைக் குறுக்காக வெட்டும் முன்பு அதன் கீழே இருந்த பொந்தில் ஒட்டிக் கொண்டிருந்த மண்ணை அகற்றும் பொழுது, ஒருவர் அதற்குள் ஏதோ நெளிவதைப் பார்த்தார். உடனே அந்தக் கடையின் உரிமையாளர் வனத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார். அவர்கள் வந்து பொந்துக்குள் சுருண்டு கிடந்த பாம்பை பிடித்து கிண்டி தேசியப் பூங்காவுக்குக் கொண்டு சென்றனர்.

தற்போது அங்கு சுகமாக இருக்கிறது இந்த மலேசிய மலைப்பாம்பு. பிரவுன் நிறத்தில் மஞ்சள் புள்ளிகளுடன் இருக்கும் இந்த அழகிய மலைப்பாம்பின் நீளம் ஆறடி. இது 30 அடி நீளத்திற்கு மேல் வளரக்கூடியது. இந்தியாவில் உள்ள மலைப்பாம்புகளைவிட பெரிய வகையைச் சேர்ந்தது இந்த மலைப்பாம்பு. அழிவின் விளிம்பில் இருக்கும் இந்த இனப் பாம்புகளுக்கு மதிப்பு மிக மிக அதிகம்.

# போத்தலுக்குள் பூவை?



போத்தலினுள்ளே யார்? உடலைத் திருகி வளைத்து சாகசப் பயிற்சி பெற்ற 17 வயதான டெலியா டூசால். லண்டனில் ஒரு சேர்க்கஸ் கம்பனி ஆள் எடுக்கும்போது இச்சோதனையை நடத்தியது. பல இளம் பெண்கள் தோற்றனர். டெலியாவுக்கு வெற்றி கிடைத்தது. இதனால் சேர்க்கஸில் வேலையும் கிடைத்தது.



# பொத்தி வைத்து பூப்போல பாதுகாத்து...!

சிம்பன்சிக் குரங்காருக்கு கோழிக் குஞ்சு மீது பிரியம். பொத்திப் பாதுகாத்து வளர்த்து வருகிறார். இங்கிலாந்திலுள்ள மிருகக் காட்சிச்சாலையில் பதிவு செய்யப்பட்ட காட்சி.

## விமானத்தை கார் வடிவில் உருவாக்கினால் எப்படியிருக்கும்? பாரிசிலுள்ள ஓவியர் ஒருவரின் கற்பனையில் உருவான ஓவியம் இது!



வித்தியாசம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## வாய்பில்லை தொல்லை

## வெற்றி விநாயகர்!



ஜூகி சாவ்லா-சிரஞ்சீவி
படம்: தி ஜெண்டில்மேன் (இந்தி)

## திகிலோடு நகைச்சுவை

ஆங்கிலப் படங்களுக்கு நிகரான திகில் கலந்த நகைச்சுவைப் படம் என்ற அறிவிப்புடன் தயாராகி வருகிறது 'சின்னவங்க'. 'முதல் பாடல்' பட நாயகன் மது 'மோகமுள்' நாயகன் அபிஷேக் ஆகிய இருவருடன் பெங்களூர் அழகி குல்மோகர் கதாநாயகியாக அறிமுகமாகிறார். புதிய இயக்குநரான பத்மாலயன் 'சின்னவங்க' படத்தை மிகுந்த சிரத்தையோடு எடுத்து வருகிறார்.

## ரேகாவுக்கு சான்ஸ்

தற்போது படவாய்ப்புகளின்றி இருக்கும் ரேகா கதாநாயகியாக புதிய படமொன்றில் நடிக்கிறார். 'புன்னகை மன்னன்' பட நாயகன் ஹரிராஜ் ரேகாவுடன் இணைந்து நடிக்கும் இப்படத்திற்கு 'தேசம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் திலகன் ரவி, நாசர், காசன் கான், ரவிராஜ், சிட்டி ஆகியோரும் நடிக்கின்றனர். இதன் முதற்கட்டப் படப்பிடிப்பு பாண்டிச்சேரியில் தொடங்குகிறது.

## கவனிக்கப்படவேண்டிய விசயம்

விரைவில் திரைக்கு வரவிருக்கிறது 'தி ஜெண்டில்மேன்'.

தமிழில் அர்ஜுன் நடித்த பாத்திரத்தில் இந்தியில் நடித்துள்ளவர் சிரஞ்சீவி. தமிழில் பிரபுதேவா ஆடிய 'சிக்கு புக்கு ரயிலே' பாடல் காட்சியில் இந்தியில் சிரஞ்சீவியே ஆடியுமிருக்கிறார். கௌதமிக்கு பதிலாக ரோஜா அந்த பாடல் காட்சியில் தோன்றி அசத்துகிறார். சிரஞ்சீவிக்கு ஜோடி ஜூகி சாவ்லா. ஜூகி சாவ்லா இந்தியில் நம்பர் வன் இடத்தைப் பிடிப்பதில் குறியாக இருக்கிறார். ஆனால் குண்டாகி வருகிறார் என்று கவலைப்படுகிறார்கள் அவரது விசிறிகள். கவனிக்கப்படவேண்டிய விசயம்தான்.

## பம்பாயில் ரஜினி மோதல்

## 'சும்மா இருங்க மச்சான்'

## கஸ்டம்ஸ் ஆபிஸர்

விஜயசாந்தியின் அதிரடி சண்டைக்காட்சிகளோடு தமிழுக்கு வரும் படம் 'கஸ்டம்ஸ் ஆபீஸர்'. தேசவிரோதிகள், கடத்தல்காரர்கள் மீது பாய்ச்சல் நடத்தும் பெண் அதிகாரி வேஷம் விஜயசாந்திக்கு. பாபு மகாராஜா வசனம் எழுத, முத்துலிங்கம் பாடல்களை எழுதியிருக்கிறார். இயக்கம்-பி.கோபால், இசை-சக்கரவர்த்தி.


## நெப்போலியனின் புதிய படம்

நெப்போலியன் புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள படம் 'பாசமுள்ள பாண்டியரே'. இயக்கம்-வினோத், இசை-இளையராஜா. கவுண்டமணி - செந்தில் ஆகியோரும் உண்டு. நாயகி தேர்வு நடைபெற்று வருகிறது.

## மதுபாலாவுக்கு டாட்டா!

'ஏர்போர்ட்' படத்தைத் தயாரித்த நிறுவனம் தற்போது 'மாஸ்டர்' என்ற படத்தை தயாரிக்கிறது. இதில் மம்முட்டி ஜோடியாக முதலில் மதுபாலா ஒப்பந்தம் செய்யப்பட்டார். இப்போது மதுபாலாவை மாற்றி விட்டு சங்கவியை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

## நக்மா விளக்கம்



பிரபுதேவா
படம்-ராசையா

## பிசிட்



சரத்குமார்-கஸ்தூரி
படம்-மகாபிரபு

## கிசு-கிசு நியூஸ்

## இனி என்னாகும்?

சோமி அலி சல்மான் காலை லவ் பண்ணுவது தெரிந்த சமாச்சாரம். சல்மான்கான் சோமி அலிக்கு கடும் நிபந்தனைகளைத் தூக்கிப் போட்டிருக்கிறார். சோமி அலி எந்தப் படத்தில் நடித்தாலும் தன்னிடம் அனுமதி பெறவேண்டும். குறிப்பிட்ட சில கதாநாயகர்களுடன் மட்டுமே நடிக்க வேண்டும். மிக முக்கியமாக, வெளிப்புற படப்பிடிப்புகளுக்கு சென்றால் சல்மான்கான் சொல்லும் விடுதிகளில் மட்டுமே தங்கவேண்டும். ஆனால், சமீபத்தில் சென்னைக்கு சென்ற சோமி அலி தனக்குப் பிடித்த நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கிவிட்டார். விசயம் சல்மான்கான் காதில் விழ அவர் ஆடாகியிருக்கிறாராம். இனி என்னாகுமோ?

## அடிக்கடி அமெரிக்கா

அன்று முதல் இன்றுவரை கிசு கிசுக்களில் மாட்டிக்கொள்வதில் டிம்பிள் கபாடியாவுக்கு இருக்கும் பிரியமே தனி.

தற்போது டிம்பிள் கிசுகிசுக்கப்படுவது சன்னிதியோலுடன். கலை நிகழ்ச்சி என்ற பெயரில் இருவரும் அடிக்கடி அமெரிக்கா போய் விடுகிறார்களாம்.

## 'தினசரி மூன்று காட்சிகள்'

தலைப்பைப் பார்த்ததும் எந்தப் படம் எந்த தியேட்டரில் மூன்று காட்சிகள் ஓடுகிறது என்ற கேள்வி வந்திருக்குமே? தப்பு- மகா தப்பு.

ஒரு படத்தின் பெயர்தான் அது. 'தினசரி மூன்று காட்சிகள்' இந்திய பிலிம் சேம்பரில் பதிவு செய்யப்பட்டுள்ள மேலும் சில வித்தியாச படப் பெயர்கள்:

1. 'அணைத்துக்கொண்டே இரு' 2. 'ஆத்தங்கரை அம்மனாரே' 3. 'சுப்பிரமணி' 4. 'டிராக்கு அண்ட் ஜாக்கல்' 5.'எமர்ஜென்சி' 6. 'எங்க பொன்னுசாமி' 7. 'எட்டுத்திக்கும் என்பாட்டு' 8. 'கண்போன போக்கிலே கால் போகலாமா?' 9. 'கரையான்' 10. 'லேபர்' 11. 'மேஜிக் மேன்' 12. 'மார்க்கண்டேயா' 13. 'மார்த்தாண்ட முத்து' 14. 'வாங்க பங்காளி' 15. 'வணக்கம் மாமியாரே' 16. 'ஒரு பூ வண்டாகிறது' 17. 'சும்மா இருங்க மச்சான்'

இந்த தலைப்புக்கள் எப்படி பிடித்திருக்கிறதா?



## ரஜினி பாராட்டு

தமிழில் வெற்றிபெற்ற படங்கள் பிற மொழிகளில் எடுக்கப்படுவதும், பிற மொழிகளில் வெற்றி பெற்ற படங்கள் தமிழுக்கு வருவதும் வழக்கம்தானே! இப்போது 'நாட்டாமை' படத்தை தெலுங்கில் தயாரிக்க பலத்த போட்டி. சிரஞ்சீவியும் நடிக்க விருப்பம் தெரிவிக்கிறாராம்.

'நாட்டாமை' படத்தின் பிரத்தியேக காட்சியைப் பார்வையிட்ட ரஜினிகாந்த் சரத்குமாரின் நடிப்பை பாராட்டினாராம். "படம் ஓட ஓட விலை ஏறும். அதனால் உடனடியாக பிறமொழிகளில் எடுக்கும் உரிமையைக் கொடுத்துவிடாதீர்கள்" என்று ஆலோசனையும் சொன்னாராம் ரஜினி.



## அர்ச்சனாவின் ஆடைக் குறைப்பு

பாலு மகேந்திராவால் முன்னுக்கு கொண்டு வரப்பட்டு விருதுகள் வாங்கிக் குவித்தவர் நடிகை அர்ச்சனா. 'கம்மோகணம்' என்ற மலையாளப் படத்தில் கவர்ச்சி காட்டி நடிக்கிறாராம் அர்ச்சனா. அதற்கு தோதாக ஆலிங்கன பாத்திரமும் கிடைத்திருக்கிறது. அர்ச்சனாவுக்கு ஜோடி முரளி. இவர் மலையாள நடிகர் முரளி.

## இப்படியும் போட்டி


குஷ்புக்கு போட்டியாக குண்டு நடிகையாகி வருகிறார் பிரகதி. குண்டான உடல்தான் தனது முன்னேற்றத்தின் இரகசியம் என்று கூறும் பிரகதி மெலிய வாய்ப்பேயில்லை.

அர்ஜுன்

லேடீஸ் ஸ்பெஷல்

# அழகாக மாற ஐந்து நாட்கள்

ருக்கா-நாதன்



**தி**ருமண நாள் பெண்களுக்கு பிரதானமான நாளாகும். என்றுமில்லாத எழிற் கோலத்துடன் மணமகள் திகழ வேண்டும். இதேபோன்றுதான் ஏனைய பண்டிகைகளின் போதும் அழகிய பெண்கள் மேலும் அழகுடன் விளங்க வேண்டும்.

திருமணமோ பண்டிகையோ- இந்த விசேட நாட்களுக்கு முன் ஒரு பெண் தனது அழகுக்கு மேலும் அழகூட்ட ஐந்து நாட்களே போதுமானது.

முதல் நாளன்று நல்லெண்ணை அல்லது ஒலிவ் எண்ணை அல்லது வழக்கமாகப் பயன்படுத்தும் கிரீம் ஆகியவற்றில் ஒன்றினை எடுத்து தலை மற்றும் உடம்பு முழுவதும் நன்றாக அழுத்தித் தேய்த்துக் கொள்ளுங்கள். இரண்டு மணி நேரம் கழித்து இரு முட்டைகளின் வெள்ளைக் கருவினை தனியாக- நன்றாக அடித்துக் கொள்ள வேண்டும். மஞ்சட் கருவில் ஒரு மேசைக் கரண்டி தண்ணீர் விட்டு அதனையும் நன்றாக அடித்தபின் தலையில் நன்றாக அழுத்தித் தேய்க்கவும். சற்று நேரம் கழித்து 'ஷம்பூ' போட்டு தலை முழுகவும்.



'ஓட்மீல்' எனப்படும் புல்லரிசிக் கூழ் கால் கோப்பை, 'ஸ்ராச்' எனப்படும் மாச்சத்து அரைக்கோப்பை, பாலாடையுள்ள பால்மா அரைக்கோப்பை ஆகிய இத்தனையையும் ஒன்றாகக் கலந்து, கைக்குட்டை அளவான மெல்லிய துணியினை எடுத்து இக்கலவையை வைத்து துணியை ஒரு முடிச்சாக முடித்து அதனால் உடல் முழுவதும் தேய்த்தால் உலர்ந்த சருமங்கள் நீங்கி உடல் பளிச்சென்றிருக்கும்.

மறுநாள் கைகால்களை 'ஃப்யூமிக்ஸ்'கல் கொண்டு தேய்த்து சுத்தப்படுத்திவிட்டு கைகால்களை வெதுவெதுப்பான சோப் கலந்த நீரில் சற்றுநேரம் ஊறவைத்து பிறகு சுத்தமாக துடைத்துவிட்டு நகங்களை சீர்செய்து விரும்பிய நிறத்தில் 'நகப் பொலிஷ்' போடவும்.

மூன்றாவது நாளை மருதாணி கொண்டு தலைமுடிக்கு செழிப்பூட்டுவதற்கும் கைகால்களில் உள்ள முடிகளைப் போக்குவதற்கும் (வாக்ஸிங் மூலம்) செலவிடலாம். மருதாணிப் பொடி, சிறிது தயிர், அரைமுடி எலுமிச்சம் பழச்சாறு, தேயிலைச்சாயம் சிறிதளவு, முட்டை ஒன்று ஆகிய எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து தலையில் தேய்த்து ஒருமணி நேரம் ஊறிய பின்பு ஷம்பூ கொண்டு தலைகுளித்து விடவேண்டும். 'வாக்ஸ்' கடைகளில் விற்கும் அதை முடி உள்ள இடத்தில் பூசி அதன்மேல் துணியை அழுத்தி எதிர்ப்புறமாக இழுத்தால் அத்துடன் முடிகள் ஒட்டிக்கொண்டு வந்துவிடும்.



நான்காவது நாள் முகத்தை சிறிது பாலாடை அல்லது தரமான 'கிளன்சிங் கிறீம்' கொண்டு மேல் நோக்கி மசாஜ் செய்யவும். பிறகு துடைத்து விட்டு 'மாஸ்க்' போடவும். மாஸ்க் (முகக் காப்பு) கடைகளில் உண்டு. இல்லாவிடில் வறண்ட சருமம் உள்ளவர்கள் முட்டை மஞ்சள்கரு, பட்டர் புரூட் (அவக்காடோ) முள்தாங்கி மட்டி, வைட் பவுடர், ஹைதரசன் பெரொக்சையிட், சந்தன பவுடர் கலந்து பூசி 1/2 மணி நேரம் கழித்து கழுவிவிடவும்.


எண்ணெய் பசையுள்ளவர்கள் முட்டை வெள்ளைக்கரு, எலுமிச்சை சாறு, பிளீச்சிங் பவுடர், ஹைதரசன் பெரொக்சையிட் கலந்து போடவும்.



ஐந்தாவது நாள் பண்டிகை, திருமணம் அல்லது வேறு விஷேச நாள் அன்று உங்கள் வயது, நிறம், உடல்வாகிற்கு ஏற்ற உடைகள், நகைகள், தலை அலங்காரம், முக அலங்காரம் செய்து அழகாக தோற்றமளிக்கலாம்.

# நீங்களும் தைக்கலாம் எஸ்-எஸ்

## யுவதிகளுக்கான புதிய ஜீன்சும் பிளவுசும்





படம் 1.

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**
**(பிளவுசுக்கு வர்ணக் கோட்டுத் துணி அல்லது புள்ளியிடப்பட்ட துணி)**

**பிளவுஸ்**
**முன்பக்கம்+ பின்பக்கம்= 30+30 அங்குலம்**
**நீளம்= 28 அங்குலம்**
**கையின் அகலம்= 22 அங்குலம்**
**கையின் நீளம்= 11 அங்குலம்**
**கொலர்-நீளம்= 18 அங்குலம்**
**கொலர் அகலம்= 4 அங்குலம்**
**வெட்டும் முறை: (படம் 1)**


15+15 அங்குலம் அளவில் பின் முன்பக்கத் துணியினை மடித்துக்கொள்ளவும். மடிக்கப்பட்ட துணியினை A,B,C,D எனக் குறித்துக்கொண்டு Aயிலிருந்து 6 அங்குலம் அளந்து உள்நோக்கி Eஎனக் குறிக்கு. Eயிலிருந்து 5 அங்குலம் உள்நோக்கி அளந்து Gஎன அடையாளமிடுக. Gக்கும் Bக்கும் இடைப்பட்ட அளவு 4 அங்குலமாகும். அந்த 4 அங்குலமே கழுத்துப் பகுதியாகும். முன்னங்கழுத்திற்கு (படம் 1இன்) G-H பகுதியை அவதானிக்கவும். அப்பகுதியை படத்தில் காட்டியவாறு 4 1/2 அங்குலம் சரித்து வெட்டவும். இவ்வாறு வெட்டியதும், தோள் பகுதியின் G பகுதியின் E பகுதியை 1 அங்குலம் சரித்து வெட்டுதல் நன்று. அதனையடுத்து A,E,F பகுதியே கைப்பகுதியாகும். அப்பகுதியை படத்தினுடன் மீண்டும் ஒருமுறை அவதானித்ததன்பின் வளைவாக வெட்டவும். இவ்வாறு வெட்டிய பின்னர் F-I பகுதியில் 1 அங்குல வளைவு வைத்தல் நன்று. இவையாவும் சரியாக வெட்டியபின் திருப்திதான் என்று மனதில் தோன்றியதும் I,C,Dப் பகுதி பிளவுஸின் கீழ்த் தோற்றத்திற்கானது இதனை சேட் வளைவினைப்போன்று அதாவது படம் 1ல் காட்டியதுபோன்று வெட்டவும். பிளவுசுக்கு முன்பூட்டு (OPEN) வைத்து பட்டின் போடவும்.





படம் 2.

இதனையடுத்து படம் 4ன்படி கொலர் பகுதிக்கு 18 அங்குலம் நீளமும் 4 அங்குல அகலமும் கொண்ட நீள் சதுரத் துணியினை எடுத்து சமனாக மடித்து படத்தில் காட்டப்பட்டபடியே வெட்டுவோம்.

அவ்வாறு கொலரும் வெட்டிவிட்டோம். அடுத்து கைப் பகுதியினை வெட்டுவோம். 22 அங்குல அகலமும் 11 அங்குல நீளமுமான சதுரத் துணியினை எடுத்து படம் 3ல் காட்டியவாறு A,B,C,Dஎனக் குறித்துக் கொள்ளவும். Aயிலிருந்து 3 அங்குலம் கீழ்நோக்கி அளந்து Cஎனக் குறிக்குக. Dயிலிருந்து 2 அங்குலம் உள்நோக்கி அளந்து Eஎனக் குறிக்குக. இவ்வாறு குறித்ததும் (படம் 3இனை) உற்றுப் பார்த்து வெட்டவும். (விரும்பினால் பிளவுசுக்கு டக்ஸ் போடலாம்)




படம் 3



படம் 4

**ஜீன்சு வெட்டும் (HALF JEENS)**

ஜீன்ஸ் மிகவும் தேகத்தோடு ஒட்டி இருத்தல் அழகினைத் தரும் எனவே இதற்கு வெலோனா துணி சிறந்தது. நாம் பருமனாக இருந்தால் எம்மை அளவு நாடாவால் அளந்து அவ் அளவைவிட 2 அங்குலம் கூடுதலாக விட்டு வெட்டுதல் நன்று. உ+ம் கொடுக்கும் அளவின்படி வெட்டுதல். அழகைத் தராது படம் 2ன்படி வெட்டும் முறையை காட்டுகின்றோம். அதன்படி தேவையான அளவினை எடுத்து நான்காக மடித்து வெட்டவும். வெலோனா துணி இழுபடக்கூடிய தன்மையுள்ளதால் அழகாக அமைப்பாக வெட்டுதல் வேண்டும். நீளம் முழங்காலிலிருந்து 3 1/2 அங்குலம் பதிவாக எடுத்தல் வேண்டும். பாதம் மட்டும் எடுக்க வேண்டாம். (கறுப்பு நிறத் துணி அழகு கொடுக்கும்)

நாரிப் பகுதிக்கு இறப்பர் நாடா போடலாம்)

# குழந்தைகளும் பயமும்

-ராணி அக்கா-

**கு**ழந்தைகள் பிறந்ததும் அழுகின்றன. அழுவதற்கும் பால் குடிப்பதற்கும் குழந்தைகளுக்கு எவருமே சொல்லித்தருவதில்லை. ஆகவே குழந்தைகள் அழுவது அவர்களுடைய சுபாவம். அதேபோல் அடம் பிடிப்பதும் இயல்பானதே!

எனவே குழந்தைகள் அழுவதற்கு ஓரளவு அவகாசம் தருவது அவசியம்.

பசியினாலும் குழந்தைகள் அழுவதுண்டு. பாதுகாப்புத் தேடியும் அழுவதுண்டு. இத்தகைய அழுகைகளை ஒரு தாயானவள் இயல்பாகவே இனம் கண்டுகொள்வாள்.

பசியினால் அழும் குழந்தைக்கு பாலைக் கொடுத்ததும் அழுகையை நிறுத்திவிடும். பாதுகாப்பினைத் தேடும் குழந்தை தன் தாயின் அரவணைப்புக் கிடைத்ததும் அழுகைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும்.



பிறந்து இரண்டு மூன்று வயதுவரை எந்தக் குழந்தையும் தன் தாயின் மடியையே எப்போதும் நாடும். ஏற்கனவே கருவறையில் வளர்ந்தமையினால் அந்தச் 'சூடு' குழந்தைக்கு அடிக்கடி தேவைப்படுகிறது. இக்காலங்களில் தாய் அடித்தாலும் திட்டிக் கடிந்து கொண்டாலும் தாயின் காலையே கட்டிக்கொண்டு அழும்.

ஆறு ஏழு வயது வரைக்கும் ஒரு குழந்தைக்கு வீட்டிலுள்ளவர்கள் காட்டும் கரிசனையின் காரணமாக- அதே வீட்டில் தானே மிகமிக முக்கியமானவர் என்ற எண்ணம் வேரூன்றி விடுகிறது. இடையில் அக்குழந்தையின் பின் தம்பியோ தங்கையோ பிறந்துவிட்டால் தன்னுடைய முக்கியத்துவம் பறிபோய்விடுமே என்ற ஒருவகை ஏக்கம் தலை தூக்கிவிடும். இதுவும் ஆராயப்பட வேண்டிய முக்கியமான அம்சமாக இருப்பதனால் இதனை பிறிதொரு சமயத்தில் எடுத்துக்கொள்வோம்.

இப்போ குழந்தைகளின் பய உணர்வு பற்றி சில கருத்துக்களை எடுத்துக் கொள்வோம்.

"ஓடுகிற பாம்பைப் பிடிக்கிற பருவம்" என்று கூறுவார்கள். தவழ்ந்த குழந்தை தத்தித் தத்தி நடைபோடும் பருவத்தில் தன் முன்னால் ஊர்வன, துள்ளுவன போன்றவற்றை எட்டிப் பிடிக்க ஆர்வம் காட்டும். இந்தப் பருவத்தில்தான் குழந்தைகளுக்கு உண்மையான பயம் பற்றிய உணர்வு தோன்றுகிறது. தாயோ அல்லது உறவினரோ அந்தக் குழந்தையின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பிஞ்சு உள்ளத்தில் பயத்தின் விதையினைத் தூவி விடுகின்றனர்.

"பூச்சி...கடி...கடி" மற்றும் இதேபோல் "அதோ பூச்சாண்டி வருகிறது...பிடி...பிடி..." என்று ஆரம்பித்து இருளைக் காட்டி, மரத்தைக்காட்டி, நாயை, பூனையை பல்லியையெல்லாம் காட்டி- அவையெல்லாம் குழந்தைக்குத் தீங்கு விளைவிக்கவே தோன்றிவையாகக் காட்டப்படுகின்றன. இதுவே குழந்தையின் பிஞ்சு உள்ளத்தில் பயத்தின் சாயல் படிய இடம் தருகிறது. இவ்வாறு பயத்தின் உணர்வினைப் பெறும் குழந்தையின் உள்ளத்திலிருந்து பயத்தை விரட்டுவது முடியாததொன்றாகி விடுகிறது.

அடம் பிடித்து அழும் குழந்தையை அடக்கித் தூங்க வைத்துவிட்டு நிம்மதிப் பெரு மூச்சு விட முயலும் தாய்மார் குழந்தைக்கு பய உணர்வினை பக்குவமாக நுழைத்து விடுகின்றனர். எதுவித காரணமுமின்றி குழந்தை அழுவதற்கு இத்தகைய பய உணர்வே காரணமாகிறது. மனதில் குடிகொள்ளும் பயப் பிராந்தி குழந்தைக்கு பலவித நோய்களும் மனக் குழப்பங்களும் உண்டாகக் காரணமாகி விடுகிறது. ஆகவே குழந்தைகளை அடக்குவதற்கு எந்த நிலையிலும் பயங்காட்டுவது தவிர்க்கப்படவேண்டும்.

தங்களிடம் பய உணர்வு ஏற்படுகிறது என்பதை குழந்தையால் உணர்த்த முடியாது. எனினும் அதனுடைய நடவடிக்கைகளிலிருந்து இதனை அறிந்துகொள்ளலாம்.

- சில குழந்தைகள் இருட்டைக் கண்டாலே வீரிட்டு அழும். படுக்கை அறையில் சிறிய விளக்காவது இருக்க வேண்டும்.
- சில குழந்தைகள் தூங்க முடியாமல் அவதிப்படும். கெட்ட கனவு கண்டது போல் இடையில் எழுந்து விளையாடிக்கொண்டிருக்கும்.
- அர்த்தமில்லாமல் எல்லோருடனும் கோபமாக இருக்கும்.
- படுக்கையிலேயே சிறுநீர் கழித்துவிடும்.
- தேவையற்ற கதைகளைப் பேசத் தொடங்கும்.
- பார்வையில் மருட்சி தென்படும்.

இவை பொதுவாக 6 வயது வரையிலான குழந்தைகளிடம் காணப்பட்டால் அதற்கான காரணம் பயமே யாகும்.

அன்பினாலும் ஆறுதலுடன்கூடிய அரவணைப்பினாலும் மட்டுமே குழந்தைகளின் பயப் பிராந்தியைப் போக்க முடியும்!

**சிலேடை கேண்மின்**

# உண்டேன் உண்டிலேன்

*பாண்டிய மன்னனின் திருமணம். ஔவைப் பாட்டியாரும் சென்றிருந்தார். எக்கச் சக்கமான கூட்டம். ஔவையாரை அடையாளம் தெரியாத மக்கள் நெருக்கித் தள்ளினார்கள்.*

*எனவே, திருமண வீட்டில் விருந்து சாப்பிட முடியாமல் ஔவையார் திரும்பிவர, எதிரே வந்த புலவர்கள் சிலர்,*



*"திருமணம் நன்கு கண்டீரா? விருந்தெல்லாம் திருப்தியாய் உண்டீரா?" என்று கேட்டனர்.*

*அதற்கு ஔவையார் " உண்டேன், உண்டேன், உண்டேன்" என்று மூன்று முறை பதில் சொன்னார்.*

*"ஓகோ திருப்தியான உணவு என்பதால் மூன்று முறை உண்டதாக குறிப்பிட்டீரோ?" என்றனர் புலவர்கள்.*

*அதற்கு ஔவையார்; "கூட்டத்தில் நெருக்குண்டேன்! தள்ளுண்டேன்! ஆகையால் பசியால் சுருக்குண்டேன்! ஆனால் சோறு மட்டும் உண்டிலேன்! அதனைத்தான் மூன்று முறை உண்டேன் எனக் குறிப்பிட்டேன்" என்றார்.*

# வாயடைத்துப் போன சேர்ச்சில்



சேர்ச்சில்

**பி**ரிட்டன் பிரதமராக இருந்தவர் சேர்ச்சில்.

பைத்தியக்கார ஆஸ்பத்திரி ஒன்றைப் பார்வையிடச் சென்றிருந்தார். திரும்பி வெளியே வந்தபோது அங்கு நின்ற ஒருவன், "யார் நீங்கள்?" என்று கேட்டான்.

'நான்தான் சேர்ச்சில்"

உடனே அவன் சொன்னான்,

"ஓ.... அப்படியா? சரி, சரி! நானும் இங்கே வருவதற்கு முன் 'நான்தான் நெப்போலியன், என்று சொல்லிக்கொண்டு இருந்தேன். இங்கே வந்தபின்தான் அதைச் சரிப்படுத்தினார்கள். பாவம், இன்னும் உனக்கு ஆறுமாதம் ஆகும்" என்றான்.

வாயாடி என்று பெயர் பெற்ற சேர்ச்சில் வாயடைத்துப் போனார்.

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

# முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 19
உண்மை-நேர்மை-வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்



## "ஒரு ராஜரதம் ஏறி......"

அரவமற்ற அமைதி
அங்கு
அமர்ந்திருந்தது!

வீசும் காற்றில்
ஊஞ்சலாட
விருட்சங்கள் இல்லை,
ஏன்–
காற்றை எதிர்த்து
கை வீசி நடக்க
மனிதர்களே இல்லை!

எங்கே குடி பெயர்ந்தீர்
என்
உயிரான மானிடரே?
என்று,
ஒரு ஊர் அழுகிறது!
அது
காற்றுக்குச் சொல்லி
அழுவது–என்
கவிதைக்குக் கேட்கிறது.

சகோதரனே!
உன் காதுக்கும்
கேட்கிறதா?!

நீ
ஓடி தடம் பதித்தாலும்
உழுது பயிரிட்டாலும்
பழுது சொல்லாது
பரிசு தந்ததே
உனது மண்....!

நீ
வெட்டி எறிந்தாலும்
வேறிடத்தில் போட்டாலும்
மீண்டும்
வீம்பாக வளர்ந்து,
வீர நிழல் தந்தவை
உன் வீட்டு
மரங்கள்!

எண்ணில்லாத
எழில் சுமந்த–உனது
ஊர்
ஓர் கண்ணீர்க்கதையையல்லவா
தன்னுள் சுமக்கிறது!

தற்கால நிகழ்வில்
தவிக்கிறது
ஒரு தேசம்!
ஓர் பொற்காலம்
பொறிக்க
அழைக்கிறது
உன்னை!

உதிர சமுத்திரத்தில்
ஊறிவிட்ட உனது
மண் ஒரு
புதிய சரித்தரம் பெற
நினைக்கிறது!

இந்த ஊர்
பசுமையாய் இருந்தபோது
விசுவாசித்தவர்களே,
அந்த
பாலைவனத்தை
மீண்டும்
சோலைவனமாக்கவேண்டிய
சொந்தக்காரர்கள்
நீங்கள்தானே!

ஒரு ராஜரதம் ஏறி
வீர வரலாறுடன்
வரும்,
விடியலுக்காய்
எங்கள்,
புண்ணிய பூமி
மீண்டும்
பூத்திருக்கிறது!

உனக்கு மண்பற்று
இருக்கின்றதோ
இல்லையோ
அந்த மண்ணுக்கு
உன்மீது
மகாபற்று!

வா தோழா
வாழுவோம் என
அழைக்கின்றது
உன் தேசம்!!!

**சாந்தினி சந்திரன்**
**பரீஸ்.**

## உன் வருகையும் என் மறதியும்

உன்னைப்
பார்த்தபோது...
நான்
சிரிக்க மறந்தேன்.

□□

உன்னைச்
சேர்ந்தபோது..
சிரிப்பில்
எனை மறந்தேன்.

□□

இப்போ..
உன்னைப்
பிரிந்தபோது...
காதலீ!
சிரிப்பையே
நான்
மறந்தேன்.

**அட்டாளைச்சேனை**
**யூயெல். மப்றூக்.**

## உப்பு

அந்த
நீலக்கடலும்
வெள்ளைச்சூரியனும்
காதலித்து
சுகம்கண்டு
பூமியில்
அகதியாய்
விதைக்கப்பட்ட
குழந்தைகள்!

## வேட்டை

அமைதியை
தேடியலைந்த
சமாதானப்
பறவைகள்
ஜனநாயக
அம்புகளால்
அடிபட்டுமரணம்.

**வி. சுதாகர்**
**அக்கரைப்பற்று-08.**







## நட்சத்திரம்

வானத்தில்
வசந்தகால மல்லிகையாய்
வாசம் வீசும்
குங்குமப்பூ!

□

ஆகாய கங்கையின்
வெண் மணலில்
பட்டை தீட்டும்
வைடூரியம்!

□

தேவலோகத்தில்
தேவர்கூட்டம்
பயணம் நடத்தும்
வானவூர்தி!

□

வானகோபுரத்தின்
உச்சியில் நின்று
காற்றில் அசைந்தாடும்
துகிற்கொடி!

□

பஞ்ச முகிலில்
மந்தகாசப் புன்னகை வீசும்
வானவில்!

□

ஆகாயத் தரையில்
துள்ளித் திரியும்
வெட்டுக்கிளிக் கூட்டம்!

**ஷஹிர்ஷா தாஸிம்-தர்கா நகர்.**

## காதலுக்கு இது தேசமல்ல.....

அராஜகம் சமைத்த
சிவப்பு
வீதிகளில்
பிணங்களை(ப்)
புணர்ந்து
ரத்தவாடை
சுமந்து
காற்றுகூட
கலவரப்படுகிறது.

•

மரண
பீதிகளை
மனிதம்
கௌவிக்
கொண்டு
தீக்குளிக்கும்
ஒவ்வொரு
நிசியின்
ஜனனிப்பிலும்
பாடைகள் வந்து
பாய் விரிக்கிறது.

•

விஷமங்களுக்கு
முன்னுரை எழுதி
தசமங்களுக்கு(ப்)
பின்னால் வரும்
புறக்கணித்த
பூச்சியங்களாய்
'மனித நேயம்'
மதிப்பற்றுக்
கிடக்கும்
மயான தேசத்தில்
சமாதானமும்
முடிவிலி தூரம்
முகவரி தொலைத்து
முடங்கிக் கிடக்கிறது.

•

சுதந்திரப் பறவை
றெக்கை கிழிந்து
நொண்டியடிக்கிறது.

•

சிதிலங்கள்
பிடிவாதமாய்
பிரியப்பட்டுக்கொள்ளும்
இந்த
யுத்த புவனம்
இளமைகளை
உதிர்த்து
உதிர தானம் செய்து
சரித்திரங்கள்
சமைக்கிறது.

•

இந்த–
எல்லைக்குள்ளா–உன்
அன்பை
அடையாளப்படுத்துகிறாய்?
நேசகியே–உன்
நேசிப்பை–நான்
(சு)வாசிக்கவில்லை
மனம்
நிராகரிக்கிறது.
காதலிக்க–இது
தேசமல்ல.

•

பிறப்பிலேயே
இறப்பின் சேதி
எழுதப்பட்ட
இந்த
மயான பூமியில்
மல்லிகை– எனக்கு
மணக்காது.
இதயமிருக்காது
அதில்
பரிவு
பரிணமிக்காது.

•

ஓ....
சகியே!
எனக்காக–நீ
என்றால்
ஆயுதங்கள்
ஆர்ப்பரிக்காத
தேசமொன்றுள்
உன்னை
அடையாளப்படுத்து.
அப்போது
நான்
உயிரோடு இருந்தால்...

**நிவேப்பிரியன்-பொத்துவில்-03.**

## (ம)ரதி தோற்கும் அழகி!

1. சித்தத்தை தனதாக்கும் சிட்டு
   சேயிழையின் தனங்கமல மொட்டு
   பித்தத்தால் அனுதினமும்
   பெருங்காம நோய் நல்கும்,
   உத்தமியாள் இனிக்கின்ற 'லட்டு'
2. வண்ணமலர் தனிலமரும் அளிகள்
   வனப்பினையே காட்டுமிரு விழிகள்
   பெண்ணிவளின் பார்வைகளோ
   பெரும் போதை தனை நல்கும்,
   உண்மையிலே மயக்கின்ற மொழிகள்!
3. கண்ணாடி போலெழிலாம் கன்னம்
   கால் பெயர்த்து அசைந்தாலோ அன்னம்
   உண்மையில் அயல்வந்தால்
   உளத்தினிலே மூண்டு விடும்,
   அன்னவளைச் சுவைக்கின்ற எண்ணம்!
4. குயில்கூடக் குரலினிலே தோற்கும்
   கொவ்வையது இதழழகை ஏற்கும்
   மயில்போல சாயல்தரும்
   மங்கையுடன் எழில்காட்ட
   அயல்வந்தாள் (ம)'ரதி'யழகும் தோற்கும்!

**அ. கௌரிதாசன்– ஆலங்கேணி கிழக்கு.**

## கமரா முன் பாரதி

புரட்சி கவிஞர் பாரதிதாசன் இல்லாவிட்டாலும் பாரதியாரைப் பற்றி நாம் அறிந்திருப்போம். அவர் கவிதைகளையும் படித்திருப்போம். ஆனால் பாரதியாரின் தோற்றம் எப்படி இருந்திருக்கும் என்று மட்டும் அறிந்திருக்க மாட்டோம்.

அதாகப்பட்டது, பாரதியாரை புகைப்படம் எடுக்கும் ஸ்ருடியோவுக்கு அழைத்துப்போய் படம் எடுக்கச் செய்தவர் பாரதிதாசன்தான். அந்தப் படத்தில் பாரதியார் முழுக் கோட்டு அணிந்து, வேட்டியுடன், வலக்கையில் ஒரு தடியுடன் காட்சி தருவார்.



கம்பீரமான முகப்பொலிவோடு காட்சிதரும் அந்தப் படத்தைத்தான் தற்போது மார்பளவுக்கு தயாரித்து பயன்படுத்தி வருகிறோம்.

பாரதியார் படம் எடுக்க சென்ற ஸ்டியோவில் இருந்த படப்பிடிப்பாளர் பாரதியாரை "அப்படி உட்காருங்கள், இப்படி உட்காருங்கள்" என்று கட்டளை யிட்டுக்கொண்டிருந்தார். நேரம் ஆக ஆக பாரதியார் பொறுமையைத் தொலைத்துவிட்டார். ஒரு கட்டத்தில் படப் பிடிப்பாளர் பாரதியாரிடம் "கால் சரியாக இல்லை, காலை அப்படி வையுங்கள்" என்று சொல்ல, கோபமாகி விட்டார் பாரதியார்.

"முதலில் உமது கால் சரியாக இருக்கிறதா என்று பாரும்" என்று சத்தமாகச் சொன்னார் பாரதியார். அந்தப் படப்பிடிப்பாளர் தத்தித் தத்தி நடப்பவர்!

## அவர் இவர்தான்



அமெரிக்க ஜனாதிபதி கிளிண்ரன்தான் 2ம் பக்கச் சின்னக் குழந்தை. சமீபத்திய அமெரிக்க நாடாளுமன்றத் தேர்தலில் கிளிண்ரனின் ஜனநாயக கட்சி தோல்வி கண்டிருக்கிறது என்பது தெரிந்ததுதானே!



## இந்த வாரம் உங்கள் பலன்

(11.12.94 முதல் 17.12.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

விருட்சிகம் - சூரியன், வியாழன், இராகு, வெள்ளி
தனு - புதன்
கும்பம் - சனி
மேடம் - கேது
சிம்மம் - செவ்வாய்

சந்திரன்–மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சிகள் பலிதம். | காலை 9 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, வெளியிடப் பயணம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, பலவித நன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், எடுத்த கருமம் வெற்றி. | பி.ப. 1 மணி |
| சனி- | காரியசித்தி, கடன் தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | தூர இடப் பயணம், காரியானுகூலம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- | பணவரவு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், எதிர்பாரா செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- | தூர இடப் பயணம், கோப மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய் தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனப் பயம் நீங்கும். | காலை 6 மணி |
| செவ்வாய்- | தூர இடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, தேகசுகம் பாதிப்பு. | காலை 8 மணி |
| வியாழன்- | துன்ப மிகுதி, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | எதிர்பாரா நன்மை, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- | இடமாற்றம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, மனக் கவலை நீங்கும். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, புதிய இடமாற்றம். | காலை 6 மணி |
| புதன்- | அந்நியரால் நன்மை, அகால போசனம். | பகல் 12 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், முயற்சிகள் பலிதம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, மனக் கவலை குறையும். | பி.ப. 2 மணி |
| சனி- | காரியசித்தி, பணக்கஷ்டம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், வெளியிட பயணம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | எடுத்த கருமம் வெற்றி, மனக் கவலை நீங்கும். | காலை 6 மணி |
| வியாழன்- | துயர் வந்து சேரும், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | எடுத்த கருமம் தடை, பணச் செலவு. | காலை 8 மணி |
| சனி- | உறவினர் பகை, ஆடம்பரச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| திங்கள்- | தொழில் கேடு, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, மனக் கிலேசம். | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் பகை, முயற்சித்தடை. | காலை 7 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், மனக்குறை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு தடை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மனக்கவலை நீங்கும், காரிய சித்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | தனலாபம், செய்தொழில் பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | புதிய முயற்சி, உறவினர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- | பயனற்ற செயல், முயற்சி மேன்மை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவுதடை, தொழில் மந்தம். | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | தனலாபம், செய்தொழில் மந்தம். | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனக் குறை நீங்கும். | பகல் 11 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, எதிர்பார்த்த நன்மை. | காலை 6 மணி |
| சனி- | துயர் நீங்கும், முயற்சிகள் பலிதம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| புதன்- | பொருள் வரவு, கடன் சுமை நீங்கும். | பகல் 11 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, சுகபோகம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், எதிர்பார்த்த நன்மை. | காலை 8 மணி |
| சனி- | பொருள் நட்டம், மனக் கவலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, புதிய முயற்சி. | காலை 6 மணி |
| திங்கள்- | மனக் கவலை, கடன் தொல்லை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, இனசன விரோதம். | காலை 9 மணி |
| புதன்- | பொருள் வரவுத் தடை, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தூர இடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை | காலை 8 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- சனி, அதிஷ்ட இலக்கம் -8

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | குடும்ப நன்மை, பொருள் லாபம். | காலை 7 மணி |
| திங்கள்- | பிரயாண மிகுதி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- | காரியசித்தி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | எதிர்பார்த்த கருமம் வெற்றி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, பண இலாபம். | காலை 9 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, சுகபோகம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-6


### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், மனக் குழப்பம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பெரியோர் நட்பு. | காலை 7 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | காலை 9 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், பொருட் செலவு. | காலை 10 மணி |
| வெள்ளி- | புதிய தொழில் முயற்சி, பணச் செலவு. | காலை 9 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3





## அடுத்தவர்க்கு உதவி செய்திடுவோம்

அம்மா அப்பா ஆசிரியர்
மூவரும் தெய்வம் ஆகிடுவார்
சும்மா என்று எண்ணாதே
உண்மை இதையே நீ நம்பு!

கல்வி வாழ்வின் கண்ணாகும்
கருத்தாய்ப் படித்து முன்னேறு
நல்லவன் எனும் பெயர் கூடிடவே
நாளும் நல்லதே செய்திடுவாய்!

ஒற்றுமை வாழ்வின் உயிர்நாடி
உணர்ந்தே செயல்கள் ஆக்கிடுவாய்
பற்றார் உன்னில்-சூழுவதை
பட்டென நீக்கி வாழ்ந்திடுவாய்!

அடுத்தவர்க்குதவி செய்திடுவாய்
அதுவே வாழ்வில் பேரின்பம்
கடுத்த மனமே வேண்டாமே
கனிவாய் வாழ்தல் சிறப்பாமே!

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்-

"உடன் பிறந் தார்களைப் போல- இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில்-இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?"
-மகாகவி பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# கூடா நட்பு



ஒருகாட்டில் ஒரு நரி இருந்தது. அது தந்திரமாகத் தன் உணவுகளைத் தேடிக்கொள்ளும். ஒருமுறை அது, நிறைய உணவை ஒரே வேளையில் சாப்பிட வேண்டுமென்று விரும்பிற்று. அதற்கான தருணம் எப்போது வாய்க்கப் போகிறதோ என்று காத்துக்கொண்டிருந்தது. மரத்தின் நடுவில் உள்ள பொந்து ஒன்றில் அது மிகவும் நல்லவனைப்போல வசிக்க ஆரம்பித்தது. மனதுக்குள் இந்த மரத்தில் கூடு கட்ட வரும் பறவைகள் குஞ்சு பொரித்தால் குஞ்சுகளை அப்படியே சாப்பிட்டுவிடலாமே என்றெண்ணியது நரி.

அதன் எண்ணம் வீண்போகவில்லை. கணவன், மனைவியான இரண்டு கழுகுகள் ஒருநாள் அம் மரத்தடிக்கு வந்தன. மரப் பொந்தில் மிகவும் சாது மாதிரிப் படுத்திருக்கும் நரியைப் பார்த்தன.

"நரியாரே! இந்த மரப் பொந்தில் எவ்வளவு காலமாக இருக்கிறீர்?" என்று கேட்டது ஆண் கழுகு.

அப்போதுதான் பார்ப்பதுபோல் கண்களைக் கசக்கி விட்டுக்கொண்ட நரி, "கழுகாரே வாருங்கள், கூட வருவது உங்கள் மனைவியா?" என்று கேட்டது.

"ஆமாம்," என்ற கழுகு, "நான் கேட்டதற்கு நீர் இன்னமும் பதில் சொல்லவில்லையே," என்று கேட்டது.

"ஆமாம், இந்த மரப்பொந்தில் பல வருடங்களாக இருக்கிறேன். ஏன் கேட்கிறீர்?" என்று கேட்டது நரி.

"நானும், என் மனைவியும் இம் மரத்தில் கூடு கட்டி, முட்டையிட்டு வாழ ஆசைப்படுகிறோம்," என்றது ஆண் கழுகு.

"இது மிகவும் ராசியான மரம். முன்பு ஒரு பருந்து கூடுகட்டி குஞ்சு பொரித்து சுகமாக வாழ்ந்தது," என்றது நரி.

"இங்கு ஏதாவது ஆபத்து வருமா?" என்று கேட்டது பெண் கழுகு.

"நான் வயதானவன், இந்தப் பொந்தே கதியென்று கிடப்பவன். நீங்கள் பயப்பட வேண்டாம். நாம் நண்பர்களாக இருப்போம்," என்ற நரி மரத்தை அண்ணாந்து பார்த்து மூன்று கிளைகள் பிரியும் ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி, அங்கு கூடு கட்டிக்கொள்ளுமாறு சொன்னது.

ஆண் கழுகும், பெண் கழுகும் அங்கு சென்று கூடுகட்ட ஆரம்பித்தன. ஆண் கழுகு வெளியில் இரை தேடச் செல்லும் போது நரியைப் பார்த்து, "என் மனைவி மட்டும் கூட்டில் இருக்கிறாள். அவளால் பறக்க முடியவில்லை. இன்றோ, நாளையோ முட்டையிடப் போகிறாள் கொஞ்சம் பார்த்துக்கொள்ளும் நரியாரே," என்றது.

"கவலைப்படாமல் போய் வாரும் நண்பரே! நான் இருக்கும்வரை எந்த ஆபத்தும் அண்டாது", என்றது நரி.

நமக்கு நல்ல நண்பன் கிடைத்தான் என்றெண்ணிக்கொண்டு இரைதேட வானில் பறந்து சென்றது ஆண் கழுகு. பெண் கழுகு முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து அவைகள் கொஞ்சம் பெரிதானதும் எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட வேண்டும் என்று நரி எண்ணிக்கொண்டிருந்த பொழுது, கீழே பன்றியும் அதன் குட்டிகளும் அதன் பார்வையில் பட்டன. கொழு கொழு என்றிருந்த பன்றிக் குட்டிகளைப் பார்த்ததும் நரிக்கு நாக்கில் நீர் உறியது.

நரியைப் பார்த்து "நரியாரே! இந்த மரத்தடியில் நானும் என் குட்டிகளும் தங்கலாமா?" என்று கேட்டது தாய்ப்பன்றி.

"தாராளமாகத் தங்கலாம்" என்றது நரி.

"எனக்கும், என் குட்டிக்கும் ஏதாவது ஆபத்து வருமா நரியாரே?" என்று கவலையோடு கேட்டது தாய்ப்பன்றி.

"நான் இருக்கும் இடத்திற்கு வந்து விட்டீர்கள் அல்லவா? கவலையே படாதீர்கள். எதிரிகள் எவரையும் இந்த மரத்தடியில் அண்டவே விட மாட்டேன்," என்றது நரி.

பன்றியும் அதை நம்பி தன் குட்டிகளுடன் மரத்தடியில் தங்கிக் கொண்டது.

நாளடைவில் மரத்தின் மேலுள்ள கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. நான்கு குஞ்சுகள் பொரித்தன. அவை எப்போதும் கத்தியபடி இருந்தன. மரத்தடியில் பன்றிக்குட்டிகளும் கர், கர் என்று உறுமியபடி உலவிக் கொண்டிருந்தன. வந்ததை விட பன்றிக் குட்டிகள் இப்போது மிகவும் பருத்திருந்தன. அவைகளை எப்படிச் சாப்பிடலாம் என்று யோசிக்கத் தொடங்கியது நரி.

"நரியாரே! உங்கள் நட்பால் நாங்கள் மிகவும் பத்திரமாக இருக்கிறோம்," என்றன கழுகுகள். "நாங்களும்தான்" என்றன பன்றிகள்.

ஒருநாள் பன்றிகள் இல்லாத சமயம் பார்த்து கழுகுகள் இரண்டையும் நரி அழைத்து, "மரத்தடியில் இருக்கும் பன்றிகள் மிகவும் மோசமானவை. உங்கள் 'குஞ்சுகளை அவை சாப்பிடுவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றன," என்றது.

அதைக் கேட்டு கழுகுகள் இரண்டும் பயந்துவிட்டன. இவ்வளவு ஆசையாகப் பெற்ற குஞ்சுகளைப் பன்றி தின்ன விடலாமா என்று இரை தேடக்கூடச் செல்லாமல் கூட்டிலுள்ள குஞ்சுகளைக் காவல் காக்கத் தொடங்கின. வெளியே எங்கேயும் போகத் தயங்கின.

மேலே ஒருமுறை பார்த்துவிட்டுப் பன்றியிடம் வந்தது நரி,

"பன்றியே நீ உன் குட்டிகளைக் கவனமாகப் பார்த்துக்கொள். மேலே இருக்கின்ற இரண்டு கழுகுகளும் மகா பொல்லாதவை. அவைகள் நீ இல்லாத சமயத்தில் உன் குட்டிகளைக் கொத்திக் கொன்று சாப்பிட நேரம் பார்த்துக்கொண்டிருக்கின்றன," என்றது நரி.

பன்றி பயந்து விட்டது. குட்டிகளை எல்லாம் அழைத்துத் தன்னோடு வைத்துக்கொண்டது. குட்டிகளை தனியாக விட்டுவிடாமல், குட்டிகளுடனேயே இருந்தது பன்றி.

ஆண், பெண் கழுகுகளும், தாய்ப் பன்றியும், குட்டிப் பன்றிகளும் இரை தேடாததால் வாடி இளைத்து, சோர்ந்து ஒருநாள் எல்லாமாக இறந்து போயின.

நரி விரும்பியதுபோல் ஒருமுறையில் அது நிறைய சாப்பிட கழுகுகளும், பன்றிகளும் அதன் தந்திரத்தால் கிடைத்துவிட்டன.

முன்பின் தெரியாதோரோடு யோசிக்காமல் நட்புக்கொள்ளக்கூடாது. 'கூடா நட்பு கேடாய் விளையும்'.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.12.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 69
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 66

**பரிசுக்குரியவர்**
பிஜீசஸ் பேர்வீன்
புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

ஏ.பி.எஃப். முபீன்-ஸாதாத் மகா வித்தியாலயம்-அக்குறஸ்ஸ.

சோபனா சபாரெத்தினம்-ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், மண்டூர்.

ஏ.சி. ரியால்-சென்ஜோசப் த.ம.வி, மஸ்கெலியா.

பவுல். ஜெயகணேஸ்-புதிய குடியேற்றம், மல்வத்தை.

ஸ்ரீசுகந்தி-சாந்த கிளேயர் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு-06.

ஜயபோஜினி சண்முகநாதன்
கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை.

## விடுகதைகளும் விடைகளும்

01. உருவம் ஒன்று. உள்ளம் இரண்டு. அது என்ன?
02. அரசனிடமும் இவள் இருப்பாள். ஆண்டியிடமும் இவள் இருப்பாள். அவள் யார்?
03. ஒல்லியாக இருப்பாள். உயர்ந்திருப்பாள். இருளைக் கண்டால் உயிரைக் கொடுப்பாள். யார் அவள்?
04. பார்த்தால் பச்சைக் கிளி. கையிலே அமர்ந்தால் சிவத்தக்கிளி. அது என்ன?
05. காணும்போது வாங்க மாட்டான். வாங்கும் போது காண மாட்டான். அது என்ன?
06. காலையிலும் தீக்குழிப்பான். மாலையிலும் தீக்குழிப்பான். யார் அவன்?
07. கையில்லை. காலில்லை. தலையுண்டு. கண்ணில்லை. அது என்ன?
08. கண்ணிருந்தும் பார்க்க மாட்டான். நாவிருந்தும் பேசமாட்டான். இவன் காலில்லாத காவல்காரன். அவன் யார்?
09. தாய் ஆலய வாசலிலே, மகன் சாமி சன்னிதானத்திலே, மகள் சாப்பாட்டுக்கடையிலே. யார் அவர்கள்?
10. மரத்துக்கொரு பெயர். காய்ந்தால் இன்னொரு பெயர். தோலுக்கொரு பெயர். விதைக்கு வேறுபெயர். அது என்ன?

### விடைகள்

01. முட்டை 02. பணம்
03. மெழுகுதிரி 04. மருதோண்டி
05. பிரேதப் பெட்டி 06. சந்தனக்குச்சி
07. ஹெல்மட் 08. பூட்டு
09. வாழை மரம், வாழைப் பழம், வாழை இலை 10. வேளாண்மை.


எம்.ஐ. நூருல் பௌசியா-திக்வெல்ல.

## பூர்வ குடியிருப்புக்களும் நாடுகளும்

| | |
|---|---|
| மரவீடு- | பிலிப்பைன்ஸ் |
| புல்வீடு- | ஹவாய் |
| பற்றைவீடு- | அவுஸ்திரேலியா |
| மூங்கில் வீடு- | கலிஃபோர்னியா |
| செங்கட்டிவீடு- | சீனா |
| காகித வீடு- | ஜப்பான் |
| குகை வீடு- | ஆபிரிக்கா |
| சுரங்கவீடு- | சைபீரியா |
| பனிக்கட்டிவீடு- | கிறீன்லாந்து |
| குடிசை வீடு (விக்ராம்)- | வட அமெரிக்கா |
| மரக்குற்றி வீடு- | நியூ கினியா |

கந்தப்பெருமாள் நிமலதாசன்-செட்டிபாளையம்.

## ஆர்க் நாட்டு ஜோன்



□ ஆர்க் நாட்டு ஜோன் என்பவர் யார்?
பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வீரப் பெண். சாதாரண விவசாயின் மகளாகப் பிறந்து, தனது 17வது வயதில் 1429ம் ஆண்டில் இங்கிலாந்துடன் நடந்த பல போர்களில் பிரான்ஸ் வீரர்களை வழிநடத்திச் சென்று பல சாதனைகளைச் செய்தவர்.


□ இவர் பிரான்ஸ் படையில் சேர்ந்ததற்கான காரணம் என்ன?
அப்போதைய பிரான்ஸ் மன்னர் ஏழாம் சார்ள்ஸிற்கு உதவ கடவுள் ஜோனைப் படைத்திருக்கிறார் என்று புனிதர்கள் ஜோனின் கனவில் வந்து கூறியதால் ஜோன் பிரான்ஸ் படையில் சேர்ந்தார்.

□ ஜோனின் மிகப் பெரிய வெற்றி எது?
ஜோன் பிரான்ஸ் மன்னரைச் சந்தித்தபோது ஆர்லியன்ஸ் என்ற நகரை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டுக்கொண்டிருந்தனர். ஜோனைப் பார்த்த மன்னர், சிறிதும் நம்பிக்கை இன்றித்தான் படைத் தளபதி பொறுப்பை ஒப்படைத்தார். ஆனால் பத்தே நாட்களில் ஆங்கிலேயரை முற்றுகையிலிருந்து விரட்டி ஆர்லியன்ஸ் நகரை மீட்டார் ஜோன். அதனால் ஜோனுக்கு 'ஆர்லியன்ஸின் காப்பாளர்' என்ற பட்டப் பெயரும் உண்டு.

□ ஜோன் எப்படி பிடிபட்டார்?
இங்கிலாந்திற்கு எதிரான பல போர்களில் அவர் வெற்றி பெற்றார். பாரிஸ் நகரை அவர் ஆங்கிலேயர்களிடமிருந்து மீட்கப் போராடிய போது அவர் அவர்களால் பிடிபட்டார்.

□ ஜோன் எப்படிக் கொல்லப்பட்டார்?
ஜோனை சூனியக்காரி எனக் குற்றம் சாட்டி ஆங்கிலப் படையினர் எரித்துக்கொன்றனர். இதன் பின்னர் பிரெஞ்சு மக்களின் கொந்தளிப்பால் அவர்களில் தாக்குதலை தாங்க முடியாமல் ஆங்கிலேயர் தோற்றனர்.

## செய்து பாருங்கள்
# பென் ஸ்டான்ட்




சிறிய மருந்துக் குப்பிகள் உங்கள் வீடுகளில் சேர்ந்திருந்தால் அவற்றை வைத்து உபயோகமான பென் ஸ்டான்ட் செய்யலாம்.

அந்தக் குப்பிகளை எடுத்து மூடிகளை அகற்றிவிட்டு, அவற்றை ஒரு இரப்பர் பாண்டினால் ஒன்றாகச் சேர்த்துக் கட்டவும். பிறகு அவற்றின் மீது செலோரேப் போட்டு குப்பிகள் அசையாதவாறு நன்கு ஒட்டவும். தடித்த மட்டை ஒன்றை எடுத்து குப்பிகளை நிற்க வைத்து, குப்பிகளின்கீழ் ஒட்டவும். பின் அவற்றின் மீது படத்தில் உள்ளபடி அழகிய ஸ்டிக்கர்களை ஒட்டவும். இப்போது உங்கள் பென் ஸ்டான்ட் தயார்.

## கடல் புலி!

கடலில் வாழும் மீன்களில் மிகவும் கோபக்கார மீன் 'பாரகுடா.'



3 மீட்டர் நீளம், 25 கிலோ எடை வளரும். சுறாமீனை விடவும் கோபமுடையது. மனிதர்களை கண்டதும், பாய்ந்து வந்து கடித்துக் குதறும். சுறாமீனை விட இந்த மீனைக் கண்டுதான் கடலில் மூழ்குபவர்கள் அதிகம் அஞ்சுவார்கள். எட்டு வகையான பார குடா மீன்கள் உள்ளன. இந்தியக் கடல்களில் சிறியவகை பாரகுடா மீன்கள் உள்ளன. அட்லாண்டிக் பெருங்கடலில்தான் பெரிய பாரகுடா மீன்கள் உள்ளன. இது 'கடல்புலி' என அழைக்கப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

எழுதுவது

## ரசிகன்

சூர்யாவின் முகத்தில் ஒரு தெளிவு வந்திருந்தது. அவள் கண்களில் எதிராளியை மடக்கிப் போடும் கம்பீரம் தெரிந்தது.

டி.ஐ.ஜி.டென்சில்தான் முதல் கேள்வியைக்கேட்டார்.

"செய்யாத கொலைகளை தோளில் ஏற்று தண்டிக்கப்பட விரும்புவது ஏன் சூர்யா?"

சூர்யா ஆச்சரியப்படவில்லை. முகத்தில் எந்தச் சலனமும் இல்லாமல் கேட்டாள்,

"உண்மையான கொலையாளி வினோ அல்ல என்று தெரியுமா உங்களுக்கு?

"யெஸ்! வினோமீது கொலைப் பழி விழுந்துவிடுமோ என்று பயந்து ஆண்குரலில் நீ பதிவு செய்து அனுப்பிய கற்பனைக் கதை விரயம் சூர்யா!"

என்றார் டி.ஐ.ஜி. டென்சில்.

"மாமப் போன் குரலும் உன்னதுதான் என்றும் தெரியும். கசட்டில் பதிவு செய்து நீ இல்லாதபோதும் போனில் பிரியாவால் போட்டுக்காட்டப்பட்டதும் தெரியும். என்றாலும் அதற்காக உன்னை தண்டிக்கப் போவதில்லை. ஓ.கே. சூர்யா! பழிவாங்கும் களத்தில் நீ குதித்தது பற்றி சொல்லு."

என்றார் டி.ஐ.ஜி. டென்சில்.

"இந்திரா எனக்குத் தங்கை; வினோ என் அண்ணா!"

சொல்லிவிட்டு எல்லோரையும் பார்த்தாள். டி.ஐ.ஜி.டென்சிலும், குலாம்ஷாவும் இந்திராவும் சலனமில்லாமல் அவள் சொல்வதைக் கவனித்துக்கொண்டிருக்க, காயத்திரி மட்டுமே முகத்தில் வியப்புக் குறி காட்டினாள்.

"சூர்யா! சித்ரா வீட்டில் கிடந்த உன் டயறியின் மூலமாக குலாம்ஷாவும் நானும் அதனை ஏற்கனவே அறிந்துகொண்டு விட்டோம்,"

என்றார் டி.ஐ.ஜி.டென்சில்.

"இன்னொரு விசயம் தெரியுமா டி.ஐ.ஜி? இது டயறியில் இல்லாத விசயம்- பிரியாவும் என் தங்கைதான்!"

இந்திரா தவிர மூன்று பேருமே முகத்தில் அதிர்ச்சியும், ஆச்சரியமும் காட்டுவார்கள் என்றுதான் சூர்யா எதிர்பார்த்தாள். ஆனால் காயத்திரி மட்டுமே இப்போதும் அமோகமாய் ஆச்சரியம் முகத்தில் உற்பவித்தாள்.

குலாம்ஷா சொன்னார்,

"சூர்யா! பிரியா ஏற்கனவே சகலமும் எனக்குச் சொல்லிவிட்டாள். தனுஷ்கோடி என்னும் பசுபதி உங்கள் மாமா என்றும், உங்கள் தந்தையார் மரணமான பின்னர் பிரியா அவர் பொறுப் பில் வளர்ந்தாள் என்றும்..."



குலாம்ஷா சொல்ல, கை உயர்த்தி தடுத்து,

"பொறுப்பில் வளர்ந்தாள் என்பதைவிட என் தந்தை விட்டுப்போன சொத்தில் பசுபதிக்கு இருந்த விருப்பில் வளர்க்கப்பட்டாள் என்பதுதான் பொருந்தும் இன்ஸ்பெக்டர். தனுஷ்கோடி என்னும் பசுபதியும் பூபால் அன்ட் பிரதர்ஸ் ஹரிகரன்- பிரசாத் ஆகியோரும் பஞ்சமா பாதகங்களுக்கு அஞ்சுவதே கிடையாது. பணம் மட்டுமே அவர்களுக்கு பிடித்த விசயம். அதற்காக எந்தத் தொழிலிலும் மூக்கை நுளைக்க தயாராக இருந்தனர். பெண்களை நிர்வாண மாக்கி நீலப்படங்கள் தயாரிப்பது முதல் போதை மருந்துக் கடத்தல்வரை அவர்களின் தொழில் கொடி கட்டிப் பறந்தது."

டி.ஐ.ஜி.டென்சில் குறுக்கிட்டுச் சொன்னார், "மனேஜர் மனோகரன், உதவி மனேஜர் சாரங்கன், காரியவாசம், ஜவாஹர், கேசவன் என்று ஒரு பட்டாளமே அவர்களிடம் இருந்தது. காதல் வலை விரித்து கட்டிலறைவரை பெண்களை கொண்டுவந்து தத்ரூபமாக படம் எடுப்பதற்கு அவர்களுக்கு கூலியும் கிடைத்தது."

குலாம்ஷா குரலில் வெறுப்போடு சொன்னார்;

"கூலிக்கு காதலித்தவர்கள்!"

"இந்திராவும் மனோகரின் வலையில் மாட்டினாள். வினோவால் காதலிக்கப்பட்ட சித்ராவும் ஹரிகரனின் வலையில் விழுந்து வினோவை மறந்தாள். இந்திராவுக்கு செய்யப்பட்ட கொடுமையை அறிந்த நீயோ பழிவாங்க நினைத்தாய். கறுப்புடை, கைத்துப்பாக்கி, ரோஜாப்பூ, கத்தி என்று எல்லாவற்றோடும் வேட்டைக்கு கிளம்பினாய்!"

குலாம்ஷா நிதானமாகச் சொல்ல, சூர்யா தனது தலை அசைத்து அமைதியாக ஆமோதித்தாள். கவலை தோய்ந்த குரலில்,

"ஹரிகரனை கொல்வதற்காக நான் அலுவலகம் சென்றபோது அங்கு யாரும் இருக்கவில்லை! நேராக அவன் அறைக்குச் சென்றேன். கதவு தொட்டதும் திறந்தது. ஹரிகரன் ஏற்கனவே கொல்லப்பட்டுக் கிடந்தான்!"

சூர்யா சொல்ல, குலாம்ஷாவின் உதடுகளில் மெல்லிய புன்னகை! புன்னகை மாறாமல் உதடுகளை அசைத்து,

"அதிர்ச்சியாக இருந்தபோதும் ரோஜாப் பூவை மட்டும் அவன் உடலருகே வைத்துவிட்டு வந்துவிட்டாய்."

என்றார் குலாம்ஷா.

"யெஸ்! ஒரு மிருகம் செத்தது பற்றி எனக்கு சந்தோசம்தான்! எனக்கு வேலையே வைக்காமல் ஒரு திட்டம் யாராலோ நிறைவேற்றப்படிட்டுவிட்டது. அது யாராக இருக்கக் கூடும் என்று யோசித்தபோது ஒருவேளை வினோவாக இருக்கலாமோ என்று சந்தேகம் வந்தது.கூடாது- அவன் குற்றவாளியாக மாறக்கூடாது என்ற அவசரத்தில்..."

சூர்யா சொல்லி முடிக்க அவகாசம் கொடுக்காமல் குறுக்கிட்ட குலாம்ஷா,

"பிரசாத்தின் மகளை -நிரோசாவை கொல்ல நீ முயற்சி செய்தாய். ஆனால் அவளைக் கொல்லவும் உன்னால் முடியவில்லை."

சூர்யா குலாம்ஷா சொன்னதை விழிகளால் ஆமோதித்துவிட்டு,

"என்னை ரூமுக்குள் விட்டுப் பூட்டிவிட்டு நிரோசா வெளியே ஓடிவிட்டாள். ரூமின் வெண்டிலேட்டர் வழியே தப்பிக் கொண்ட நான் நிரோசாவை தேடிய போது யாரோ ஒருவனால் அவள் கழுத்தில் நைலோன் கயிறு போட்டு இறுக்கப் பட்டுக் கொண்டிருந்தாள். வினோவாக இருக்குமோ என்று அருகில் சென்று பார்க்க, அவன் என் காலடிச் சத்தம் கேட்டு திரும்பினான். அவன் வினோ அல்ல! என்னை அவன் எதிர் பார்க்கவில்லை. எனினும் உஷாராகி தாக்க முற்பட நான் காலால் உதைத்து வீழ்த்தினேன். அதே நேரத்தில் என் இடுப்பில் இருந்த கத்தி கீழே விழுந்துவிட, ஆவேசம் வந்தவளாய் பாய்ந்து கத்தியை எடுத்து நிரோசா அவன் மார்பில் செருகி விட்டாள். கத்தி செருகியதும் பீறிட்ட குருதியைப் பார்த்துவிட்டு நிரோசா மயங்கிப்போனாள். இன்றுவரை எனக்கு தெரியாத புதிர்-யார் அவன்? எதற்காக அவன் நிரோசாவைக் கொல்ல வரவேண்டும்?"

### அங்கம் 43



சூர்யாவின் கேள்விக்கு பதில் சொன்னார் டி.ஐ.ஜி.டென்சில்,

"அவனுக்கு கொலைக்கான அவசியம் பணம். லீலாவின் அண்ணன் ஜெயக்கொடி கொடுத்த பணம்!"

காயத்திரி கேட்டாள்,

"யார் அது லீலா?"

"லீலா, பிரசாத் வீட்டுப் பணிப்பெண்ணாக வந்தவள். அவள் அழகில் பிரசாத் மயங்கினார். லீலாவை வைத்து பிரசாத்தின் சொத்தை அமுக்க ஜெயக்கொடி திட்டம் போட்டான். ஆனால் பிரசாத்தோ தனது கூட்டாளிகளுக்கும் ஹரிகரனுக்கும் லீலாவை அறிமுகம் செய்து பங்குபோட்டார். லீலாவும் அவர்களில் ஒருத்தியானாள்."

"அதற்காக நிரோசாவை ஏன் ஜெயக்கொடி கொல்ல வேண்டும்?"

கேட்டது காயத்திரி.

"பிரசாத் வீட்டில் லீலாவும், பிரசாத்தும் நெருக்கமாய் இருந்ததை நிரோசா கண்டுவிட்டாள். லீலாவை அழைத்து எச்சரித்திருக்கிறாள். பயந்துபோன லீலா ஜெயக்கொடியிடம் விசயத்தைச் சொல்ல, தனது திட்டமே நிரோசாவால் பாழாகிவிடுமோ என்று பயந்த ஜெயக்கொடி கூலிக்கு ஆள் வைத்து கொல்ல நினைத்தான்."

"ஆனால்...நிரோசா தப்பிவிட்டாள். பின்னர் அவளைக் கொன்றது யார்?"

"சூர்யா முயற்சி செய்தாள். ஆனால் இன்ஸ்பெக்டர் மோகன் விழிப்பாக இருந்ததால் முயற்சி பலிக்கவில்லை. மோகனும் சூர்யாவும் பிரசாத் வீட்டின் வெளியே மோதிக்கொண்டிருக்க அந்தச் சந்தர்ப்பம் ஜெயக்கொடிக்கு சாதகமாக அமைந்துவிட்டது. நிரோசாவை கொலை செய்தது ஜெயக்கொடி."

இப்போது இந்திரா முதற்தடவையாக வாய் திறந்தாள். "அப்படியானால் லீலாவை யார் கொன்றார்கள்?"

குலாம்ஷா இந்திராவைப் பார்த்து புன்னகைத்தார்.

"இந்திரா! கத்தி எடுத்தவன் கத்தியால் சாவான் என்று கேள்விப்பட்டிருப்பாயே? அது இந்த வழக்கில் நூறுவீதம் சரி! பசுபதிக்கும் பூபால் அன்ட் பிரதர்சுக்கும் இடையே உறவில் விரிசல் வந்துவிட்டது. எலியும்-பூனையுமாக மாறிவிட்டார்கள். பசுபதி கெட்ட பாம்பு! ஹரிகரனின் மகள் நிர்மலாவுக்கு தனது ஆள் கேசவன் மூலமாக வலை விரித்தான். நிர்மலா வலையில் விழுந்தாள். போதைப் பழக்கத்திற்கும் அடிமையானாள். பசுபதியின் இன்னொரு ஆள் ஜவாஹரும் நிர்மலாவை பயன்படுத்திக்கொண்டான். எல்லாம் வீடியோவில் பதிவாகி அதனை வைத்து ஹரிகரனை மிரட்ட திட்டமிட்டார் பசுபதி.

அதே சமயம் ஹரிகரனின் மனைவியோடு, அதாவது மைத்துனியோடு பிரசாத் நெருங்கிப் பழகத் தொடங்க, விசயமறிந்த ஹரிகரன் பிரசாத்துக்கு எதிராக பசுபதியின் உதவியை நாடினார். லீலா மூலம் அதனை அறிந்த பிரசாத் முந்திக்கொண்டார்."

என்று குலாம்ஷா சொல்லி நிறுத்த டி.ஐ.ஜி.டென்சில் தவிர ஏனையோர் குலாம்ஷாவை விழிகளில் கேள்வியோடு பார்த்தனர். குலாம்ஷா அது புரிந்து, "பிரசாத் ஒருநாள் இதமான காலை நேரத்தில் தனது சகோதரன் ஹரிகரனை சத்தமே இல்லாமல் இரத்தம் சிந்தவைத்து விட்டார்."

"அடப்பாவி!"

என்றாள் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்த இந்திரா.

"மனோகரும், சாரங்கன் இருவருமே பிரசாத்தின் ஆட்கள். ஹரிகரனும் சித்ராவும் ஒன்றாய் இருந்தபோது எடுக்கப்பட்ட வீடியோ கசட்டை ஹரிகரன் உயிரோடு இருந்தபோதே சித்ராவிடம் காட்டி மிரட்டி அவளை பணியவைத்திருந்தான் மனோகர். சித்ரா மூலம் ஹரிகரனை மடக்கிப்போட்டு அவள் பெயரில் வங்கியில் பணம் போடவைத்தான் மனோகர். அதில் தனக்கும் பங்கு கேட்டான் சாரங்கன்! சாரங்கனை சித்ரா மூலம் சமாளிக்க நினைத்தான் மனோகர். ஹரிகரன் கொலைக்கு மனோகரும் உதவி என்று அறிந்த பசுபதி ஜவாஹர் மூலம் மனோகரை தீர்த்துக்கட்ட முடிவு செய்தான்."

என்று சொல்லிவிட்டு சூர்யாவைப் பார்த்த குலாம்ஷா,

"நீயும் மனோகரை தீர்த்துக்கட்ட சித்ராவின் வீட்டுக்குப் போனாய். மனோகரின் நடவடிக்கைகளை கண்காணிக்க அவனை பின்தொடர்ந்த என் கண்ணில் நீ மாட்டியதால் உன்னை மடக்கி தடுத்துவிட்டேன். என்னிடமிருந்து தப்பி நீ ஓடியதால் உன்னை நான் துரத்தி ஏமாற, அந்த இடைவெளியில் புகுந்த ஜவாஹர் சித்ராவையும் மனோகரையும் கொன்றுவிட்டான். சித்ரா தற்கொலை செய்ததுபோல் பொலிஸ் நம்பும் என்று ஜவாஹர் நினைத்தான். ஆனால் பொலிஸ் முட்டாளல்ல."

பெருமிதமாய் புன்னகைத்துவிட்டு குலாம்ஷா தொடர்ந்தார்,

"மனோகரின் உடலை ஜவாஹர் தனது காதலியான சீமா மூலம் கடற்கரையில் போட்டதை ஹரிகரனின் உதவியாள் காரியவாசம் கண்டுவிட்டான். காலையில் கடற்கரைக்கு வாக்கிங் வரும் பழக்கம் காரியவாசத்திற்கு இருந்ததால் தற்செயலாய் கண்ட காட்சி அது. பொலிசிடம் உண்மையைச் சொல்ல நினைத்த காரியவாசம் பின்னர் தனது முடிவை மாற்றிக்கொண்டு நைசாக நழுவிவிட்டான். அப்போது அங்கு வந்த பிரியாவின் கண்ணில்பட்ட காரியவாசம் அவளால் சரசமாய் பேசி காரில் ஏற்றப்பட்டு உன் வீட்டில் கொண்டுவந்து சிறைவைக்கப்பட்டான்."

"எதற்காக?" என்று கேட்டாள் காயத்திரி.

"காரியாவசம் மூலமாக பூபால் அன்ட் பிரதர்ஸ் பற்றிய மேலும் பல இரகசியங்களை அறிய! இறுதியில் கொன்றுவிட!"

இந்த இடத்தில் தனது பேச்சை நிறுத்தி சூர்யாவை நோக்கிவிட்டு,

"மிகவும் திட்டமிட்டு, முன்பின் அறிமுகமில்லாதவர்கள் போல் நீயும் பிரியாவும் வெளியில் காட்டிக்கொண்டாலும், சித்ரா வீட்டில் நீ தவறவிட்ட டயறி சகல உண்மைகளையும் பளிச் பண்ணியிருந்தது. உதவி மட்டும்தான் நீ பிரியாவிடம் கேட்டாய். அவளோ தனக்கும் ஒரு கடமையிருப்பதாக நம்பி தானும் துப்பாக்கியையும் கத்தியையும் தூக்கிக் கொண்டாள்."

சூர்யா அதிர்ந்து, "அப்படியானால் பிரியா?" என்று கேட்டாள்.

டி.ஐ.ஜி. டென்சில் பதில் சொன்னார்.

"உன்னால் முடியாத கொலைகள் அவளால் முடிந்திருக்கிறது!"

"என்ன?"

"யெஸ்! கேசவனை காரால் மோதிக் கொல்ல முயன்று, அது தோல்வியாக, அவனது ரூமுக்கு நேராகவே போய் காரியத்தை முடித்துவிட்டாள். வினோ என்ன செய்தான் தெரியுமா? கேசவனோடு நிர்மலாவைப் பார்த்துவிட்டு, அவளும் கெட்டுவிடப் போகிறாளே என்று நினைத்து, அவளை எச்சரிப்பதற்காக சின்னதாக ஒரு தாக்குதல் மட்டும் நடத்தினான்.

காயத்திரிக்கு நிம்மதியாக இருந்தது. வினோ எந்தப் பெரிய குற்றத்திலும் மாட்டவில்லையே என்று! தனது சந்தேகத்தைக் கேட்டாள் காயத்திரி.

"திருமதி ஹரிகனரன் கொலைக்கு யார் காணரம்?"

"சொன்னால் ஆச்சரியப்படுவாய் காயத்திரி! தாயின் விதி மகளால் முடிந்தது. யெஸ்! நிர்மலாதான் தாயின் நடவடிக்கை பிடிக்காமல் பெதடின் ஊசி உபயத்தில் ஏற்பட்ட தைரியத்தில் அக்கொலையை செய்தாள்."

காயத்திரி அதிர்ச்சியில் உறைந்து போனாள். குலாம்ஷாவே தொடர்ந்து,

"இதில் வேடிக்கை என்ன தெரியுமா காயத்திரி? பசுபதி-பூபால் அன்ட் பிரதர்ஸ் கும்பலால் பாதிக்கபட்ட நீ என்னிடம் அனைத்தையும் சொல்லிவிட்டு என் யோசனைப்படி பொலிசில் சேர்ந்துவிட்டாய். சட்டத்தின் உதவியோடு உன் எதிரிகளை மடக்க நினைத்தாய்! இந்திராவோ சூர்யாவிடமும், வினோவிடமும் உண்மையைச் சொல்லி அழுதுவிட்டு மூலையில் ஒதுங்கிக் கொண்டாள். கதையைக் கேட்ட வினோ மனதுக்குள் அழுதான். சித்ராவின் துரோகமும் அவனை சுருட்டிப் போட்டுவிட்டது. ஆனால் சூர்யாவும், பிரியாவும் மட்டும் பழிவாங்கியே தீருவது என்று முடிவு செய்துவிட்டார்கள்."

காயத்திரி யோசனையாகக் கேட்டாள்.

"இந்திராவும், சூர்யாவும் வினோவும் தன் மருமக்கள் என்று பசுபதிக்கு தெரியாதா?"

"தெரியாது. சிறு வயதில்தான் பார்த்திருக்கிறார். பசுபதியால் பிரச்சனை வரும் என்று பயந்து இவர்கள் அப்பா சிறுவயதிலேயே இவர்களை அழைத்துக்கொண்டு இந்தியா சென்றுவிட்டார். திரும்பிவந்தபோது மூவரும் வளர்ந்துவிட்டார்கள். பசுபதிக்குத் தெரியாமல் பிரியாவைச் சந்தித்து உண்மையைச் சொன்னார்கள். பிரியாவை தம்மோடு வந்திருக்குமாறு அழைத்தபோது அவள் சம்மதித்திருந்தாள். அதற்கிடையே இந்திராவுக்கு விபரீதம் நடந்துவிட்டது. பிரியா பசுபதியின் சுயரூபம் புரிந்து உள்ளிருந்தே பழிவாங்க பொறுமையாக இருந்தாள். அந்த நேரம்தான் உன் சோகக் கதையை நீ பிரியாவிடம் சொன்னாய்."

என்றார் காயத்திரியைப் பார்த்து. காயத்திரி மௌனமாய் தலையசைக்க,

"பிரியா உன்னை என்னிடம் அறிமுகம் செய்தாள்."

"அப்படியானால் சூர்யாவோடு நிர்மலா சேர்ந்திருக்கும் புகைப்படம்?" காயத்திரி கேட்டாள்.

"சூர்யாவின் பள்ளித்தோழிதான் நிர்மலா. சில சமயங்களில் சூர்யாவோடு வந்து அவள் தங்கியிருந்து செல்வதும் உண்டு."

காயத்திரிக்கு இன்னும் சந்தேகம் தீரவில்லை. கேட்டாள்.

"சூர்யா கடத்தப்பட்டது.....?"

குலாம்ஷா உரத்துச் சிரித்தார்.

"அது பொலிசின் நாடகம்! சூர்யாவைப் பசுபதியின் ஆட்கள் போல கடத்திச் சென்று மிரட்டி உண்மையை அறிய முயன்றோம். சூர்யா புத்திசாலி! பொலிஸ் என்று தெரிந்தே நடித்தாள். விட்டுவிட்டோம். பொலிஸ் என்று சொல்லி விசாரித்திருந்தால் சூர்யாவின் பெண்கள் அமைப்பு ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று இறங்கிவிடுமல்லவா? அதைத் தடுக்கவே அந்த நாடகம்! ஆனால் காரியவாசம் சூர்யாவின் பாதுகாப்பில் இருப்பது நமக்குத் தெரியாது. அவன் இங்கிருந்து தப்பி ஓடிவிட்டான். ஆனாலும் பிரியாவின் வலையில் சிக்கி, அவளைத் தேடி வந்து செத்துப் போனான்."

"இன்னும் ஒரே ஒரு கேள்வி,

"லீலாவைக் கொன்றது யார்?" காயத்திரி கேட்டாள்.

"பிரசாத்துக்கு விசுவாசமானவள் என்று தெரிந்துகொண்ட பசுபதி, ஜவாஹர் மூலம் நடத்திய கொலை!"

சொல்லிவிட்டு சூர்யாவைப் பார்த்து "ஹரிகரன் வீட்டிற்கு பிரசாத்தை தேடி நீ சென்றபோது, ஏற்கனவே அங்கு இன்னொரு உருவம் உன் கண்ணில் பட்டதல்லவா? அது வேறு யாருமல்ல. பிரியாவேதான்! சகோதரிகள் என்றாலும் யார் முந்திக்கொல்வது என்பதில் போட்டிதான்!"

குலாம்ஷா கேலி செய்கிறார் என்று சூர்யாவுக்குப் புரிந்தது. ஆனாலும் பிரியா பற்றிய கவலை சூர்யாவை பற்றிக்கொண்டது.

"பிரியா இப்போ எங்கே?"

"ஜெயக்கொடி, ராகவன் ஆகியோரோடு பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிறாள்."

"ராகவன்?" சந்தேகமாய் கேட்டாள் சூர்யா.

"கேசவனின் தம்பி.பசுபதியால் கொல்லப் படாமல் பிரியாவால் காப்பாற்றப்பட்டவன்.

"சாட்சியத்திற்காக தடுத்துவைக்கபட்டிருக்கிறான். பசுபதி- ஜவாஹர், சாரங்கன், காரியவாசம் போன்றவர்கள் பொலிசை தாக்க முயன்று கொல்லப்பட்டதற்கு அவனும்தான் சாட்சி!"

சூர்யாவும், காயத்திரியும் திகைத்து இருவரும் ஒரேகுரலில்,

"பிரியா செய்த கொலைகளையும் பொலிஸ் என்று....."

குலாம்ஷா சிரித்தார்.

"பொலிஸ் ஆவணத்தைப் பொறுத்தவரை கேசவன் கொலை பற்றி விசாரணை தொடர்கிறது.

"சாரங்கன், காரியவாசம் போன்றோர் என் வீட்டில் புகுந்து என்னைக் கொல்ல முயன்றபோது தற்பாதுகாப்புக்காக நான் சுட்டதில் பலியானவர்கள்."

மர்மயாய் புன்னகைத்தார் குலாம்ஷா.

"நிர்மலா எங்கே?"

இந்திரா கேட்டாள்.

குலாம்ஷா முகத்தில் மெல்லிய சோகம். "சூர்யா! நீ யாரைத் தேடிச் செல்லும் வழியில் இங்கே வந்தாயோ அவள்- அதுதான் நிர்மலா உயிரோடு இல்லை. தற்கொலை செய்துகொண்டாள். அதுமட்டுமல்ல ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரசாத்தும் செத்துவிட்டார். ஆனாலும் சூர்யா! நிரோசாவையும் நிர்மலாவையும் கொல்வது மூலம் நீ துடித்தது போல அவர்கள் குடும்பங்களும் துடிக்கட்டும்- அழியட்டும் என்று நினைத்தது அநியாயம்!"

சூர்யா தலை குனிந்தாள்.

"தாங்யூ குலாம்ஷா."

"குற்றவாளிகள் புத்திசாலித்தனம் காட்டினால் நியாயம் தெரிந்த பொலிஸ்காரன் நிரபராதிகளை காக்க விதிவிலக்கான முறையிலும் நடக்கவேண்டியிருக்கும். இந்த விசாரணையின் முடிவும் அதுதான். பிரியா விடுதலையாகி விடுவாள்."

சூர்யா-இந்திரா-இருவரின் விழிகளும் நன்றிசொல்லிக் கொண்டிருக்க, குலாம்ஷாவும் டி.ஐ.ஜி. டென்சிலும் சூர்யாவிடம் இருந்து கைத்துப்பாக்கியை மட்டும் பெற்றுக்கொண்டு, "மீண்டும் சந்திக்கலாம், நீ வா காயத்திரி!"

**முற்றும்**

## பேனா நண்பர் அரங்கம்



* பி. சந்திரசேகரம்
* 22
* ஆலையடி வீதி, கிரான்குளம்-6 குருக்கள்மடம்.
* பத்திரிகை, கதைப்புத்தகம், வானொலி.



* எம். றிஸ்வி
* 21
* 548,பேராதெனிய வீதி, கண்டி.
* தொலைக்காட்சி பார்த்தல், கிரிக்கெட் விளையாடுதல்.



* சிந்து
* 26
* 39/6, சோமாதேவி பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு -5.
* பாடல்கள் கேட்டல், புத்தகம் வாசித்தல்.



* எஸ்.ராஜன்
* 22
* Lusien STR. 40 B.K. 31 Zurich 8005,Switzerland
* புகைப்படம்பிடித்தல், ரீ.வி. பார்த்தல்.



* எம். வஸீர்
* 27
* Nafa Maintenace & Services, Water Project, P.O.Box-979 Taif, K.S.A.
* பத்திரிகை, சஞ்சிகைகள், தொலைக்காட்சி.



* ஏ. ஹில்மா
* 26
* இல. 270/7, முள்ளிப்பொத்தானை, கந்தளாய்.
* வழமையான பொழுது போக்குகள்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

3

இது வெறும் கற்பனைகளின் அணிவகுப்பல்ல;
சர்வாதிகாரத்தின் கால்களுக்கிடையே விழுந்து கிடந்தவர்களின் உண்மை வாழ்க்கையின் மிகச் சிறந்த படப்பிடிப்பு!

காதலும், சோகமும், வீரமும் கலந்த புரட்சியாளர்களது வாழ்க்கையின் பதிவுமிது!

ரஷ்ய எழுத்தாளர் மக்சீம் கார்க்கியின் எழுத்துக்கள் அமரத்துவமானவை. என்றும் இளமையானவை.

மெல்ல ஆரம்பித்து கதை நடக்கும் சூழல் சொல்லி சூடாக, சுவையாக தொடரப் போகும் கதையிது. தவறவிடாமல் தொடர்ந்து வாசியுங்கள்!

நெகிழ்ந்து, உரமாகி, வசமாகி என்று பல்வேறு உணர்வுகளில் -இத் தொடர்- உங்களை ஆழ்த்தும்! -ஆ-ர்-




# தாய்

## மக்சீம் கார்க்கி

அவள் உயரமாக இருந்தாள் எனினும் ஓரளவு கூனிப்போயிருந்தாள். ஓயாத உழைப்பினாலும், கணவனின் அடி உதைகளாலும் உடைந்து கலகலத்துப் போன அவளது உடம்பு அரவமே செய்யாமல் ஒரு பக்கமாகச் சாய்ந்தே நடமாடியது. எதனோடாவது மோதிவிடுவோமோ என்று அஞ்சி நடப்பதைப் போலத் தோன்றியது. அகன்று நீள வட்டமாக இருந்த அவளது முகம் உப்பியதாய், சுருக்கம் கண்டுபோயிருந்தது. அந்த முகத்தில், குடியிருப்பிலுள்ள பெரும்பான்மையான பெண்களுக்கிருப்பது போலவே, பயபீதியும் சோகமும் தோய்ந்து படிந்த இருண்ட இரு கண்கள் ஒளி செய்துகொண்டிருந்தன. அவளது வலது புருவத்துக்கு மேலாக ஒரு ஆழமான வடு தெரிந்தது; அந்த வடுவினால், அவளது புருவம் ஓரளவு உயர்ந்து போயிருந்தது; இதனால் அவளது வலது செவியும் இடது செவியைவிட ஓரளவு உயர்ந்து போய்விட்டதுபோல் பிரமை தட்டியது. இதனால், அவள் எப்போதுமே ஒரு பயங்கரச் செய்தியைக் கேட்டு அஞ்சுவது போலத் தோன்றியது. அவளது அடர்ந்த கரிய கூந்தலில் ஒன்றிரண்டு நரை மயிர்கள் மின்னிக்கொண்டிருந்தன. அவள் இதமும், சோகமும், பணிவுமே உருவாக இருந்தாள்....

அவளது கன்னங்களின் வழியே கண்ணீர் மெதுவாக வழிந்து சொட்டிக் கொண்டிருந்தது.

“அழாதே!” என்று அவளது மகன் அமைதியாகச் சொன்னான். “எனக்கு இன்னும் கொஞ்சம் குடிக்கக்கொண்டா!”

“உனக்கு நான் கொஞ்சம் ஐஸ்போட்ட தண்ணீர் கொண்டு வருகிறேன்.”

ஆனால் அவள் திரும்பி வருவதற்குள்ளாக, அவன் நன்றாகத் தூங்கிப் போய்விட்டான். அவள் அவனையே ஒரு நிமிஷம் குனிந்து பார்த்தாள்; அவளது கையிலிருந்த குவளை நடுங்கியது; அதனால் தண்ணீரில் கிடந்த ஐஸ் துண்டுகள் குவளையோடு மோதி ஓசையுண்டாக்கின. பிறகு அவள் குவளையை மேஜை மீது வைத்துவிட்டு, சுவரில் இருந்த தெய்வ விக்ரகங்களை நோக்கி முழங்காலிட்டு அமைதியாகப் பிரார்த்தனை செய்யத் தொடங்கிவிட்டாள். ஜன்னலுக்கு வெளியே குடிகாரர்களின் கும்மாளம் ஒலித்து மோதிக் கொண்டிருந்தது. இலையுதிர்கால இரவின் இருளையும் குளிரையும் பிளந்துகொண்டு ஒரு ஆர்மோனியம் எங்கோ ஏங்கி ஒலித்துக்கொண்டிருந்தது. யாரோ உரத்த முரட்டுக் குரலில் பாடிக்கொண்டிருந்தார்கள், யாரோ வாய்க்கு வந்தபடி சரமாரியாக ஆபாசமாக வைது தீர்த்தார்கள்; எரிச்சலும் களைப்பும் நிறைந்த பெண் பிள்ளைகளின் உரத்த குரல்கள் இடையிடையே ஒலித்துக்கொண்டிருந்தன....

விலாசவின் அந்தச் சின்னக் குடிலில் வாழ்க்கை அமைதியாக, முன்னைவிட ஒழுங்காக ஓடிக்கொண்டிருந்தது. மற்ற வீடுகளிலுள்ள வாழ்க்கைக்கு மாறுபட்டிருந்தது. அவர்களது வீடு, குடியிருப்பின் ஒரு மூலையில், ஒரு சரிவு நிலத்துக்கு மேலாக, இருந்தது; என்றாலும் சேற்றுக் குட்டையிலிருந்து மிகவும் உயர்ந்திருக்கவில்லை. வீட்டின் மூன்றிலொரு பாகத்தை சமையலறை ஆக்கிரமித்திருந்தது; சமையலறையைப் பிரித்து நிற்கும் ஒரு சின்ன அறையில் தாய் படுத்துத் தூங்குவாள். மீதியுள்ள இரண்டு பாகத்தில் ஒரு சதுரமான அறை இருந்தது. அதில் இரு ஜன்னல்களும் இருந்தன. ஒரு மூலையில் பாவெலின் படுக்கையும், இன்னொரு மூலையில் ஒரு மேஜையும், இரண்டு பெஞ்சுகளும் கிடந்தன. மீதியுள்ள இடத்தில் சில நாற்காலிகளும், ஒரு அலமாரியும் அதன்மீது ஒரு கண்ணாடியும் இருந்தன. அவர்களது துணிமணிகளை வைத்திருந்த ஒரு டிரங்குப் பெட்டி, சுவரில் தொங்கும் ஒரு கடியாரம், மூலையிலுள்ள இரண்டு விக்ரகங்கள்-இவையே இதர சாமான்கள்.

மற்ற இளைஞர்களைப் போலவே தானும் வாழ விரும்பினான் பாவெல். தனக்கென ஒரு ஆர்மோனியப் பெட்டி, கஞ்சி போட்டுத் தேய்த்த சட்டை, பளபளப்பான ஒரு கழுத்து ‘டை’, ரப்பர் செருப்புக்கள், ஒரு பிரம்பு முதலியவற்றை வாங்கி வைத்து, இளவட்டப் பிள்ளையின் ஆசைகளைப் பூர்த்தி செய்திருந்தான். மாலை வேளைகளில் அவன் மது விருந்துக்குச் செல்வான்; அங்கு நடனம் ஆடப் பழகிக்கொண்டான். ஞாயிற்றுக்கிழமைகளில் நன்றாகக் குடித்துவிட்டு வீடு திரும்புவான். ஆனால் ஒட்கா அவனுக்கு ஒத்துக்கொள்ளவே இல்லை; அதனால் அவன் மிகவும் சிரமப்பட்டான். திங்கட்கிழமை காலை நேரங்களில் அவன் தலைவலியோடும் நெஞ்செரிவோடும் எழுந்திருப்பான்; அப்போது அவனது முகம் வெளுத்துப் பரிதாபமாயிருக்கும்.

“நேற்று நாள் இன்பமாய்க் கழிந்ததா?” என்று அவன் தாய் ஒருமுறை கேட்டாள்.

“நரகம்தான்!” என்று புகைந்துபோன எரிச்சலோடு பதில் சொன்னான் பாவெல். “இதைவிட மீன் பிடிக்கப் போயிருக்கலாம், அல்லது ஒரு துப்பாக்கி வாங்கி, வேட்டையாடியாவது பொழுதைப் போக்கலாம்!”

அவன் நேர்மையோடு உழைத்தான். ஒருநாள்கூட ஊர் சுற்றியதில்லை; அபராதம் கட்டியதில்லை. அவன் எப்போதுமே அமைதியான ஆசாமி; எனினும் தன் தாயின் கண்களைப் போன்ற அவனது அகன்ற நீலக் கண்களில் மட்டும், அதிருப்தி பிரதிபலித்துக்கொண்டிருக்கும். அவன் தனக்கென ஒரு துப்பாக்கி வாங்கவும் இல்லை; மீன் பிடிக்கப் போகவுமில்லை. ஆனால், மற்றவர்கள் யாரும் செல்லாத ஒரு புதிய பாதையிலே அவன் சென்றுகொண்டிருக்கிறான் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

அவன் இப்போதெல்லாம் கூட்டாளிகளோடு கூத்தடிக்கச் செல்வதில்லை. பண்டிகை நாட்களில் அவன் எங்கேயோ காணாமல் போய்விடுவான்; திரும்பி வரும்போது குடிக்காமலே சுவாதீனமான புத்தியோடு வந்து சேருவான்.

அவனது தாயின் கூர்மையான பார்வையில், தன் மகனது பழுப்பேறிய முகம் வரவர மெலிந்து வருவதாகவும், கண்களில் அழுத்த பாவம் குடி புகுந்து விட்டதாகவும் உதடுகள் இணைந்து இறுகி உறுதி பாவம் பெற்றது போலவும் தோன்றியது. அவன் எதையோ நினைத்துத் துயரப்படுவது போலவோ, அல்லது ஏதோ ஒரு நோய் அவனை உருக்கி உருக்குலைத்துக் கொண்டிருப்பது போலவோதான் தோன்றியது.

இதற்கு முன்னெல்லாம் அவனது நண்பர்கள் பலர் வீட்டுக்கு வருவார்கள். இப்போதோ பாவெலை வீட்டில் காண முடியவில்லையாதலால், வீட்டிற்கு வருவதையே அவர்கள் நிறுத்திவிட்டார்கள். தொழிற்சாலையிலுள்ள மற்ற இளைஞர்களைப் போல் இல்லாது பாவெல் மாறுபட்டு இருப்பது தாய்க்கு ஆனந்தம் தந்தது; எனினும், **தன்னைச் சுற்றியுள்ள இருண்ட வாழ்விலிருந்து விலகி வேறொரு புதிய பாதையில் கவனமாகவும் பிடிவாதமாகவும் சென்றுகொண்டிருக்கிறான் என்ற உண்மை புரியாத ஒரு அச்சத்தைத் தந்தது.**

(‘பாஷா’-பாவெல் என்ற பெயரை செல்லமாக அழைப்பது)

“பாஷா! உனக்கு என்ன, உடம்பு சரியில்லையா?” என்று சமயங்களில் அவனை அவள் கேட்பாள்.

“இல்லையே சரியாகத்தானே இருக்கிறேன்!” என்று அவன் பதில் சொல்வான்.

“நீ மிகவும் மெலிந்துவிட்டாய்!” என்று கூறி அவள் பெருமூச்சு விடுவாள்.

அவன் வீட்டுக்குப் புத்தகங்கள் கொண்டுவர ஆரம்பித்தான். அவற்றை இரகசியமாகப் படிப்பான்; படித்து முடிந்ததும் அவற்றை ஒளித்து வைத்துவிடுவான். சமயங்களில் அந்தப் புத்தகங்களிலிருந்து ஏதாவது ஒரு விஷயத்தை நகல் செய்துகொள்வான்; அந்த நகலையும் ஒளித்து வைத்துவிடுவான்.

தாயும் மகனும் அநேகமாகப் பேசுவதே இல்லை; அதிகமாக ஒருவரையொருவர் பார்த்துக்கொள்வதும் இல்லை. காலையில் அவன் வாய் பேசாமல் தேநீர் அருந்திவிட்டு வேலைக்குப் போவான். மத்தியானத்தில் அவன் சாப்பிடுவதற்காகத் திரும்பி வருவான். அப்போதும் அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக எதுவும் பேசிக்கொள்வதில்லை. மாலைவரை அவன் மீண்டும் எங்கேயோ போய்விடுவான்.

மாலையில் சீராய் குளித்துவிட்டு தனது புத்தகங்களை நீண்டநேரம் படிப்பான். பண்டிகை நாட்களில் அவன் காலையிலேயே வீட்டைவிட்டுக் கிளம்பி விடுவான். மீண்டும் திரும்பிவருவது இரவு அகாலத்தில்தான். அவன் நகருக்குச் சென்று அங்கு நாடகம் பார்த்துவிட்டு வருகிறான் என்று அவளுக்குத் தெரியும்.

ஆனால் நகரத்திலிருந்து யாருமே அவனைப் பார்க்க வரக்காணோம்.

நாளாக நாளாக தன் மகன் தன்னிடம் வரவரப் பேச்சைக் குறைத்துக்கொண்டு வருவதாக அவளுக்குப் பட்டது. என்றாலும், அவன் சமயங்களில் அவளுக்குப் புரியாத புதுப்புது வார்த்தைகளைப் பிரயோகித்துப் பேசுவதை அவள் உணர்ந்திருந்தாள்.

மேலும், அவனிடம் முன்னிருந்த கொச்சையான, கூர்மையான பேச்சு மறைந்து வந்தது என்பதையும் அவள் அறிவாள். அவனது நடவடிக்கைகளில் தோன்றிய பல புதுமைகள் அவளது கவனத்தைக் கவர்ந்தன.

அவன் அலங்காரமாக உடை உடுத்திக்கொள்வதை நிறுத்திவிட்டான்; தன் உடை, உடல் இவற்றின் சுத்தத்தில் அவன் அதிகக் கவனம் செலுத்தினான். அவனது அசைவுகள் மிகவும் லாவகமாகவும், நாசூக்காகவும் இருந்தன. பழகும் முறையும் எளிமையும் மென்மையும் நிறைந்ததாக இருந்தது.

இவை அனைத்தும் தாயின் உள்ளத்தைக் கவலைக்குள்ளாக்கின. அவளோடு அவன் பழகும் முறைகூடப் புதிய வகையாக இருந்தது. சமயங்களில் அவனே வீட்டைப் பெருக்குவான். ஞாயிற்றுக்கிழமைகளில் அவனே தன் படுக்கையைச் சீர்படுத்திக்கொள்வான். பொதுவாக அவளது வேலைகளுக்கு அவனும் உதவ முன்வந்தான். அந்தக் குடியிருப்பிலுள்ள எவருமே அது மாதிரி என்றும் செய்வதில்லை.

ஒருநாள் அவன் ஒரு படத்தைக் கொண்டுவந்து சுவரில் மாட்டி வைத்தான். அதில் மூன்று மனிதர்கள் உரையாடியபடியே பாதை வழியே ஹாயாக நடப்பது சித்தரிக்கப்பட்டிருந்தது.

“இதுதான் உயிர்தெழுந்த ஏசு கிறிஸ்து; எம்மாஸை நோக்கிச் செல்கிறார்” என்றான் பாவெல்.

அந்தப் படம் தாய்க்கு ஆனந்தம் தந்தது, எனினும் அவள் தனக்குள் நினைத்துக்கொண்டாள்:

“கிறிஸ்துவிடம் உனக்கு இவ்வளவு பக்தியிருந்தால், நீ ஏன் தேவாலயத்துக்கே போகமாட்டேன் என்கிறாய்?”

பாவெலுக்கு நண்பனான ஒரு தச்சன் கொடுத்திருந்த அலமாரியில் புத்தகங்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருந்தது. அந்த அறை மங்களகரமாகக் காட்சியளித்தது.

அவன் தன் தாயை வழக்கமாக பன்மையில்தான் அழைப்பான்; ஆனால் சமயங்களில் மிகுந்த அன்போடு அவளை ஒருமையில் அழைப்பதுமுண்டு.

“என்னைப்பற்றி நீ ஒன்றும் கவலைப் பட்டுக்கொண்டிராதே, அம்மா. இன்று ராத்திரி நான் நேரம் கழித்துத்தான் வீட்டுக்கு வருவேன்.”

அவன் பேச்சு அவளுக்குப் பிடித்திருந்தது; அவனது வார்த்தைகளில் ஏதோ ஒரு பலமும் அழுத்தமும் இருப்பதாக அவளுக்குப்பட்டது.

ஆனால் அவளது பயவுணர்ச்சிகள் அதிகரித்தன. அதன் காரணம் அவளுக்குப் புலப்படவில்லை. அவளது இதயம் அசாதாரணமான ஏதோ ஒரு முன்னுணர்ச்சியால் குறுகுறுத்தது. சமயங்களில் அவளுக்குத் தன் மகனது நடவடிக்கையைக் கண்டு அதிருப்திகூட ஏற்படுவதுண்டு. அப்போது அவள் நினைத்துக்கொள்வாள்:

“மற்றவர்கள் எல்லாம் சாதாரணமாகத்தானே நடந்து கொள்கிறார்கள்; இவன் மட்டும் சந்நியாசி மாதிரி இருக்கிறானே? அதிலும் இவ்வளவு கண்டிப்பாகவா? இவன் வயதுக்கு இது கூடாது!”

மறுபடியும் அவள் சிந்திப்பாள்:

“ஒரு வேளை ஏதாவது பெண் பிடித்திருக்கிறானோ?”

ஆனால், பெண்களுடன் திரிவதற்கெல்லாம் பணம் நிறைய வேண்டும்; அவனோ தன் சம்பளத்தில் அநேகமாக முழுதையும் தாயிடம் கொடுத்து விடுகிறான்.

இப்படியாக வாரங்களும் மாதங்களும் ஓடிக் கழிந்து வருஷங்களும் இரண்டு முடிந்தன. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சந்தேகமும் தெளிவற்ற சிந்தனைகளால் உள்ளுக்குள்ளாக மருகி மருகி வாழும் மோன வாழ்வும் கொண்ட இருண்டு வருஷங்கள்!

* * *

ஒருநாள் இரவு பாவெல் சாப்பாட்டுக்குப்பின், ஜன்னலின் திரையை இழுத்து தன் தலைக்கு மேலாகவுள்ள ஆணியில் தகர விளக்கை மாட்டினான். பிறகு ஒரு மூலையில் அமர்ந்து படிக்க ஆரம்பித்தான். அவனது தாய் பண்ட பாத்திரங்களைக் கழுவி விட்டுச் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்; மெதுவாக அவன் பக்கம் சென்றாள். அவன் தலையை உயர்த்தி, தன் தாயிடம் வந்த காரியத்தை வினவும் முகபாவத்தோடு அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

“ஒன்றுமில்லை, பாஷா! ஒன்று மில்லை!” என்று முனகிவிட்டு, அவள் மீண்டும் சமையலறைக்குச் சென்றாள்; அவளது புருவங்கள் மட்டும் தைரியமற்று நெளிந்து கொடுத்தன. பிறகு அவள் தனது சிறிது நேரச் சிந்தனைப் போராட்டத்திலிருந்து விடுபட்டு, கைகளைச் சுத்தமாகக் கழுவிவிட்டு மீண்டும் தன் மகனை நெருங்கினாள்.

(தொடர்ந்து வரும்)

# தந்திரத் தந்தி

-ஹப்புத்தளையூர் எஃப். லெனாட்குமார்-

எனக்குள் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. தனக்கு கிடைக்க வேண்டிய மரியாதை கௌரவமெல்லாம் இன்னொருவனுக்கு கிடைக்கும்போது யாருக்குத்தான் கோபம் வராமலிருக்கும்.

மனேஜர் கூறிவிட்டு போனவற்றை மீண்டுமொரு தடவை என் மனதுக்குள்ளேயே அசை போட்டுப் பார்க்கிறேன்.

“மிஸ்டர் விஸ்வலிங்கம் நீர் வர வர வேலயில கவனமில்லாம இருக்கிறீர். பாருங்கோ உங்கள போலதானே மூர்த்தியும். இஞ்ச அவர் எவ்வளவு கஷ்டப்பட்டு எல்லா வேலைகளையும் செய்து முடிக்கிறார். வேலைக்கு வாறதெண்டு மட்டும் வந்தா போதாது. அதற்கு திறமையும், எதையும் செய்து முடிப்பேனென்ற எண்ணமும் தேவை. இன்னும் ஒரு கிழமையில உங்களுக்கு வரும் பொதுப் பரீட்சையில உங்களில யார் கெட்டிக்காரர் என்று தீர்மானிச்சு, அவர உதவி மனேஜரா போட தீர்மானிச்சிருக்கோம். இனி சரி பொறுப்பா வேலை செய்வீங்களென்று நினைக்கிறன்.”

என்ன அவமானம்! அதுவும் எனக்கு பிடிக்காத- என்னோடு ஒத்துப்போகாத அந்த மூர்த்தியின் முன்னாலா என்னை அவர் இப்படி அவமானப்படுத்த வேண்டும்? எல்லாம் அவனால் வந்தது. அவனுக்கொரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும். மனதுக்குள்ளேயே தீர்மானமெடுத்துக்கொண்டேன்.

□□□

இன்று புதன்கிழமை. விடிந்தால்- நாளை, உதவி மனேஜர் யாரென்று தீர்மானிக்கும் பரீட்சை. என் மனதுக்குள் இனம் புரியாத பயமொன்று ஒட்டிக் கொண்டிருந்தது.

“மூர்த்தி சேர் உங்களுக்கு தந்தி!” ஆபிஸ் பையன் கொடுத்துவிட்டுப் போக மூர்த்தி அதிர்ந்து போனான். தந்தியை உடைத்து படித்தவனின் முகம் லேசாக வியர்த்தது.



எனக்கோ உள்ளுக்குள் பெருத்த மகிழ்ச்சி. தந்தியை எடுத்துக்கொண்டு மனேஜர் அறையை நோக்கி ஓடிய மூர்த்தியின் பின்னால் நானும் நடக்கிறேன்.

“என்ன மூர்த்தி செய்யப் போறீர்?”

“சேர்...எங்கம்மா செத்துப்போனா எண்டு தந்தி வந்திருக்கு. கட்டாயமா போக வேணும் சார்...”

உள்ளே நடக்கும் உரையாடல்கள் எனக்கு தெளிவாகக் கேட்டன. மனேஜர் சரியென அனுமதி தரவும், நான் என்னிடத்தில் வந்தமரவும் சரியாக இருந்தது.

இனி நான்தான் உதவி மனேஜர். அதில் எந்தவிதமான சந்தேகமும் எனக்கிருக்கவில்லை. இந்த அலுவலகத்தில் என்னைவிட திறமையானவன் மூர்த்தி ஒருவன் மட்டுமே. என் திட்டம் நிறைவேறிவிட்டது. என்னுள் மகிழ்ச்சிப் பூக்கள் மொட்டவிழ்த்தன.

□□□

இன்று பரீட்சைநாள். பரீட்சை மண்டபத்தின் வாசலில் காலடி வைக்கும் போதே ஆயிரம் மலர்கள் என்னுள் பூப்பதை போன்ற உணர்வு.

கஷ்டப்பட்டு மூர்த்திக்கு பொய் தந்தி கொடுத்ததே இந்த உதவி மனேஜர் பதவியை பெறத்தானே? இனி என் காட்டில் தான் மழை பெய்யும்.

“விஸ்வலிங்கம்..!” குரல் வந்த திசையை நோக்கிய என்னை ஆயிரம் சம்மட்டிகளால் ஓங்கி அடிப்பதை போன்றதோர் உணர்வு!

“மூர்.....த்...தி!”

“மூர்த்தியேதான்..!” அவன் என்னை வெறுப்போடு பார்க்கிறான்.

“விஸ்வலிங்கம்! நான் ஆரம்பத்தில் இருந்தே நினைச்சேன். நீர் ஏதாவது விளையாட்டு காட்டுவீரெண்டு. எங்களின்ர வீட்டார் தந்தி அடிச்சதபோல நீர் தந்தி அடிச்சிருக்கிறீர். ஆனால் உமக்கு தெரியாது, சின்ன வயசா நானிருக்கும் போதே என்ர அம்மா செத்துப் போனது. ஏன் இப்படி செய்தனீர்? கேவலம்! ஒரு சின்ன பதவிக்காக மனிதாபிமானமே இல்லாம நடந்திட்டீர். ஒண்டு மட்டும் நல்லா தெரிஞ்சுக்கொள்ளும். எதுலயும், எங்கயும் எப்பவும், திறமைக்குதான் மதிப்பு இருக்கும். நாங்கள் எல்லாமே மனிதர் தானே? அப்ப ஏன் எங்களுக்குள்ள பொறாமையை காட்ட வேணும்! ஒரு சின்ன இடத்துல வேல செய்யிற நமக்குள்ள ஒற்றுமையில்லாட்டி எப்படி நாட்டுல ஒற்றுமை வரும்..?”

அவன் கூறிக்கொண்டே போனான். குற்ற உணர்வில் என் மனம் வலித்தது. அவமானத்தால் என் தலை குனிந்தபடியே இருந்தது. ஆனால் என் மனதில் எங்கோ ஒரு மூலையில் மட்டும் ஒரு சிறிய ஒளி லேசாக படர ஆரம்பித்தது. ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# அத்தானின் முத்தங்கள்

-என். உதயகுமார்-



**"அத்தானின் முத்தங்கள்**
**அத்தனையும் முத்துக்கள்**
**அழகான கன்னத்தில்**
**அடையாளச் சின்னங்கள்....."**

இனிமையாக ஒலித்துக்கொண்டிருந்த சுசிலாவின் குரலோடு சேர்ந்து பாடிக் கொண்டிருந்தாள் நித்யா. கடைசி வரிகளைப் படிக்கும்போது அவளையறியாமலேயே அவளது கன்னங்கள் சிவந்து குழி விழுந்தன. 'அத்தான்' என்ற வார்த்தை அவள் மனதிற்கு குளிர்ச்சியைக் கொடுத்தது. மீண்டும் மீண்டும் அதே வார்த்தையை பாடவேண்டும் போலிருந்தது நித்யாவுக்கு.

நித்யாவுக்கும் அவளது அத்தான் நடேசனுக்கும் திருமணம் நடப்பதற்கு இன்னும் ஒரு வாரம்தான் உள்ளது. அவர்கள் சிறு வயதாய் இருக்கின்றபோதே நித்யாவின் பெற்றோரும் நடேசனின் பெற்றோரும் நடேசனுக்குத்தான் நித்யா என்று அன்றே நிச்சயப்படுத்தி வைத்திருந்தார்கள். நித்யா அறிந்த பருவத்திலிருந்தே நடேசன் தான் அவளுடைய கணவன் என்று அவள் மனதில் கனவுகளை வளர்க்க காரணமாயிருந்தவர்கள் அவளது பெற்றோர்தான்.

அன்றிலிருந்து நித்யா அவளது அத்தான் நடேசனையே தனது புருஷனாக எண்ணி கற்பனையில் வாழத் தொடங்கி விட்டாள்.

பாலர் வகுப்புப் பிராயத்திலிருந்தே அவனுடன் ஒன்றாய் கைகோர்த்து பாடசாலைக்குச் சென்று, ஆடி விளையாடித்திரிந்த அவளுக்கு அவள் பருவமடைந்த நாளன்றுதான் அவளுக்கும் நடேசனுக்கும் இடையிலுள்ள உறவை அவள் முற்று முழுதாக உணர்ந்து கொண்டாள்.

அவளை அவனுடன் கதை பேச்சு வைத்துக்கொள்ளக்கூடாதென்று அறையில் வைத்து தனியாக பூட்டியபோதுதான் அவளுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது.

ஒரு பொழுதாவது நடேசனை பார்க்காது, பேசாது இருந்திராத அவளுக்கு திடீரென்று இப்படி அவனைப் பார்க்கக்கூடாதென்றபோது பெரும் பாடாயிருந்தது. தனக்குத்தான் வெளியில் செல்ல வழியில்லை, ஆனால் அவனாவது தன்னை வந்து பார்க்கலாமல்லவா என்று அவன் மீது கோபப்பட்டாள்.

அடுத்த முறை அவனைச் சந்திக்கும் போது கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அவன் தன்னிடம் அதற்காக மன்றாடவேண்டும், அதை அவள் மனதினுள் இரசிக்க வேண்டும்.... இப்படி பலவாறு நினைத்து வைத்திருந்தாள் நித்யா.

அவளை அழகுபடுத்தி கொலு பொம்மையைக் காட்சிக்கு வைத்ததுபோல் எல்லோர் முன்னிலையிலும் அமர வைத்த போதுதான் அந்தக் கூட்டத்தில் அவள் நடேசனையும் பார்த்தாள்.

ஓரமாக நின்று கண்வெட்டாமல் அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவனது பார்வை அவளை என்னவோ செய்தது. அவள் மனதில் நினைத்து வைத்திருந்த அத்தனையும் அவனிருப்பைப் நாணம் நிறைந்து நின்றது. கண்கள் திரும்பத் திரும்ப அவன் நிற்கும் பக்கமே திரும்பிப் பார்த்தாலும் அவனது நேர் பார்வையை தாங்க முடியாதவளாகவும் அவளைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதவளாகவும் பெரும் சங்கடப்பட்டாள் அவள்.

அதன் பிறகு நடேசனை எப்போது பார்த்தாலும் நித்யாவால் அவனுடைய முகம் பார்த்து பேச முடியாமலிருந்தது. எங்கிருந்தோ 'நாணம்' அவளுடன் வந்து ஒட்டிக் கொண்டுவிடும். நடேசன் வீட்டுக்கு வரும் சந்தர்ப்பங்களில்கூட ஓடிச்சென்று அறைக்குள் ஒளிந்துகொண்டுவிடுவாள்.

அவன் மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருந்தாலும் அவனது கண்கள் அவளையே தேடுவதைப் பார்த்து அவள் மனசிற்குள் ஆனந்தப்பட்டுக்கொள்வாள்.

இப்படித்தான் எதேச்சையாக எங்கே யாவது சந்தித்தால்கூட, அவள் தன் தோழிகளுக்குப் பின்னால் தன்னை மறைத்துக் கொள்வாள்.

"எப்படி சௌக்கியமா இருக்கிறியா நித்யா? மாமா, மாமியை நான் நலம் கேட்டதாகச் சொல்." என்று அவன் கூறுகையில் 'சரி' என்று தலையை மட்டும் ஆட்டுவாளே தவிர அதிகம் பேசமாட்டாள். அவனுடைய கண்களில் தென்படும் ஏக்கப் பார்வையையும் ஆசையையும் பார்க்கும்போது நித்யாவிற்கு புரிதபமாகத்தான் தோன்றும்.

ஆனால் அவள் என்ன செய்வாள்...?

அவளுடைய மனதிலும் எத்தனையோ ஆசைகள்....

அவனைத் தினமும் பார்க்க வேண்டும், பேச வேண்டும், அவனுடைய மார்பில் சாய்ந்துகொண்டு தங்களுடைய இல்லற வாழ்க்கையைப் பற்றிக் கதைக்கவேண்டும் என்றெல்லாம் அதை வெளிப்படுத்தாது தன்னுடைய மனசுக்குள்ளே பூட்டி வைத்துக்கொண்டுதான் அவளும் இருந்து வருகிறாள்.

ஆனால் திடீரென்று ஒருநாள் நடேசன் வந்து அவளது பெற்றோரிடம், தான் மேல்படிப்புக்காக இரண்டு வருடம் வெளிநாடு போகப் போவதாக கூறியபோது அவள் இடிந்துபோனாள். அவளால் தன் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளை யாரும் கூப்பிடாமலே, அதைக் கேட்டவுடன் அவள் கால்கள் அவன் முன்னால் இழுத்து வந்து நிறுத்தின. அவள் கண்கள் நனைந்திருந்தன. நித்யாவைக் கண்டதும் நடேசனின் முகத்தில் கவலையும் சந்தோஷமும் ஒருமித்துத் தென்பட்டது.

'என்னை விட்டுவிட்டு, என்னைப் பிரிந்து போகப் போறிங்களா?'

'இரண்டே இரண்டு வருடம்தான். முடிந்தவுடன் ஓடிவந்துவிடுவேன். அதன் பின்பு எங்கள் திருமணம்தான். சந்தோஷமாக என்னை வழி அனுப்பி வை?'

'இரண்டு வருடமல்ல, உங்களுக்காக எத்தனை வருடமென்றாலும் நான் காத்திருப்பேன்.'

வார்த்தைகளுக்குப் பதிலாக அவர்கள் கண்களால்தான் பேசிக் கொண்டார்கள்.

"நான் போயிட்டு வர்றேன் நித்யா" என்று அவன் அவளைப் பார்த்து கூறிய போது கண்களில் நீர் வழிய வார்த்தைகள் தோன்றாது பேசாமல் நின்றாள் அவள்.

தனது மௌனத்தின் அர்த்தத்தை நிச்சயம் அவன் புரிந்துகொள்வான் என்று அவளுக்குத் தெரியும். அதன் பிறகு அவளுக்கு ஆறுதல் அளிப்பது அவனது கடிதங்கள் மட்டுமே.

ஒரு மாதத்திற்கு இரண்டு கடிதங்களாவது நடேசனிடமிருந்து வரத் தவறுவதே யில்லை.

குறைந்தது ஒரு நாளைக்கு ஐந்து முறையாவது அந்தக் கடிதத்தை நித்யாவால் வாசிக்காமல் இருக்க முடியாது. இப்படித்தான் கடந்த இரண்டு வருடங்களையும் நித்யா கடத்தியிருந்தாள்.

நடேசன் படிப்பை முடித்துக்கொண்டு திரும்பியதுமே, இரண்டு வீட்டிலும் ஏற்கனவே பேசி வைத்திருந்தபடி, அவர்கள் திருமணத்திற்கு நாளைக் குறித்து விட்டார்கள்.

இன்னும் இரண்டே வாரங்கள்......

அதன் பின்பு அவள் நடேசனுக்கு சொந்தமாகிவிடுவாள்.

எப்போதும் அவன் அவளுடன் இருக்கப் போகிறான் என்ற நினைப்பே அவள் மனதில் தேனாய் இனித்தது.

"அத்தான் என் அத்தான்...
அவர் என்னைத்தான் எப்படிச் சொல்வேனடி..." நித்யாவின் உதடுகள் பாடலை முணுமுணுத்தன.

••

"இந்த கல்யாணம் நடக்கப் போறதில்லை, ஒருநாளும் என்ர மகளை அந்த வீட்டு மருமகளா நான் அனுப்ப மாட்டன்" சத்தமிட்டபடி வந்த அவளது அப்பாவின் குரல் அவளது கனவுகளைக் கலைத்து, அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"நீங்க என்னப்பா சொல்லுறீங்க?"

"நீ ஒன்றுக்கும் கவலைப்படாதேம்மா, அதே முகூர்த்தத்தில வேற நல்ல இடத்தில உனக்கு நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேனம்மா...

"மகன் வெளிநாட்டில படிச்சிட்டு வந்திருக்கிறான் என்ற திமிர், அதுதான் தர்மலிங்கத்துக்கு வாய் நீண்டு போயிடுச்சு." பொருமினார் அவர்.

'நடேசன் அத்தானின் இடத்தில் இன்னொருத்தரா?' அந்த எண்ணமே அவள் மனதில் அருவருப்பை ஏற்படுத்திற்று.

எப்படி அவளால் முடியும்...?

அத்தானுடன் குடும்பம் நடத்தி குழந்தைகள் பெற்று, அவர்களுக்கு பெயர்கூட வைத்து.... இப்படியெல்லாம் கற்பனையில் வாழ்ந்துவிட்டு, இப்பொழுது இன்னொருவருக்கு கணவனாக மாலைசூட எப்படி முடியும்... அவளால்..?

அத்தானா இப்படிச் செய்கிறார், ஒருநாளும் இருக்காது, ஏதோ தவறு நடந்திருப்பதாகவே நித்யாவுக்குத் தோன்றியது.

"அத்தானை வேண்டாமென்று சொல்ற அளவுக்கு அவர் என்ன தவறு செய்திட்டாரப்பா..?"

"நடேசன் நல்ல பையன். அவனில ஒரு தப்பும் இல்லையம்மா, எல்லாம் தர்மலிங்கம்தான்.... மகன் வெளிநாட்டு படிப்பு படிச்சிருக்கிறான் என்ற இறுமாப்புத்தான். அவன் என்னிடமே 'எவ்வளவு சீதனம் தருவாய்' என்று கேட்க வைத்திருக்கிறது."

அவர் கூறியபின்புதான் நித்யாவால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

அவளுக்குத் தெரியும் நடேசன் ஒரு நாளும் அவளை ஏமாற்றமாட்டான் என்று.

"எனக்கு இருப்பது நீ ஒரே, மகள், என்னிடம் இருக்கும் எல்லாச் சொத்துக்களும் உனக்குத்தானே? இது தெரிந்திருந்தும் அந்தத் தர்மலிங்கம் அப்படிக் கேட்க அவனுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்?"

அவரது தொடர்ச்சியான இந்தப் பேச்சு நித்யாவிற்கு இலேசான பயத்தைக் கொடுத்தது.

அப்பாவின் பிடிவாதம், இன்னும் இரு குடும்பத்துக்கிடையே விரிசலை ஏற்படுத்துமோ என்று அவள் கவலைப்பட்டாள்.

ஆனால் நடேசன் நிச்சயம் இதற்கேதாவது செய்வான் என அவள் நம்பினாள்.

அவள் நினைத்தது போலவே மறுநாளே நடேசன் வீட்டுக்கு வந்து விட்டான்.

"என்ன மாமா, இந்தக் கல்யாணம் நடக்காது என்று கூறிவிட்டீர்களாமே? என்ன காரணம் மாமா?"

"அதை நீ உம்முடைய அப்பாட்டத்தான் கேட்க வேணும் தம்பி."

"அப்பாதான் ஏதோ அறியாமல் அப்படிக் கேட்டுட்டாரென்றால், அதற்காக நீங்களும் இப்படி கோபித்துக்கொண்டு வரவேண்டுமா மாமா?"

பரிதாபமாய்க் கேட்கும் நடேசனைப் பார்க்க அவளுக்கு வேதனையாயிருந்தது.

"என்னை தர்மலிங்கம் அவமானப் படுத்தி போட்டான், என்ர மகளை அந்தக் குடும்பத்துக்கு அனுப்ப இனி நான் சம்மதிக்கமாட்டன், நீரும் இனிமேல் மாமா-மாமி உறவு கொண்டாடிக்கொண்டு இந்த வீட்டுக்கு வரவேண்டாம்." அவ்வளவு தூரம்

அவளாகவே இறங்கி வந்து பேசியும் அப்பா அவனை இப்படி அவமதித்துப் பேசியது நித்யாவுக்கு அவர்மீது கோபத்தை ஏற்படுத்தியது. ஓடிச் சென்று 'அத்தான், என்னையும் உங்களுடன் கூட்டிப் போய்விடுங்கள்' என்று கூறவேண்டும் போலிருந்தது. ஆவலுடன் அவள் நடேசனைப் பார்த்தாள்.

'கவலைப்படாதே! எல்லாவற்றுக்கும் நான் இருக்கிறேன்' என்பதுபோல் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு ஒன்றும் பேசாது போனான் நடேசன்.

நித்யா பிடிவாதமாய் கூறிவிட்டாள். 'அத்தானைத் தவிர வேறு ஒருவரையும் திருமணம் முடிக்க நான் முடியாது' என்று. எவ்வளவு அதட்டி உருட்டிப் பார்த்தும் அவள் அவையொன்றுக்கும் பயப்படாது, சோறு தண்ணிகூட இல்லாமல் 'அத்தான் தான் வேண்டும்' என்று கதவைப் பூட்டிக் கொண்டு இருந்தபடியால் அவர் தன் பிடிவாதக் கதவுகளை திறந்துகொண்டு தர்மலிங்கம் வீட்டுப் படியேற நினைக்கையில், அவரே அவர் முன்வந்து நின்றார், பின்னால் நடேசன் நின்றான்.

"என்னை மன்னிச்சிடு, சின்னஞ் சிறுசுகள் முன்னால் நான் தோத்துப் போனேன், தவறு செய்து ஒரு சதம் சீதனம் கூட தராமல், நீ உன்ர மகளை என்ர வீட்டுக்கு மருமகளா அனுப்பி வை." குரல் கலங்கக் கூறினார் தர்மலிங்கம்.

"இதென்ன மச்சான் இப்பவும் வார்த்தை களெல்லாம் பேசிக்கொண்டு? நடேசன் தான் என்ர மருமகன் என்று நான் என்றைக்கோ தீர்மானித்து வைச்சதுதானே மச்சான்." முகம் மலர அவர்களை வரவேற்று, உறவு கொண்டாடினார் அவர்.

அவர்களது பேச்சைக் கேட்டு உள்ளேயிருந்து நித்யா வெளியே ஓடி வந்தாள். நடேசனின் காதல் பார்வையைத் தாங்க முடியாதவளாய் வெட்கத்தால் தலை குனிந்து நின்றாள்.

**"அத்தானின் முத்தங்கள்**
**அத்தனையும் முத்துக்கள்.."**

சுசிலாவின் இனிமையான குரல் காதிற்குள் கேட்டது.

●

# என்று தீரும்

# இந்த யுத்த தாகம்?

-ஷர்மிளா இஸ்மாயில்-



"அவசரமா ஒரு 'ஹெல்மட்' வாங்கணுமடா" திடுதிப்பென அறையினுள் நுழைந்து அவசரமாய் சொன்ன நண்பனை வெறித்தான் ரகு.

"ஏன், மோட்டார் பைக் ஏதும் வாங்கிட்டியா?" ரகுவின் கேள்வி இது. குரலில் வழமையான உற்சாக துள்ளல் மைனஸ்.

"ச், அதெல்லாம் ஒண்ணுமில்ல. அடுத்த வீட்டுக்காரர்களோட தூரியன் பழ மரத்துல ஏறி, களவா பழம் புடுங்கலாம்னு இருக்கேன். பழம் தலைல விழுந்து தொலைக்காம இருக்கத்தான் நானோட ஹெல்மட் ஐடியா. எப்படி இருக்கு?" உலக மகா ஜோக் என நினைத்துக்கொண்டு உளறிக்கொட்டும் நண்பனை ஏறிட்டான் ரகு. நண்பன் எதிர்பார்த்த "அறுவைடா. ரொம்பத்தான் அறுத்துத் தொலைக்கிற- ஓடு. இல்ல உன் வாயில பஞ்சு, துணி ஏதும் வெச்சு அடச்சிடுவேன்." என்று அவனை போலியாக விரட்டும் குரல், உரத்த வார்த்தைகள் இல்லை.

ரகுவின் புதிய மௌனம், நண்பனை யோசிக்க வைத்தது. சட்டென அமைதியானான். அவன் தோள் தொட்டான். ஆராயும் பார்வை பார்த்தான்.

தீர்மானமாய்க் கேட்டான். "ஹேய், என்னடா ஆச்சு உனக்கு? என்னவோ போலிருக்கே?" ரகு எழுந்துகொண்டான். ஜன்னலால் வெளியே பார்வையை ஓடவிட்டான். வானத்தில் வெள்ளையாய்ப் பஞ்சு மேகங்கள். பசுமை சுமந்து செழுமை பொங்கும் இயற்கை அழகு. எங்கும் அழகு. ஆனால் அவன் மனது என்னவோ பாரம் சுமந்ததாய் ஒரு நினைவு.

"ஒண்ணும் பெரிதா நடக்கலடா. நேத்து ஒரு படம் பார்த்தேன். வித்தியாசமான படம். நடிப்பு, இது நிஜமில்லன்னு தெரியுது. ஆனா, அது என் மனச ரொம்ப பாதிச்சுடுச்சு. அந்தப் பாதிப்பு இன்னும் போகல. கண்ண திறந்தா, மூடினா மனசுல ஒரே அந்த முகங்கள். அவர்களின் அச்சம், பயம் கலந்த மனநிலையின் பிரதிபலிப்பு. சில நேரங்களில் மரணத்தை நேர் கொள்ளும் பாங்கு. பயம் உயிர்பற்றி இல்லை. ஆனால் வீட்டுல விட்டு வந்த மனைவி, குழந்தைகள் பற்றி, காதலி பற்றி, எதிர்கால நிலை பற்றி....."

நண்பன் உணர்ந்து கொண்டான். கவிதை மனம் கொண்ட ரகுவை நிச்சயம் பாதித்துள்ள நிகழ்வு ஒரு யுத்தம் பற்றிய படம் என்பதைப் புரிந்தான். "படத்தைப் பார்த்தே இப்படி மிரண்டு போனியே? நிஜ யுத்தம் பார்த்தா என்ன செய்வே?"

கேட்ட நண்பனை ஏறிட்டான் ரகு. "ம்...ஏன்டா, ஏன் இப்படி யுத்தம் செய்றாங்க? யாருக்கு இலாபம்? கடைசியில் எஞ்சுவது என்னன்னு சொல்லு? போன உயிர்களை, சிந்திய இரத்தத்தை மீட்டுக்கொடுக்க முடியுமா? தெரிஞ்சும் ஏன் இப்படி அடிச்சிக்கிறாங்க? கடைசியில எல்லாருக்கும் எஞ்சுவது ஆறடி மட்டும்தான். அது மட்டும்தான்." உணர்ச்சி வசப்பட்டவனாய் ரகு வார்த்தைகளைக் கொட்டினான். நண்பன் மௌனங் காத்தான்.

சுதாகரித்துக்கொண்ட ரகு கதிரையில் சாய்ந்து கொண்டான். நண்பனை ஏறிட்டான். "ஹூம்... நான் ஏதேதோ சொல்லி உன்னக் குழப்பிட்டேன் இல்ல. கண்டுக்காத. இந்தா நான் நேத்து எடுத்த லைப்ரரி புக்ஸ்."

நண்பன் விடைபெற்று போய்விட்டான். மீண்டும் ரகுவை எண்ணங்கள் அலையாகச் சூழ்ந்துகொண்டன. கண்ணை மூடிக் கொண்டான். மனதினுள் அந்தப் படம். "சட்...சட்....சட... சட்சட்..." இயந்திர துப்பாக்கிகள் இடைவிடாது வாயினால் தீ உமிழ்ந்தன. எதிரிகள் சூழ வளைத்து நிற்க நடுவில் அகப்பட்டவர்களாய் இவர்கள். அடர்ந்த காடு. இவர்களின் எண்ணிக்கையோ பத்து. எதிரிகளை எண்ண முடியாத அளவு. எதிர்த் தாக்குதலில் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியாததை உணர்ந்து, காட்டின் மையம் தேடிச் சென்று இருட்டும்வரை காத்து ஒளிந்திருக்கின்றார்கள்.


கடும் இருள் துணை புரிகிறது. ஒருவாறு எதிரிகளின் கண்களில் மண்ணைத் தூவி தீவின் கரையோரம் வந்து ஒளித்து வைத்திருந்த சிறு வள்ளங்களில் தப்பியோடும் திசில். விடிகிறது. மென் காலைப் பொழுது. மனித சுவடு- காட்டின் சௌந்தரியம்- அழித்த கொடுமை. ஒரு முனகல் சத்தம். என்ன?

அங்கே இரத்தம் சிந்திய மண்ணில் நெஞ்சில் ஒரு பக்கம் துளைத்த குண்டுடன் வீழ்ந்து கிடக்கும் இளைஞன். பக்கத்தில் அவன் சகா. தப்பிப்போனவர்கள் எட்டுப் பேர் தானோ? ஆமாம். நண்பனுக்குக் காயம். அவனால் நடக்க- ஓட முடியாது. அவனைத் தூக்கிச்செல்ல நிலமை இடங்கொடுக்காத அவலம். இவனுக்கு விட்டுப் போக மனமில்லை. முடியாது என்று மறுத்த மற்றவர்களையும் அனுப்பிவிட்டு இவன் அவனுக்குத் துணையாகிப் போனான். வள்ளுவர் கண்ட நட்பு.

இவர்களிருப்பதை எதிரிகள் உணர்ந்து சுட்டனர். இவனும் சுடுகிறான். சுட்டான். முடிவில் துப்பாக்கி செயலிழந்து போனது. கீழே வைத்து நண்பனைப் பார்த்தான். "மன்னித்துவிடு நண்பா. என்னால் முடிந்தது இவ்வளவுதான்." நண்பன் புன்னகைத்தான். இவன் புரிந்துகொண்டான். துப்பாக்கிகள் மௌனம் காக்க, காடு முழுதும் அமைதி பூத்திருந்தது. இவன் விரல் நீட்ட, நண்பன் பார்க்கிறான். அங்கே வாணச் சிறகோடு ஒரு வண்ணத்தி, பூவில் அமர்ந்த அழகு. பார்வை மீட்காது இருவரும் ஒருவரையொருவர் தாங்கியணைத்தபடி எழுந்து நிற்க, படபடவென துளைத்துச் செல்கிறது எதிரியின் துப்பாக்கி ரவைகள். பயந்து பறந்த வண்ணத்துப் பூச்சியோ பிரிவது இன்னும் இரண்டு இன உயிர்ப் பறவைகள். அவலம்! என்று தீரும் இந்த யுத்த தாகம்? ரகு இன்னும் உட்கார்ந்தபடியே இருந்தான்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# இலக்கிய நயம்

## நில் நெஞ்சமே!



—தருவது ரசிகன்—

**"நில் நெஞ்சே நீ எங்கே**
**போகிறாய்?**
**வில் விட்டுப் போகும் அம்பாய்**
**எங்கே பாய்கிறாய்?"**

யாழின் நாதம் மீட்டி அவள் இதழ்கள் கீதம் பொழிந்தன.

அழகு இரதமாய் அவள் இருக்க அவள் அருகில் அமர்ந்திருந்தாள் இனிய தோழி.

மேல் இதழும் கீழ் இதழும் வலிக்காமல் மெல்ல தொட்டுப் பிரிய சிவந்த நா அசைவில் அவள் சிந்தையில் உதிர்த்த கீதம் தோழியின் செவிக்குள் விழுந்தது.

"என் அருகில் இரு கண்ணாய் அவர் இருக்க, என்ன குறை இனியெனக்கு என்றிருந்தேன்.

"பொன் தேடி வருவதற்காய் கீழ் வானம் சிவப்பதற்கு முன் நேரம் அவர் போனார்.

"அறம்-பொருள்-இன்பம்-வீடு அத்தனையும் பெற்றுவிட்டால் பேரின்பம்! மற்றவைகள் மூன்றினையும் மாசற்ற நீ எனக்கு மடல் வாழை விருந்து போல் பக்குவமாய் படைத்துவிட்டாய்!

"நெஞ்சுக்கு இது போதும் என்றாலும் வயிற்றுக்கும் நிறைவு வேண்டும். அதற்குத்தான் இனி நாங்கள் பொருள் தேட வேண்டும்.

"பொருள் இன்றிப் போனால் வற்றிப் போவது வயிறு மட்டுமல்ல, வாழ்வும் தான். பயிர் செழிக்க நீர் வேண்டும். வாழ்வுப் பயிர் நிலைக்க பொருள் வேண்டும். அல்லாது போனால் பாலை நிலப் பயிராய் நம் வாழ்வும் நிறம் மாறும்; தடுமாறும்; ஊர்கூட பழிக்கும்; நம் சுற்றமும் நகைக்கும்.

"பொருள் வேண்டும். பேராசையல்ல கண்ணே! எம் வாழ்வு பிறழாமல் பேருவகை சூழ எந்நாளும் பெரும் சிறப்பாய் வாழும் ஆசை!

"வருகிறேன் சென்று நான்! தணியாத ஆசையினை எனக்குள்ளே விதைத்தவளே பிரிவதற்கு மனமில்லை! கையிலோ பொருளில்லை! அதனால்தான் கடும் முயற்சி செய்து கால்களுக்கு பலம் கொடுத்து கடுந் தொலைவு செல்வதற்கு மனக் காயத்தோடு சித்தமானேன்!"

தலைவன் சொல்லிச் சென்றதை பாடலில் சொல்லி யாழில் நாதம் மீட்டி விரல்களுக்கு சிறிது ஓய்வு கொடுத்தாள் தலைவி.

"தோள் மெலிந்து போய்விட்டது. உணவில் நாட்டமின்றிப் போனதுதான் காரணமாம். அம்மா சொன்னாள்."

கவலையோடு கரிசனமான குரலில் சொன்னாள் தோழி.

தலைவி புன்னகைத்தாள்.

"விழிகளுக்கு வஞ்சகம் செய்துகொண்டு வயிற்றுக்கு மட்டும் நிறைவிருந்து போடுவது எப்படியடி?"

என்று வினா தொடுத்தாள்.

"என்னடி இது புதுக்கதை? இதழ்களால்தானே உண்ணுவது? விழிகளால் எப்படி உண்ணுவது? விசித்திரமாய் உளறுகிறாய்!"

என்றாள் தோழி.

"நீ சொல்வது வாழை இலை விருந்துக்கு மட்டும் பொருந்துமடி! நான் சொல்வது நெஞ்சென்னும் மடல் விரித்து அதில் படைக்கும் காதல் விருந்துக்குப் பொருந்தும்!"

தோழி இதழ் விரித்து முத்துப் பல்வரிசை சற்றே தெரியப் புன்னகைத்தாள்.

"ஓ..கோ.... இதழுண்ணும்போது மட்டும் விழிகள் மூடிக்கொள்ளுமாக்கும். இதழ் பரிமாறா நேரத்தில் மட்டும் விழிகள் பசியாறிக்கொள்ளுமாக்கும்!"

தோழி வார்த்தைகள் தலைவியின் முகத்தில் சிவப்பு சாயம் அடித்தன.

"போடி குறும்புனக்கு!"

"உள்ளம் எறும்புனக்கு! கள்ளமாய் சுவைத்த விருந்தை மீண்டும் தேடியலையும் எறும்பு! இனிப்பென்றால் திகட்டாத விருந்தன்றோ எறும்புக்கு!"

தளிர் விரல்கள் பத்தும் விரித்து முத்தார முகம் மறைத்தன வெட்கத்தில்!

"இப்போது மட்டும் வெட்கம்! அவர் இருக்க வேண்டுமே உன் பக்கம்! அப்போது மட்டும் வேறெங்கோ போய்விடுமாக்கும் இந்த விவஸ்தை கெட்ட வெட்கம்!"

தோழி சொல் அம்புகளால் தலைவியை தாக்கிக்கொண்டிருந்தாள்.

பெருமூச்சு மட்டும் வந்தது தலைவியிடம் இருந்து. பேச்சு மட்டும் வரவில்லை.

தோழியோ அதையும் கேலியாக்கினாள்.

"நீ என்ன செய்வாய் பாவம்? நீ மறந்து போனாலும் உன் தலைவன் விரல்கள் செய்த விஷமங்கள் மறக்காமல் அவன் வரவைத் தேடித் தினம் எட்டி எட்டிப் பார்க்கின்றனவே உன் எழில்கள்!"

தலைவிக்கு புரியவில்லை. கேள்விக்குறி தெரிந்தது கயல் விழிப் புருவத்தில்!

தோழி விளக்கம் சொன்னாள்!

"மனதுக்குப் பிடித்தவனை மான் விழிகள் காணாத நேரத்தில் நெஞ்சு விடும் பெருமூச்சின் உபயத்தில் மார்புகள் எழுந்து மன்னவனைத் தேடி எட்டிப்பார்க்கின்றனவே தெரியாதா? அதனைத்தான் சொன்னேன் நான்!"

"மோசமடி நீ!"

"வேஷமடி போடுகிறாய் நீ! மனதுக்குள் மன்னவனை கூடியிருந்த பொழுதுகளின் வாசம்! மறையாத வாசத்தால் தேகத்தை சுட்டெரிக்கும் தாபத்தீ செய்கிறது மோசம்! பூந்தேகம் மெலிந்துருகிப் போகுதடி அந்த மோசத்தால்!"

"வயதான பாட்டிபோல வளர்க்காதே வம்பு வார்த்தைகளை!"

என்றாள் தலைவி போலிக் கண்டிப்புடன் தோழியிடம்!

தோழியா சளைத்தவள்?"

தொடர்ந்தாள் குறும்புக் கணைகளை!

"சொல் அம்பு சுடும்தான் உனக்கு! கள் வெறியில் மூழ்கிப் போய் அவர் விழிகள் தொடுக்கும் ஆசையெனும் அம்புகள்தான் சுகம் உனக்கு!"

வாதாடி வெல்ல முடியாது. வாயாடித் தோழி இவள். தலைவி பணிந்து வந்தாள்.

"உள்ளம் பொருந்தியபின் உடல் பொருந்தி புற உலகு இருப்பதையே நாம் மறந்து, பொழுது புலர்ந்ததுவும் தெரியாமல் கலந்திருந்தோம் யாவும் உண்மை! உனக்கெதற்கு பொறாமை?"

"பொறாமைதானடி இது! நீ தோள் மெலிந்து, தேர் அசைவாய் நடந்துவரும் தேக எழில் குலைந்து போவது கண்ட மனம் பொறுக்காமல் தவிக்கும் பொறாமையடி!"

தோழி சொல்ல தலைவி முதல் தரமாய் தன் இதழ்களில் நகை அமர இடம் கொடுத்தாள்.

"கிண்டல்தான் செய்தேன் நானும்! கிளறப்பட்ட தணலாக உன்னுள்ளே கோப நெருப்பு தெரிகிறது பார்த்தாயா!"

"எனக்கெதற்கு வருகிறது கோபம்? உன் பிரிவுத் துயர்தானே எனக்கும் தருகிறது குறையாத வருத்தம்!"

"எனக்கில்லா வருத்தம் உனக்கேனடி தோழி?"

"மறைக்காதே! நெஞ்சை தடுத்து நீ பாடினாயே கீதம், அதற்கு என்னடி அர்த்தம்? பிரிவென்னும் வருத்தத்தால் வழியும் சோகம்தானே அந்த கீதம்?"

தோழியின் கருத்தை மறுத்து தலைவி சொன்னாள் விளக்கம்.

"நெஞ்சுக்கு நான் இட்ட கட்டளைக்கு காரணம் சோகமல்ல, கோபம்!"

"புளுகாதே! நிறுத்து!"

"புளுகவில்லை! புனையவுமில்லை! புதிய கதையுனக்கு சொல்ல நினைக்கவுமில்லை! நெஞ்சுக்குள் அவர் இருக்க, அறியாத நெஞ்சம் வேறெங்கோ போகிறது! போகாதே நெஞ்சமே என்று புத்தி சொன்னேன்! எதிரி என்றால் கத்தி வீசி தடுக்கலாம். என் நெஞ்சை குரல் எடுத்துக் கத்தித்தானே தடுக்கவேண்டும்!"

"அப்படியா விசயம்? உன் நெஞ்சுக்கு நீ இட்ட உத்தரவை உளறல் என்று நினைத்துவிட்டேன். தவறுதான் உன் நிலையும் திருவள்ளுவர் காட்டிய பெண் அவளை ஒத்ததுதான்!"

என்றாள் தோழி.

நெஞ்சுக்கு புத்திசொன்ன பெண் நிலையை எடுத்துக்காட்டும் திருவள்ளுவர் சொன்ன குறள் இதுதான்;

**"உள்ளத்தார் காத லவராக உள்ளி நீ**
**யாருழைச் சேறி என் நெஞ்சு"**

அதிகாரம்-125, குறள்- 1249

## குறுக்கெழுத்துப் போட்டி இல—79

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | |
| | ■ | 4 | | 5 | | ■ |
| | 6 | | ■ | | ■ | 7 |
| 8 | | | ■ | 9 | | |
| ■ | | ■ | 10 | | ■ | |
| 11 | | ■ | | | ■ | |
| | ■ | 12 | | ■ | 13 | |

### இடமிருந்து வலம்

1. இது வந்தால் சேதங்களும் கூடவரும்.
3. சுறுசுறுப்புக்கு இதையும் உதாரணம் கூறலாம்.
4. கணவன், மனைவியை இப்படியும் அழைக்கலாம்.
8. இவர் அம்மாவின் சகோதரி.
9. சேற்றில் மலர்ந்தாலும் இதன் சிறப்புக் குறையாது.
12. குழந்தைகளின் பஞ்சணை.
13. பொருட்களை எடுத்துச் செல்ல உதவியாய் அமையும்.

### மேலிருந்து கீழ்

1. சதி என்ற இரண்டெழுத்தாலும் சுருக்கமாய் கூறலாம்.
2. இதுவும் பரபரப்பை உருவாக்கும்.
5. படுதோல்வி கண்டோரின் முகத்தில் இதனைக் காணலாம்.
6. இதன் பயன் அறிந்து பயன்படுத்த வைத்தியரை நாடவேண்டும்.
7. இது டாங்கிகளையும் உபயோகப் படுத்தும்.
10. ஆராயாமல் எதனையும் எளிதில் நம்பி விடுவார்.
11. இராமன் காட்டுக்குப் போக இவளும் ஒரு காரணம்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 17.12.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-79**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-77க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சி | ள் | 2 வ | ண் | டு | ■ | 3 அ |
| ற் | ■ | 4 யோ | கா | ச | ன | ம் |
| 5 ப | ந் | தி | ■ | ■ | ■ | மி |
| ம் | ■ | 6 ப | ரு | ப் | பு | ■ |
| ■ | 7 கீ | ர் | த் | தி | ■ | 8 பா |
| 9 பு | த | ■ | ■ | 10 சு | வ | ர் |
| 11 கை | ம் | மா | று | ■ | 12 ஔ | வை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.77இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. கே. சுபாஷினி
   மொரட்டுவை.
2. ஏ.எம். சலீம்
   கொழும்பு-08.
3. எஸ். நிரஞ்சன்
   வவுனியா.
4. பி. விக்கிரமராஜா
   அப்புத்தளை.
5. நிக்ஹத் ஷெரின் நிஸார்
   அனுராதபுரம்.
6. பி. ஷியாமளா
   கண்டி.
7. கே.ஜே. மோசஸ்
   நுவரெலியா.
8. என்.எம். லாபீர்
   பதுளை.
9. வி. கதிரவேலு
   வவுனியா.
10. செல்வி நிஷ்மின்
    தியத்தலாவை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## ஸ்போர்ட்ஸ்

# சர்வதேச 'மாஸ்டர்ஸ்' கிரிக்கெட் போட்டி!

## தயாராகி வருகிறார்கள் முன்னாள் வீரர்கள்!

முன்னாள் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டன் கிளைவ் லோயிட் தலைமையிலான 35 வயதிற்கு மேற்பட்ட கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்க தகுதியுள்ள உலக மாஸ்டர்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டிகளுக்கான கமிட்டி பம்பாயில் கூடியது.

இந்தியாவின் மிகப் பெரும் கிரிக்கெட் வீரர் மறைந்த சி.கே.நாயுடுவின் நூறாவது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடும் விதமாகவும், அவரது நினைவைப் போற்றும் வகையிலும் முதலாவது உலக மாஸ்டர்ஸ் கிரிக்கெட் போட்டிகளை பம்பாய் பிரான்போர்ன் ஸ்டேடியத்தில் நடத்துவது என கிளைவ் லோயிட் அறிவித்துள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக சர்வதேச அரங்கில் விளையாடத் தடை விதிக்கப் பட்டிருந்த தென் ஆபிரிக்க கிரிக்கெட் வீரர்களுக்கு, பழைய வீரர்களுடன் விளையாடுவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகக் கருதப்படுகிறது.

இப்போட்டிகளில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற் கிந்தியத் தீவுகள், இந்தியா, இலங்கை ஆகிய ஆறு



நாடுகளின் அணிகள் தங்களது 35 வயதிற்கு மேற்பட்ட கிரிக்கெட் நட்சத்திரங்களுடன் பங்கேற்கின்றனர்.

இந்த ஆறு தேச உலக மாஸ்டர்ஸ் போட்டிகள் இரவு/பகல் ஆட்டங்களாக 1995ம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் திகதி தொடங்கி 12ம் திகதிவரை நடைபெறும்.

**இந்தியா**

கவாஸ்கர், விஸ்வநாத், சந்தீப் பட்டேல், வெங்சர்கார், மதன்லால், ரோஜர் பின்னி, சியட் கிர்மானி, வெங்கட்ராகவன், அமர்நாத், ஷர்மா, காவ்ரி, அயூப், ஸ்ரீகாந்த்.

**அவுஸ்திரேலியா**

கிரேக் சப்பல், லாசன், லெய்ர்ட், டென்னிஸ் லில்லி, தொம்ஸன், வுட், விட்னி, கே.ஹியூஸ், டெர்ரி அல்டர்மான், ஹுக்ஸ், பிலிப்ஸ், டைசன், டையர்.

**தென் ஆபிரிக்கா**

கிளைவ் ரைஸ், வென்டி பிஜ்ல், ஜி.பொல்லாக், மெக்கன்ஸி, ரிச்சாட்ஸ், மேஜியட், ஸ்மித், மெக்கீரன், போத்தரின்காம், ஹென்றி, லீரெளக்ஸ், ஹன்லி, ஏபிரஹாம்.

**இங்கிலாந்து**

மைக் காட்டிங், லார்கின்ஸ், போல் டவுன்டன், அன்டாவுட், லீவர், ரண்டோல், பில் அத்தே, ஸ்நோ, ரெட்போட், ரிம், ரொபின்சன், ஜோன் எம்பியூரி, பிரிங்கிள், கௌட்ரே.

**மேற்கிந்தியத் தீவுகள்**

ஜோயல் கார்ணர், ஏ.கிறீனிட்ஜ், கிராபட், காளிச்சரண், ஜி.கிறீனிட்ஜ், ஜெவ்டுஜோன், கிளார்க், கார்லிஸ் பெஸ்ட், றிச்சாட்ஸ், கிங்க, மோஸ்லி, கோமஸ், அகஸ்ரின் லோகி.

**இலங்கை**

டுலிப் மென்டிஸ், றோய் டயஸ், சிதத் வெத்திமுனே, ரஞ்சன் மடுகல்ல, அசந்தா டி மெல், சோமச்சந்திர டிசில்வா, கலுபெரும, அபோன்சோ தேவபிரிய, சாலிய அஹங்கம, விஜேசூரிய.

இந்த உலக மாஸ்டர்ஸ் கிரிக்கெட் கோப்பை போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கிரிக்கெட் விளையாடும் நாட்டில் நடைபெறும் என்னும் கிளைவ் லோயிட் தெரிவித்துள்ளார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 58



**இவ்வாரம் (11.12.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:

**பாசமும் பக்தியும் இருவகை உணர்வுகள்.
பாரதக் கதையினில் பக்தியும் பாசமும்
பாதையின் இருபுறப்பக்கங்கள் போன்றே
படர்ந்து வருவதை பார்த்திட முடியும்.
பிதாமகர் பீஷ்மரின் தந்தை மீதெழு
பக்தியைப் பார்க்கின்றோம்; பண்பினை அறிகிறோம்!
திருதராட்டிரன் மைந்தன் மீதவன்
பெருக்கிடும் பாசத்தின் விளைவினைக் காண்கிறோம்!
அண்ணன் மீதவன் தங்கை வைத்திட்ட
அளவிட முடியா அன்பினால் விளையும்
அநர்த்தங்கள் அனைத்தையும் அறிந்திட இன்றே
அரசன் கீசகன் அரண்மனை ஏகுவோம்!**

-காட்சி தொடக்கம்-

கீசகன் அரண்மனைக்கு சௌரந்தரியான திரௌபதை வருகிறாள்.

**சௌ:** வீரனுக்கு வெற்றியுண்டாகட்டும்! அரசருக்கெனவுள மதுவினை எடுத்திட அரசி அனுப்பினார்!

**கீசக:** மாது உனைவிட மயக்கம் தரு மறு மதுவேறுளதோ? மனப்பசி அடங்கிட மாதுனை நானே மதுவென நினைத்தேன்!

**சௌ:** வீரனாம் உமக்கு வீண் வேட்கையே வெறும் வீழ்ச்சிக்கதுதான் ஆகுமென்றோ?

**கீச:** மத்சயநாட்டினில் என் கண் படாமல் எங்கே நீ ஒடி மறைந்திட முடியும்? எங்கு சென்றாலும் உனைவிடமாட்டேன்!

சௌரந்தரி ஓடுகிறாள். கீசகன் துரத்திச் செல்கிறான். அரண்மனையில் விராட மன்னர் முன் சென்று நுழைகிறாள்.

[illegible] வல்லபன் (பீமன்) அரண்மனைக்கு வந்து சேர்கிறான். கீசகன் சௌரந்தரியைத் [illegible]

[illegible] பீமனை [illegible]

**கங்:** (பீமனிடம்)- சமையலறையினில் உறைபு [illegible] நாடக் காரணம் என்னவோ?

**வல்:** சமையலுக்கான சாமான் தேடட [illegible] வந்தேன்.

**கங்:** வேண்டிய பொருளை வேறிடம் தேடு! ஒன்றை நீ நினைவினில் வைத்திட வேண்டும்! நிழல் தரு மரத்தின் இலைகள் ஒவ்வொன்றும் நிறைவுடன் [illegible] பெறுவது அவசியம்!

(பீமன் சென்று விடுகிறான்- திரௌபதி யுதிஷ்டிரனை மெதுவாக 'கோழை' என்று கடிந்துகொள்கிறாள்)

**சௌ:** மக்களைக் காப்பதே மன்னவன் கடமை! தலையில் தாங்கிய மணிமுடியது வும் அரிய செங்கோலும் அரியணை யதுவும் அறவழி பிறழா நீதியின் சின்னம். மன்னவன் முன்னிலை தன்னிலே எந்தன் மானத்தை அழிக்கத் துணிந்தனன் தளபதி! அரசவை அனைத்தும் அமர்ந்துளோரனைவரும் அபலையின் நிலைக்கு அரியதோர் சாட்சி! கீசகனுக்குறு தண்டனை அளித்தே தீயினில் வேகுமென் துன்பம் துடைப்பீர்! (யுதிஷ்டிரனுக்கு மட்டும் கேட்கக்கூடியதாக) இந்த அபலைக்கு ஏற்படும் இழிவினை எத்தனை காலம் சகித்திருப்பீரோ?

**விரா:** கீசகா உனக்கிது அழகானதொரு செயலிலை அன்றோ!

கீசகன் சிரிக்கிறான்.

**சௌ:** "கீசகா உனக்கிது அழகல்ல" என்று கூறிவிட்டதும் நீதியின் முடிவதோ? ஐந்துபேர் வீரரின் பத்தினியான என் பெருமையைப் பறித்தவர் அவனியில் என்றுமே வாழ்ந்திடலரிது. ஆண்டவன் மீது நான் இடுவது ஆணை! எந்தன் துணைவர்கள் ஏற்றம் மிக்கவர், எந்தனுக் கிடுக்கண் விளைத்தவர் தனை அவர் எமனுலகுக்கே அனுப்பியே தீர்ப்பர்!

**கங்:** கால நிலையின் கோலச் செயலுன் கணவரின் கரங்களைக் கட்டி விட்டிருக்கலாம். சௌரந்தரி நீ சமயம் வரும் வரை அமைதியடைவதே அறிவு பாற்பட்டது. மன்னித்திருப்பதே இன்றைய நிலையினில் மகத்துவமாகும். மன்னிப்பதுவே உண்மையுமாகும். அதுவே அன்பின் அறிகுறியாகும். வேதமும் அதுவே மார்க்கமும் அதுவே! நடக்க வேண்டியதை உன் நாயகர் அறிவர். அந்தப்புரத்தில் அரசியின் அணைசேர்! அதுவே இப்போதுனக்குறு அரும்பணி!

**விரா:** அரிய கருத்துக்கள் அனைத்தையும் பகர்ந்தீர்! கங்கணரே! எனை காத்து விட்டீரே! சௌரந்தரி அவள் வீசிய கணைகளால் கவலையுற்றிருந்தேன்; காலத்துக்கேற்ற விடையளித்தவளின் கவனத்தையன்றோ கலைத் தெறிந்திட்டீர்!

-காட்சி மாற்றம்-

சுதேஷ்ணை அந்தப்புரம்-சௌரந்தரி வருகிறாள்.

**சுதே:** என்ன நடந்தது...? ஏனிப்படி நீ அலங்கோலமானாய்?

**சௌ:** ஒன்றுமே அறியாத குற்றமற்றவர் போல் கோலம் காட்டுதல் நலமோ தேவி? அண்ணன் கீசகன் அரண்மனைக்கு எனை அனுப்பியே வைத்தவர் நீரே அன்றோ?

**சுதே:** அண்ணன் மீதுள்ள பாசத்தின் மேலது பெண்மையின் பெருமை என்பதை ஒருகணம் மறந்ததால் எழுந்த நிகழ்வதற்காக மனமிக வருந்தி அழுது புலம்பும் அபலையுமானேன். அண்ணனுக்குரிய தண்டனை தருவோம் கவலை தவிர்ப்பாய்! கண்ணீர் துடைப்பாய்!

**சௌ:** அண்ணனுக்கான அரசரின் தண்டனை அபலை என் இழிவுக்கு ஆறுதலாகுமா? ஆணவத்தால் எனை அவமானத்திலாழ்த்திய அவனுயிர் அகல்வதைத் தடுத்திட முடியா! உயிரற்ற அவனுடல் எரிவது கண்டே என் மனம் ஆறும்! அதன் பின்னேதான் என்னுடல் குளித்து



புத்தாடை தரிப்பேன்! இதுவே உறுதி!

**சுதே:** இத்தனை கொடிய வார்த்தைகள் கூறுதல் உந்தனுக்காகுமா? அண்ணனை மன்னித்து ஆறுதலடைவாய்!

**சௌ:** அவமானமெனுமென் ஆடைகளனைத்தையும் அரசியார் அணிந்திட முடியுமா? கூறுக! உங்கள் அண்ணனாம் கீசகன் உடைத்த உதடுகள் உதிர்க்கும் உதிரத்தை உங்கள் ஆதரத்திலேற்றிட ஆயத்தமானால் அவ்வரக்கனை மறந்து மன்னித்திடுவேன். அவமானச் சின்னங்கள் இரண்டையும் ஏற்றிட முடியாதென்றால் ஆயத்தமாகுவீர் நாளை உதயம் நல்லதோர் தீர்ப்பினை நமனே அளிப்பான்!

**சுதே:** வேண்டாம் அம்மா சௌரந்தரியே சாபமதை அளித்து சிலைதான் தன்னை சாய்த்திட வேண்டாம்!

-காட்சி மாற்றம்-

**சமயலறையில் வல்லபன் (பீமன்) அயர்ந்து தூங்குகிறான். சௌரந்தரி (திரௌபதி) அங்கே வருகிறாள்!**

**சௌ:** நிம்மதியான நீண்ட உறக்கம்! மல்யுத்தத்தில் வல்லவரான மங்காப்புகழுடை மன்னவரே! உம் மனைவியாளிங்கு மான மிழந்து, ஊனும் உறக்கமும் வெறுத்தே ஒதுக்கி உருவும் குலைந்து உறுதியறுந்து உழலும் வேளையில் உலகையே மறந்து உறங்குதல் நன்றோ? உயிரையே மறந்த வெறுமுடல்தானோ விழுந்துளதிங்கே?

**வல்:** (கண் விழித்தெழுந்து) அண்ணனவன் எனைத் தடுத்திடாவிட்டால் விண்ணுலகுக் கவனை விரட்டியிருப்பேன்!

**சௌ:** அண்ணனானவர் ஆவதையெல்லாம் தடுப்பதில் வல்லவர். அளவிட முடியா அவமானத்தை அடுக்கடுக்காக அவரே சுமக்கிறார். எத்தனை காலம் இழிவினை ஏற்பது? என்னுடை உயிரினை மாய்ப்பதைத் தவிர இன்னுமோர் உபாயம் எனக்கெழவில்லை! கெடுமதியானனாம் கீசகன் நாளை கதிரவனுதயம் காண விடுத்தால் மாலையில் கதிரவன் மறைவதைக் காண மாதிவள் மண்ணில் நிலைத்திடாதொழிவாள்! இதுவே என் உறுதி! இதுவே என் இறுதி!

**வல்:** பாஞ்சாலி! பாஞ்சாலி! சொல்வதை ஒருமுறை செவியினிலேற்று...!

**சௌ:** நீங்கள் சொல்வதென் செவிகளில் சேரா! இன்று நான் சொல்வதே இறுதியானது. அக்கினிக் குண்டம் அனல் விட்டெரிய அதனையே சாட்சியாய் ஏற்ற என் கணவர் ஐவரும் என்னைக் காப்பதற்கன்றே உறுதியும் பூண்டனர். அன்றவர் அளித்த உறுதி வார்த்தைகள் அக்கினிதனிலே அழிந்து போனதோ?

**வல்:** என்னுடை வலிமையும் வீரமும் தீரமும் வெட்கித் தலைதனைக் குனிந்திட வைக்குதே! சூதாடு சபையினில் சூழுரை சொன்னதை மறந்திடலாமா? துரியோதனனது தொடையினை உடைக்கவும் துச்சாதனனது மார்பினைப் பிளக்கவும் பாயும் செங்குருதியைக் கைகளிலேந்தியுன் குழலினில் பூசியே சபதம் முடிக்கவும் ஆணையிட்டேனதை மறந்திடலாமா? அஞ்ஞாத வாசத்தில் நாமிருக்கும் நிலை துரியன் அறிந்தால் துன்பம் தொடருமே! அமைதியைக் காத்திட அண்ணனின் அறிவுரை இதனாலன்றோ என்பதை அறிவாய்!

**சௌ:** நஞ்செனப் படரும் நலிவுறு இழிவினை நயமெனக்கருதி நிலை பெறத் துணிவோ?

**வல்:** நாளைப் பகலினை நஞ்சன் கீசகன் காண்பது நடந்திடலாகாதென நீ நயம்பட உரைத்தால் அதுவே நடக்கும். அவனிடம் போ நீ! ஆசை வார்த்தைகள் அளவுடன் கூறு! ஆடலரங்கினை அருகிணைந்திருக்கும் அறையினில் அவனை தனிமையில் வரச் சொல். கீசகன் முடிவினைக் கடுகிட அதே இடம் எவருமே அறியா அமைதியினுறைவிடம்.

-காட்சி மாற்றம்-

**சௌரந்தரி பாடியவண்ணம் பூங்காவில் உலவ கீசகன் அங்கு வருகிறான்.**

பாடல்:

**கண்களி லெந்தன் கண்ணாளனுருவம்
கண்ணாடி போலே பதிந்திடுதே
மண் மீதில் நானொரு பாக்யசாலியே
விண்ணவர் போலினி வாழ்வினதாகுமே!**

**கீசக:** பாடலை ஏனோ பாதியில் நிறுத்தினாய்?

**சௌ:** வீரனே இந்த ஏழையின் வாழ்வினில் வேதனைப் புயலை ஏன் வீசிடத் துணிந்தாய்? உன்னிடம் அடங்காப் பாசமுண்டுண்மை! ஒற்றர்கள் யாரும் உற்றுணர்வாரெனில் எந்தன் உயிரினை என் மணவாளர்கள் எமனுலகுக்கே அனுப்பிடத் துணிவரே!

**கீசக:** அவர்கள் மீதுள்ள அச்சம் தவிர்ப்பாய்! அமரிட வந்தால் அவர்களை அழித்தே அமரருலகினை உன் அழகினுக் களிப்பேன்!

**சௌ:** எந்தனுள்ளம் உந்தன் சொந்தம் என்றே என்றும் ஏங்குவதறிவாய்! எவரும் அறியா இரகசியமாய் எம துறவுகள் என்றும் இருந்திடல் வேண்டும்! இதுவே எந்தன் வேண்டுகோளாகும்.

**கீசக:** உந்தனை எந்தன் சொந்தமதாக்கிட எத்தனை நிபந்தனை நீ விதித்தாலும் அத்தனை விதியினை அமைவுடன் ஏற்பேன்!

**சௌ:** நல்லது நண்பரே! இன்று நள்ளிரவினில் நாட்டிய அரங்கிடை அமைந்த மாளிகை அருகினை அணித்தே வந்து சேர்ந்திடுக! வானுயர் இன்ப வாழ்வினை அளிக்க காத்திருப்பேனங்குன் வரவினைப் பார்த்தே!

-காட்சி மாற்றம்-

**நாட்டிய அரங்கு- பீமன் பெண்போல் முக்காடிட்டு மஞ்சத்தில் படுத்திருக்க திரௌபதி தூண் ஒன்றில் மறைந்து நிற்கிறாள். பிருகன்னளை உருவில் அர்ச்சுனன் தாளவாத்தியம் வாசித்துக்கொண்டிருக்கும்போது கீசகன் வருகிறான்.**

**கீசக:** இருளுடன் இணைந்த தனிமையின் இனிமை, தனித்துவமான தேர்வது வாகுமே!

**சௌ:** அப்போதும் கைகளைக் கட்டிய தாரோ?

**கீசக:** கைகள் மட்டுமா...? கருத்துடன் கலந்தே உன்னை நான் அணைக்கக் காத்துக் கிடந்தேன்..... கடுகளவேனும் இனித்தரிப்பேனா...? இதோ வந்து விட்டேன் இன்பத்திருவே..!

**பீமன்:** உந்தனை அணைக்கவும் உன் அங்கம் உடைக்கவும் நான் காத்திருந்தேனடா கயவனே கீசகா!

**இருவருக்குமிடையில் மல்யுத்தம் நடப்பதை திரௌபதி பார்த்திருக்க வெளியே சப்தங்களேதும் கேட்காதிருக்க அர்ச்சுனன் தாள வாத்தியத்தை பலமாக வாசிக்கிறான். கீசகனை பீமன் கொலை செய்யும்போது வாத்தியத்தின் தோலையும் அர்ச்சுனன் உடைக்கிறான்.**

**பீமன்:** பாஞ்சாலி உனக்கு நான் அளித்த வாக்கினை உறுதியாக்கினேன். நாளையப் பொழுதது நலமுடன் மலரும். கதிரவன் உதயம் கீசகன் காணான்!

பின்னணிப்பாடல்:

**அனலிடைப் பிறந்ததோர் அரிவையை அடைந்திட
அளவிட முடியா ஆசையில் புதைந்ததோர்
காமுகன் கீசகன் கதை அழிந்தொழிந்ததால்
கற்புடைத்திரு மகள் கவலையுமொழிந்தனள்!**

-காட்சி மாற்றம்-

**அஸ்தினாபுரம்- பீஷ்மரின் மாளிகை- விளக்குகள் ஒளிபெருக்கிக் கொண்டுள்ளன. சகுனி வருகிறான்.**

**சகுனி:** ஒளி அலங்காரம் எங்கும் இலங்கியே புத்தெழில் பூக்கும் புதுமை தோணுதே!

**பீஷ்:** காந்தார நாட்டின் அதிபதியாரே அன்புடன் வாழ்த்தி வரவேற்கின்றேன். இவ்வாசனத்தில் அமர்ந்திட வேண்டும்!

**சகுனி:** பெரியவர் தாங்கள் அமர்ந்த பின்னர் தான் சிறியவனான நான் இருப்பது நலமாம்! தங்கை காந்தாரி மாளிகை சென்று நான் திரும்பிடும்போதே தீப அலங்கார வரிசைகள் என்னை வாவென்றழைத்தன. தீபாவளி எனும் தீபத்திருநாள் இன்றோ என்று நான் எண்ணியேமாந்தேன்!

**பீஷ்:** காரிருள் என் மன ஆட்சியிலிருந்தது. ஒளியினைக் காணும் ஆசையும் வலுத்தது. இவ்வொளி என்றும் நிலை நிற்காது. மீண்டுமிம் மாளிகை முழு இருள் சூழும் வேளையும் நெருங்கி வருதலை உணர்கிறேன். இடை நிலைக் கால வேளையில் இந்த ஒளியும் உகந்ததோர் அழகதாயில்லையா..? இந்த ஒளி நிலை என்றும் தொடர்ந்திட வேண்டுமே என்றுதான் என் மனம் ஏங்குதே!

-காட்சி மாற்றம்-

**துரியோதனனிடம் கர்ணன் வருகிறான்.**

**கர்:** நண்பா! உன் நெஞ்சினை வாட்டிடும் வேதனை என்னவென்றுதான் உரைத்திடுவாயா? பாண்டவர் மறைந்து கரந்துறை காலக் கெடு மறைவதுதான் கவலையின் குறியா? கவலை வேண்டாம்! அவரினை ஒழித்திட நம் புஜபலமுண்டு!

**துரி:** பாண்டவர் அஞ்ஞாத வாசத்திலிருப்பதை பார்த்திட முடியா ஒற்றர்கள் பற்றியே நான் படும் கவலை! போர் முனைபற்றி நான் பயந்தவனல்ல. நகுலனும் தம்பி சகாதேவனிருவரும் சிறு பிள்ளைகள்தான். என் தம்பியர் தொண்ணூற்றொன்பது பேரும் அவ்விருவரையும் பந்தாடிடுவர்! நீதியை நேர்மையை நிறுத்தளவெடுப்பதில் யுதிஷ்டிரர் காலம் வீணாய் ஒழிந்திடும். பதின்மூன்றாண்டுகள் படைக்கலம் தொடாத பீமனால் என்னை வீழ்த்தவா முடியும்? அர்ச்சுனன் தன்னை அடியோடு சாய்த்திடும் அபாரத் திறமை உன்னிடமிருக்க போரினைக் கண்டு நான் பயங்கொள்ள வேண்டுமா? ஐவருக்கபயம் அளித்தவர் தம்மையும் அவரொளிந்திருக்கும் இருப்பிடமதனையும் அறிய முடியாத ஒற்றர்களால் இந்நாட்டினை நலமுறக் காத்திட முடியுமா? இதுவே எந்தனை வாட்டிடும் வேதனை!

**துச்சாதனன் வருகிறான்.**

**கர்:** சேதி ஏதும் நீ கொண்டு வந்தாயோ?

**துச்:** மத்சய நாட்டின் வீரத் தளபதி விபரீதமாகக் கொலையுண்டானென மன்னவர்க்கிப்போ செய்தியும் வந்தது!

**கர்:** கீசக வீரன் கொலையுண்டானா? கற்பனை செய்யவே கூடியதாக முடியாதுளதே! கீசகன் வதைக்கு கண்ணனின் அண்ணன் பலராமன் தானும் பிதாமகர் பீஷ்மர் பெரியவருடனும் குரு துரோணாச்சாரியார் மற்றும் உன்னால்-என்னால்- பீமனால் முடியும். இவர்களில் எவரை இக்கொலைக்காக எண்ணுதல் முடியும்?

**துரி:** பீமனே காரணம்! கீசகன் வதைக்கு வேறெவர் பொறுப்பையும் பொருத்திட முடியா! அஞ்ஞாத வாசத்திலிருக்கும் பாண்டவர் மத்சய நாட்டிலே உறைவது உறுதி! விராட மாமன்னவன் அடைக்கலம் கொடுத்து ஐவரைக் காத்துள்ளான். உரிய தண்டனை அவனுக்கு வழங்கிட வேண்டுவதே இப்போது வெளிப்படை!

**கர்:** போருக்குப் பின் நிற்கும் பெருங் கோழை நானல்ல. தாக்குதல் தொடங்கிட உன் தந்தையின் சம்மதம் தான் பெற வேண்டும். விதுரரும் பிதாமகர் பீஷ்மரும் இதற்கு இடையூறாக இருப்பரே என்பதை நினைப்பதுதான் எனை வாட்டுவதறிவாய்!

**துரி:** விதுரரும் துரோணரும் பிதாமகர் பீஷ்மரும் அரண்மனை உப்பையே உண்பவரென்பதை அறிந்தபின் தானும் அவர்களைப் பற்றி நீ கலங்குவதேனோ? அரசவர் தம்மையே அவதார புருஷராய்க் கருதிடுமவரெலாம் ஆணையை மீறிட துணியவே மாட்டார்.

**கர்:** அப்போ அவர்கள் அரசரின் பொம்மைகள்..!

**துரி:** ஆமாம் அரசரோ என் கையிலிருப்பவர்..!

-காட்சி மாற்றம்-

**சகுனியுடன் துரியோதனன், கர்ணன், துச்சாதனன்.**

**சகுனி:** உன் தந்தையைப் பற்றி நீ நம்புதல் நலமல்ல.

**துரி:** அப்போ பாண்டவர் அஞ்ஞாத வாசத்தின் உறைவிடமதனை உடைப்பதில் முயலுதல் முறையற்றதான செயலாகிடுமா..?

**சகுனி:** அஞ்ஞாத வாசத்தின் போதிலே அவர்களைக் காண்பதை தவிர்ப்பதால் கருதிய எண்ணம் கைகூடி வருமா?

**கர்:** சுற்றி வளைத்துங்கள் சொற்களைத் தூவுதல் விடுத்துடன் நேரிடைக்கருத்தினைக் கூறி விளக்குக மாமா!

**சகுனி:** உண்மையைத் தெளிவாய் உரைத்திடும் காலம் இதுவல்ல கர்ணா! பிதாமகர் பீஷ்மர் முதலாம் குலகுரு யாவரும் என்றும் உரைப்பது உண்மையே! ஆனாலும் அவர் வாயது என்றும் திறப்பதேயில்லை. அறிவுடையோரும் முனிபுங்கவரும் புகல்வது உண்மையே! துரியோதனனின் வெற்றியின் பின்னணி உன்னிரு தோள் வலி உறைவதும் உண்மையே! வில்லினில் நாணினை ஏற்றிடு என்று நான் ஆணையிட்டழைக்கப் போகிறேன் யானுனை! துரியோதனனின் ஊகமும் சரியே! மத்சய நாட்டினை போர் முனைக் கழைப்பதே நிச்சயமான நல்லதோர் நடைமுறை! அடைக்கலம் தந்தவன் அவதியிலிருப்பதை ஐவரும் பார்த்து வாழாதிருப்பரோ? வெற்றியோ தோல்வியோ பாண்டவர் பெற்றதும், பந்தயச் சொற்படி பன்னிரண்டாண்டுகள் கானகம் ஏகுவர்!

**துரி:** மாமாவின் வாழ்த்துடன் மன்னரை அணுகுவேன்! மத்சய நாட்டுடன் போர் தொடுத்தேகிட மன்னவர் ஆணையைப் பெற்றிடச் செல்கிறேன்!

**சகுனி:** ஆத்திரப் படாமல் அமைதியாய் நான் தரும் நயவுரை கேட்பாய்! கரந்துறை வாழ்க்கையைக் காண வேதானொரு போர் தொடுத்தேகுதல் தீதெனக் கூறி தடுத்திட முனைவர் விதுரரும் பீஷ்மரும்.

**துரி:** மன்னவர் ஆணையை தவிர்த்துமே படையினை நடத்தினாலென்ன?

**சகுனி:** அது பெரும் பிழையடா அருமருமகனே! நாளை இந்நாட்டினை ஆள்பவன் நீயடா! மன்னவன் ஆணையை ஏற்றிடலன்றி நீ படை நடத்தினாயெனில் பழியது தான் வரும். மத்சய நாட்டினில் கீசகன் வதையினால் பாதுகாப்பரணெலாம் பிழைத்தது என்றொரு பொய்யினைக் கூறு. நாட்டின் பாது காப்புக்காகவே அஸ்தினாபுரத்தின் படையின் உதவியை மத்சய தேசம் வேண்டுவதாக விளக்கம் அளித்திடு. வேறெவரும் இதைத் தடுத்திட முடியார்.

-காட்சி மாற்றம்-

**திருதராட்டிரர் அரண்மனையில் பீஷ்மரும் துரியோதனனும்.**

**பீஷ்ம:** மத்சய நாடு எம் நட்பு நாடல்லவா?

**துரி:** நட்பு நாடென்பதால் நலிவுறும் நிலையினில் தளர்வுறும் நாட்டினை உதவி புரிந்திட நாடினோம் தாத்தா! திரிதேவ நாட்டின் சுகர்ண மன்னவன் மத்சய நாட்டை தன்னடிப்படுத்திட படை நடத்திடவே தயாராகி விட்டதாய் தகவல் தெரிந்தது. அச்சிறு நாட்டினை அஸ்தினாபுரத்துடன் இணைத்திடில் சுகர்ணனின் எண்ணம் தூள் தூளாகுமே!

**திருத:** துரியோதனனின் கூற்றும் சரியே!

**துரி:** வழி வழி வந்த வரன்முறை நாட்டினை ஆட்சி புரிவது ஏற்புடைத்தாகுமா? நாடுகள் பலதையும் வென்றுமே ஆள்வது சத்திரியர்க்குறு இலட்சணமாகுமே!

**பீஷ்ம:** சத்திரிய தர்மம் அத்துடன் மட்டுமே- அடங்குவதல்லவே?

**திருத:** துரியோதனன் தரு திட்டமெதனையும் திட்டவட்டமாய்த் தடுப்பதே நலமென தீர்மானித்தும் தீர்த்தும் முடிந்ததா?

**பீஷ்ம:** அரக்கு மாளிகையிலொரு அழிவுத் திட்டம் அரங்கேற்றியதில் எந்தன் இசைவினை ஏற்றதுமுண்டா? சதுரங்க ஆட்டத்தில் பந்தய நிபந்தனை எந்தனைக் கேட்டா -ஏற்பாடு நடந்தது? எம் குலக் கொடியாம் திரௌபதி துகிலினை என்னிடம் கேட்டா அகற்றிடத் துணிந்தாய்? நாட்டின் நலனில் நல்ல பலன்தரு எத்தனை திட்டத்தை என்முன் வைத்தாய்? சதுரங்க ஆட்டம் நடந்த பின் நானென் தூக்கம் துறந்தேன். துயின்றிடும்போது கனவினிலெந்தன் முன்னோர் வந்தென்முன் நியாயம் கேட்டால் நேர்மையுடன் நான் பதில்தர முடியுமா? மத்சய நாட்டினை உன்னடிப் படுத்திட படைதனை நடத்திட நீ துணிந்திட்டாய்? அஸ்தினாபுரத்தின் ஆட்சிச் சின்ன அடிமை நானன்றோ? ஆட்சிச் சின்னம் எங்கு சென்றாலும் அங்குதான் செல்வதிவ் வடிமையின் கடமை!

பின்னணிப் பாடல்:

**பிதாமகர் பீஷ்மரின் வார்த்தையின் விளக்கம்
பாதக நிழலுரு துரியனின் செவிகளில்
போதனையாகச் சேர்வதோ அரிதாம்!
தீதே அவனுரு! தீதே அவன் வழி!
தீமையின் செயலே துரியனின் சாயல்!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(PRO/94/94)



அருள் ஜுவலர்ஸ்




4 3 6 3 3 1

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11



Kala




JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

4 3 3 6 8 6

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

## சின்னத்தம்பி உன்ன நம்பி....

அறிமுகமானபோதே அசாத்தியத் திறமையால் கிரிக்கெட் உலகின் கவனத்தை தன்மீது திருப்பியவர் சச்சின் டெண்டுல்கர். இடைக்கிடையே சிறு தளர்வு. டெண்டுல்கரின் திறமை மங்கப் போகிறதோ என்று அவரது இரசிகர்களுக்கு கவலை. அந்தக் கவலையை தனது சமீபகால ஆட்டங்களால் சத்தமாய் துடைத்து வருகிறார் சச்சின். மேற்கிந்திய தீவு அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 179 ரன்களை குவித்திருந்தார். மேற்கிந்திய தீவுக்கும் இந்திய அணிக்கும் இடையிலான சமீப கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணியை தூக்கி நிறுத்திய பெருமையை டெண்டுல்கர் தனதாக்கிக்கொண்டுவிட்டார். இந்தியாவும், கிரிக்கெட் உலகும் டெண்டுல்கரிடம் இருந்து இன்னும் நிறைய எதிர்பார்க்கிறது. நம்பிக்கையோடு கவனிக்கிறது. இளம்புயல் தொடர்ந்து சளைக்காமல் வீசி அந்த நம்பிக்கையை நிறைவேற்றுமா? கிரிக்கெட்டில் சகல துறை ஆட்டக்காரராக விளங்கும் டெண்டுல்கரின் தோளில் பொறுப்புக்கள் அதிகம். இந்திய அணியின் தலைமைப் பொறுப்பும் அவரை எதிர்காலத்தில் தேடிவரும்!



## நீரைக் கிழிப்பவன்

பெயர் அலெக்ஸாண்டர் போபொவ். வயது-25. 50-100 மீற்றர் தூரத்தை நீரில் கிழித்துச் செல்லும் வேகமான நீச்சல் வீரர். 1992 பார்சிலோனாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் இவர்தான் சாம்பியன்.

வாரமலர் தினமுரசு

## சுற்றுவதில் சூரன்

இது மாயமுமில்லை, மந்திரமுமில்லை. மனித சாதனை! வாகன டயர் போன்ற தோற்றத்தோடு புதிய வாகனம் ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்கள். மோட்டார் சைக்கிளில் இருப்பது மாதிரி உள்ளே அமர்ந்து செலுத்தவேண்டியதுதான். ஆனால் சில்லு உருளும்போது உள்ளே இருப்பவரும் சுழன்று கொண்டிருப்பார். படத்தில் இருப்பவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பாதாள மோட்டார் சைக்கிள் ஓட்டி நக்கி சாபா தெஸ். பாதாள ஓட்டத்தில் பயிற்சி இருப்பதால்தான் இந்த புதிய வண்டியை வீதியில் செலுத்தி சாகசம் செய்ய முடிகிறது.



உள்ளே சுற்றினாலும் வேகம் மணிக்கு 65 மைல்!

## சத்துமாத்து



விபூதியை வாய் வழியாக ஊதுகிறார் பாருங்கள் போலிச்சாமி பிரேமானந்தா. விபூதி லட்டுமா சிவலிங்கமும் வாய் வழியாக வந்து பொத்தென்று விழுந்ததாம். எல்லாம் 'மஜிக்' வித்தைதான். பாவம், அப்பாவிகள் பலர் அருள் பெற்ற மகிமை என்று தவறுக்கணக்கும் போட்டுவிட்டார்கள்.
இந்தப் போலிச் சாமிமார்கள் உலகில் ஏற்கனவே இருக்கும் பொருட்களை நடிப்பாலோ வாயாலும், கையாலும் எடுத்துத் தருகிறார்கள். புதிதாக ஏதாவது பொருட்களை கண்டுபிடித்து உற்பத்தி செய்து தந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஏமாறுகிறவர்கள் யோசித்துப் பார்க்கலாம் அல்லவா? அல்லது குறைந்த பட்சம் விபூதிக்குப் பதிலாக, வீட்டில் வைத்திருக்க பெரிய விளக்கு, கைக்கடிகாரத்திற்கு பதிலாக பெரிய கார் என்று வரவழைக்காட்டுவார்களா இந்தப் போலிச் சாமிகள்? நாம் உண்மையான ஆன்மீகவாதிகளை குறைசொல்லவில்லை. குறளி வித்தை கோலாகலத்தைச் செய்யும் போலிகளையே சுட்டிக்காட்டுகிறோம்.

## அடி! மடோனா கையைத் தட்டு



கவர்ச்சிப் பாடகி மடோனாவின் சகோதரர் குடிபோதையில் காரைச் செலுத்தி பொலிசில் வசமாக மாட்டிக் கொண்டார். மாட்டியவுடன் →

→ மடோனாவின் பெயரைச் சொல்லியிருக்கிறார். பிழையும் செய்துவிட்டு பிரபல புள்ளிகளது பெயரைச் சொல்லி தப்பிக்க முயலும் பழக்கம் அமெரிக்காவிலும் இருக்கிறது. ஆனால் மடோனா சகோதரரை விடுவிக்க மறுத்துவிட்டார். மடோனா கையைத் தட்டு! எதற்கு? நேர்மையை பாராட்டிப் பாடத்தான்!